# தமிழரசு

16-3-1982 7







டில்லியில் குடியரசு நாள் விழாவில்
தமிழகக் கலைக் குழு
(26-1-1982)

அம்பத்தூர் குடிநீர்த் திட்டக் கால்கோள் விழா
(28.2.1982)







# தமிழ்நாடு அரசின் 1982-83ஆம் ஆண்டு

# நிதி நிலை அறிக்கை

**தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1982-83ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்து 1982ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2013 துன்மதி மாசித் திங்கள் 14ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.**


தமிழரசு 16-3-1982 துன்மதி—பங்குனி 3
திருவள்ளுவர் ஆண்டு 2013 மலர்: 12 இதழ்: 18


மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1981-82ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும் 1982-83ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

''வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.''

என்பது வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையார் அரசு ஆட்சிப் புரிவோர்க்கு வழங்கிய அறிவுரையாகும். பொருள் ஈட்டும் வழிவகைகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளங்களை உருவாக்கி, நாட்டில் ஏற்படும் இடையூறுகளை ஆராய்ந்தறிந்து, அவற்றை நீக்கும் வல்லமை பெற்றவனே அரசுவினையை ஆற்ற வேண்டும் என்பது குறளாசிரியர் உணர்த்தும் கருத்துரையாகும். வள்ளுவனார் வகுத்துத்தந்த அறநெறிக் கருத்துரையின்படி, தமிழக அரசிற்குப் பொருள் வருவதற்கான வருவாய் வழிகளைப் பெருக்கி, அவற்றின் துணைகொண்டு தமிழ்நாட்டின் வளங்களைப் பல்வேறு வகைகளிலும் உருவாக்கி, அவற்றின் உதவியோடு நாட்டில் எதிர்ப்படும் இடையூறுகளை ஆராய்ந்து அறிந்து நீக்கி மக்களுக்கு நல்வாழ்வு நல்கிடும் நோக்கத்தை இன்றைய அரசு இயன்ற வரையில் நிறைவேற்றி வருகிறது. இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான், 1981–82ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1982–83ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடுகளையும் அவையின் ஆய்வுக்கு அளிக்க முற்பட்டுள்ளேன்.

3. தமிழ்நாடு, இந்தியாவின் நல இழப்புகளில் பங்குபெறும் பகுதிகளில் ஒன்றாகவும், இந்தியாவின் வளர்ச்சிக்கு வலிவூட்டும் பகுதிகளில் ஒன்றாகவும் இருந்து வருகின்றது. இந்தியாவைப் பாதிக்கின்ற எந்த ஒரு பிரச்சினையும் தமிழகத்தையும் பாதிக்கின்றது. எடுத்துக்காட்டாக பணவீக்கம், இன்றியமையாப் பண்டங்களின் பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், ஏழ்மை நிலை, எரி பொருள்கள், விவசாய இடுபொருள்கள் ஆகியவற்றின் விலை உயர்வு, இரயில்வே போக்குவரத்துக் கட்டணங்களின் உயர்வு போன்றவைகள் அகில இந்தியாவை எந்த அளவுக்குப் பாதிக்கின்றனவோ, அந்த அளவுக்குத் தமிழகத்தையும் பாதிக்கவே செய்கின்றன. மாநில மக்கள் தங்களுடைய குறைபாடுகளைக் களையவும், தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் பெரும்பாலும் மாநில அரசையே எதிர்பார்க்கிறார்கள். மாநில அரசுக்கு, மக்களை நல்வாழ்வில் வாழவைப்பதற்கான பொறுப்புக்கள் அதிகமாக அமைந்திருந்தபோதிலும், அந்தப் பொறுப்புக்களைச் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றுவதற்கான பொருளாதார வசதிகளும் வாய்ப்புகளும், அதிகார அளவுகளும் குறைவாகவே அமைந்திருக்கின்றன. உடல் உறுப்புக்களெல்லாம் வலிவாக இருந்தால்தான், உடல் வலிவாக அமையும். அதுபோல இந்தியாவிலுள்ள மாநிலங்களெல்லாம் வலிவுடையனவாகவும், வளமுடையனவாகவும், தேவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்கின்ற வாய்ப்பு வசதியுடையனவாகவும் திகழ்ந்தால்தான், இந்தியா வலிவோடும், வளமோடும் விளங்க முடியும். ஆகவேதான் மாநிலங்களின் நிதி ஆதாரங்களையும், அதிகார அளவுகளையும் பெருக்குவதற்கான வழிவகைகளை மத்திய அரசு காணவேண்டும் என்ற கொள்கையை இந்த அவையில் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தபோது இந்தக் கருத்தை இந்த அவையில் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்,

"நமக்கிருக்கிற கவலை எல்லாம் தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது, மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிமைகளையெல்லாம் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால், வாதத்திற்கு ஏற்றது; அரசியலுக்கு நல்லது; காரியத்துக்கும் உகந்தது" என்று குறிப்பிட்டது உணரத்தக்கதாகும்.

**4.** தேசியப் பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில் இம் மாநிலத்தின் வளர்ச்சி குறித்து, இந்த அரசு கொண்டுள்ள வேணவாக்களுக்கும் குறிக்கோள்களுக்கும் இந்த நிதி நிலை அறிக்கையில் குரல் கொடுக்க முயன்றுள்ளேன். பொருளாதாரத்தின் சில முக்கியமான துறைகளில் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பான நிலையில் இந் நாடு உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, பாமர மக்கள், ஏழை எளியவர்கள் ஆகியோரின் நிலையை உயர்த்துவதில் இவ்வரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது. இக் குறிக்கோளை எய்த மத்திய அரசு மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் மத்திய அரசுக்கு இம்மாநில அரசு தன்னாலான உதவிகள் அனைத்தையும் செய்ய எப்போதும் ஆயத்தமாயுள்ளது. அண்மையில் பிரதம அமைச்சர் அவர்கள் அறிவித்த புதிய 20 அம்சத் திட்டம், சமுதாயத்தில் நலிந்த மக்கள், ஏழை எளியவர்கள் ஏற்றமடையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இத் திட்டத்திற்கு இம் மாநில அரசு தனது உளமார்ந்த ஆதரவைத் தெரிவிப்பதுடன், அதனை வெற்றிகரமாகச் செயற்படுத்த, தன்னாலானதையெல்லாம் செய்யும். நான் முன்னர் விவரமாக தெரிவித்துள்ள அனைத்தையும் கருத்தில் கொண்டு, இம் மாநிலத்தின் வளர்ச்சிக்கான பொருளாதார, சமூக, பண்பாட்டு நோக்கங்களையும் பிற நோக்கங்கள் பலவற்றையும் நிறைவு செய்யும் வகையில் அடுத்த நிதி ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை உருவாக்கியுள்ளேன்.

### உணவு நிலைமை

**5.** சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டம் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டபோது, இம் மாநிலம் கடுமையான வறட்சியைச் சந்திக்க வேண்டியிருந்தது. கடுமையான தண்ணீர் பற்றாக் குறையினால் வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால், 1981—82ஆம் ஆண்டில் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் உற்பத்தி முறையே 60 இலட்சம் டன் (அரிசியாக), 22·80 இலட்சம் டன், 3·30 இலட்சம் டன் அளவில்தான் இருக்கக் கூடும். ஆனால், 1982—83ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 68 இலட்சம் டன் (அரிசியாக), சிறு தானியங்கள் உற்பத்தி 23·50 இலட்சம் டன், பயறு வகைகள் உற்பத்தி 4·80 இலட்சம் டன் அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொது விநியோக முறையைத் திறமையாகச் செயல்படுத்தியதன் மூலம் அரிசி, ஏனைய இன்றியமையாப் பொருள்களின் வெளி அங்காடி விலை உயர்வு கட்டுப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டில், 1981 டிசம்பர் வரை, இம் மாநிலத்தின் நகர்ப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு 6·7 இலட்சம் டன் அரிசி வழங்கப்பட்டது. உணவு தானியங்களையும் ஏனைய இன்றியமையாப் பொருள்களையும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவது, எவ்வளவு பயனுள்ள ஏற்பாடு என்பதை இது தெளிவாகப் புலப்படுத்தியது.

**6** பல்வேறு நியாய விலைக் கடைகளில் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள உணவுப் பங்கீட்டு குடும்ப



அட்டைகள், 1975ல் வீடு வீடாகச் சென்று கணக்கு எடுத்த பின்னர் வழங்கப்பட்டவையாகும். உணவுப் பங்கீட்டு குடும்ப அட்டைகள் வழங்கிப் பல ஆண்டுகள் ஆகி விட்டன. எனவே, பொதுவான கணக்கெடுப்பு செய்யப்பட்ட பிறகு, புதிய அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இப் பணி, இந்த ஆண்டின் முற்பகுதியில் செய்து முடிக்கப்படும்.

**7.** இன்றியமையாப் பொருட்களை, குறிப்பாக அரிசியை, பொது விநியோக முறையின் மூலம் வழங்கும் போது, நுகர்வோர் அரசிடமிருந்து பெருமளவு உதவித் தொகை பெறுகின்றனர். அரிசியின் அடக்கவிலை உயர்வாக இருந்தபோதிலும், நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டு விற்பனை விலையை "வேண்டுமென்றே குறைவாக வைத்து, உணவுப் பொருள் வழங்கு நிறுவனம் விற்பனையை மேற்கொண்டுள்ளது. குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதில், அரசு பெரும் நிதிச் சுமையை ஏற்பதை உணர்ந்து, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக, வீடுதோறும் தகவல் சேகரிக்கும் சமயத்தில், சரியான தகவல்களை அளிப்பது, தங்கள் சமூகப் பொறுப்பு என்பதை மக்கள் உணர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### வேளாண்மை

**8.** இம் மாநிலத்தில் வாழும் மக்கள் பெரும்பான்மையோர், வேளாண்மையை நம்பி வாழ்பவர்கள். எனவே, இம் மாநிலத்தில் நிறைவேற்றப்படும் வளர்ச்சித் திட்டம் எதையும் இந்த அடிப்படை உண்மையைக் கருத்திற் கொண்டே வகுக்க வேண்டும். வேளாண்மைத் தொழில் மேம்பாட்டிற்கு அவசர முன்னுரிமை அளிப்பதே இம் மாநில அரசின் தலையாய கொள்கையாகும். உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்திற்கு, நல்ல தரமான வித்துக்கள் உற்பத்தி செய்வது மிக அவசியம். தரமான வித்துக்களின் உற்பத்தி, அடிப்படை வித்துக்கள் உற்பத்தி ஆவதைப் பொறுத்துள்ளது. அடிப்படை வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்க, அடுத்த நிதி ஆண்டில் ரூ. 80 இலட்சம் இறுதிச் செலவில் ஒவ்வொன்றும் 200 ஏக்கர் பரப்பில் விதைப் பண்ணைகள் இரண்டு அமைக்கப்படும். தரமான விதைகள் உற்பத்திக்கு அவற்றை உரியவாறு பதப்படுத்தல் முக்கியம். விதை பதப்படுத்தும் பெரிய பிரிவுகள் ஏழும், சிறிய பிரிவுகள் 28-ம் தற்போது இயங்குகின்றன. விதைகளைப் பதப்படுத்தும் வசதியைப் பெருக்க ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அடுத்த ஆண்டில் புதிய பிரிவுகள் மூன்று தொடங்கப்படும்.

**9.** இம்மாநிலத்தில் குறைந்த அளவிலேயே உள்ள நீர்



ஆதாரங்களிலிருந்து பெருமளவுப் பயன் பெறுவதற்கு, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த மேம்பாடான நடைமுறைகள் அவசியமாகும். இதனை எய்த, முக்கிய ஆயக்கட்டுப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காவிரி, பெரியாறு – வைகை பாசன ஆயக்கட்டுப் பகுதிகளில் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தின் வேறு சில பகுதிகளில் இப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

**10.** உழவர்கள் தங்களுடைய விளைபொருள்களை நட்டப்படும் விலைக்கு விற்பதைத் தவிர்க்க, அவற்றை ஈடுகாட்டி எளிதில் முன்பணம் பெறுவதற்கு அறிவியல் முறைகளுக்கேற்ற சேமிப்புக் கிடங்கு வசதிகள் இருந்தால்தான் உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்க இயலும். இதற்காக, கிராமப் பகுதிகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும், கிராமக் கிடங்குகள் கட்டுவது மிகவும் அவசியமாகும். மத்திய அரசின் நிதி உதவியுடன் அத்தகைய கிடங்குகள் 62ஐ ரூ. 62 இலட்சம் செலவில் கட்டும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**11.** எண்ணெய் வித்துக்கள் உற்பத்திப் பெருக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 1981-82ல் கன்னியாகுமரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் தென்னை வளர்ப்பு மும்முரத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. இத் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும். இதனால், அடுத்த மூன்றாண்டுகளில் தென்னை மரத்தின் காய்க்கும் திறன் 45லிருந்து 60ஆக உயருமெனவும் அதன் மூலம் இம்மாநிலத்தில் தேங்காய் மொத்த உற்பத்தி 40 கோடியாக உயருமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**12.** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசுத் தோட்டப் பண்ணை ஒன்று ஏற்படுத்துவது அரசின் கொள்கையாகும். திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் இரண்டு புதிய பண்ணைகள் ஏற்படுத்துவதன் மூலம், அடுத்த நிதி ஆண்டு இறுதிக்குள் இம் மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பண்ணை இருக்கும்.

**13.** சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், பங்கு முறைப் பயிரீட்டாளர், வேளாண்மைத் தொழிலாளர்கள், மற்ற தொழிலாளர்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் முதலியோரின் குடும்பங்கள் அடங்கிய, சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் நலனுக்காகச் செயல்படும் கிராம வளர்ச்சி' ஒருங்கிணைந்த திட்டத்தில் மாநில அரசு சிறப்பு நாட்டம் செலுத்துகிறது. நடப்பு நிதி ஆண்டில், இதற்கு ரூ. 22·56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இது ரூ. 30 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கால் நடை வளர்ப்பு.

**14.** சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தில், சிறு உழவர்கள். சொற்ப நில உழவர்கள் பயனுக்காக, செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குச் சுகாதார வசதியும் போதுமான சிகிச்சையும் அளிக்கும் பொருட்டு, 1982–83ஆம் ஆண்டில் கால்நடை மருந்தகங்கள் ஐந்துக்குக் கட்டிடங்கள் கட்டவும், புதிதாகக் கால்நடை மருந்தகங்கள் 25 தொடங்கவும், கால்நடை மருந்தகங்கள் ஐந்தினைக் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடைகளிடையே கோமாரி நோயை ஒழிக்கும் பொருட்டு, அடுத்த நிதி ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் ஒழிப்புக் கண்காணிப்புச் சாவடிகள் மூன்று தொடங்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் மத்திய அரசின் உதவியுடனும் இங்கிலாந்து நாட்டின் கூட்டு முயற்சியிலும் ரூ. 3 கோடிக்கும் அதிகமான செலவில் வெக்கை நோய் ஆய்வு—கட்டுப்பாட்டிற்கான முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டு வரப்படுகிறது. இது அடுத்த நிதி ஆண்டு முதல் செயல்படத் தொடங்கி, மூன்று ஆண்டுகளுக்குத் தொடரப்படும்.

சிறிய அளவில், கோழி, செம்மறியாட்டுப் பிரிவுகள் தொடங்கவும், மாடுகள் வளர்க்கவும், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் முதலியோருக்குத் தேவையான உதவிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டத்தின்கீழ் 11,083 செம்மறியாட்டுப் பண்ணைகளும் 3,618 கோழி வளர்ப்புப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பால்பண்ணை வளர்ச்சி.

**15.** ஆனந்த் முறையைப் பின்பற்றி பால்பண்ணை வளர்ச்சிக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதென்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இக் கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் 3,708 பால் வழங்கு தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் பால் வழங்குவதைச் சீராக்கி, முறைகேடுகளை அகற்ற, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், பொதுமக்களுக்குப் பால் வழங்கும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு, அமைக்கப்பட்டு வருகின்றன.

**16.** '' பால் பெருக்கத் திட்ட '' மாவட்டங்களில் உள்ள பகுதிகளுடன், பிற பகுதிகளிலும் வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊக்கம் அளிக்கப்படுகின்றது. தற்போது பால் பெருக்கத் திட்ட மாவட்டமல்லாத பிற மாவட்டங்களில் கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவுகள் நான்கு செயல்பட்டு வருகின்றன. அடுத்த நிதி ஆண்டில் மேலும் 4 பிரிவுகள் ஏற்படுத்தப்படும். திருநெல்வேலியில் குளிரூட்டு நிலையங்கள் இரண்டுடன் 50,000 லிட்டர் திறன் கொண்ட பால் பண்ணைப் பிரிவு ஒன்று ரூ. 29 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும். உழவர்களின் பயனுக்காக பாலைக் குளிர வைக்கும் நிலையம் ஒன்று ரூ. 9·5 இலட்சம் செலவில் புதுக்கோட்டையில் அமைக்கப்படும்.

### கூட்டுறவு

**17.** கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க நில வள



வங்கிகள் ஆகியவற்றின் கடன் வழங்கு திட்டங்களுக்கு, அரசு பல்வேறு வழிகளில் உதவி செய்து வருகிறது. இயற்கைச் சீற்றங்கள் காரணமாகத் தரப்பட்டு, தொடக்க நிலவள வங்கிகளிடம் நிலுவையாக உள்ள கடன்களின் கால அளவை மாற்றியமைக்கும் பொருட்டு, மாநில நிலவள வங்கிக்கு அரசு ரூ. 2.07 கோடி கொடுத்துள்ளது. தொடக்கச் சங்கங்களின் தவணை கடந்த பாக்கிகளைக் குறைக்கும் நிலையை உருவாக்க ரூ. 47·44 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்தப்படுவது சீராகுமென்று எதிர்பார்த்து, வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் உதவியுடன் கூடிய திட்டங்களைச் செயல்படுத்த மாநில நிலவள வங்கி வெளியிடவிருக்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கு மூலத் தொகை கொடுப்பதற்காக, ரூ. 60 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ரூ. 86 இலட்சத்துக்கும் மேற்பட்ட செலவில், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவிருக்கும் 100 கிராமக் கிடங்குகளுக்காகவும், விற்பனைச் சங்கங்கள் 5 விற்பனைக் கிடங்குகளைத் தொடங்குவதற்காகவும் கடனாகவும் மானியமாகவும் உதவித் தொகை வழங்கப்படும். மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின்கீழ் 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்க ரூ. 11·30 இலட்சம் உதவித் தொகையாக அளிக்கப்படும்.

**18.** ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்து, தலைமைச் சங்கங்கள் அளிக்கும் கடன் வசதியையும் ஏனைய பயன்களையும் அவர்கள் பெறும் வகையில் அமைந்துள்ள திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் அடுத்த நிதி ஆண்டில் இருபதாயிரம் பேர் அச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**19.** பழங்குடி மக்களுக்கு, கடன் வசதி, விற்பனை வசதி, ஏனைய பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் ஒரே இடத்தில் அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, பெரிய அளவிலான பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த நிதி ஆண்டில் நீலகிரி, சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களில் இத்தகைய சங்கங்கள் மேலும் பல தொடங்கப்படும்.

**20.** ஆளுநர் உரையில், உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகிய இருவரின் நலன்களும் பாதிக்கப்படாமல் நியாய விலையில் உணவுப் பொருள் போன்ற இன்றியமையாப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்பின் மூலம் விநியோகம் செய்யும் முறை செயலுக்குக் கொண்டுவரப்படும் என்ற அரசின் முடிவு வெளியிடப்பட்டது. இதன் தொடர்பாகத் தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதியுதவி அளிக்கப்படும்.

## மீனளமும் மீனவர் நலனும்

**21.** பொருளாதார வகையில் மீனவர்கள் முன்னேற்றம் அடையவேண்டுமானால், பிடித்த மீனைக் கரைக்குச் கொண்டுவந்து சேர்க்கும் வசதிகளும், நிலையான விற்பனை வசதிகளும் அவர்களுக்குத் தேவை என்பதை நன்குணர்ந்து, தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனம் முக்கியமான இடங்களில் மீனை விலைக்கு வாங்கவும், விற்பனை செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மீனளத் துறை, மீனைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளையும், மீன்பிடி துறைமுக வசதிகளையும், மீன்பிடி தோணித் துறைகளையும், மீன் விற்பனைக்கான ஏலக் கூடங்களையும் பிற வசதிகளையும் அளித்து வருகிறது. சென்னையில் மீன்பிடி துறைமுகம் ரூ. 11 கோடி செலவில் கட்டப்பட்டு வருவது முடிவடையும் தறுவாயில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்திலும் மீன் பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது, ஊக்கமளிப்பதாக இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பழையாறை மீன்பிடி துறைமுகத் திட்டத்திற்கு அனுமதியளிக்குமாறு மாநில அரசு மத்திய அரசை வேண்டியுள்ளது.

**22.** இயல்பான நிலைகளில் இறால் வளர்த்துப் பிடிக்கும் நோக்கத்துடன், 10 இடங்களில், உவர்நீர் இறால் கட்புல விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. காயல் பகுதிகளில் 300 ஹெக்டேர் பரப்பில் இறால் பண்ணைகளை 3 ஆண்டுகளில் தொடங்கி முடிக்கும் திட்டம் வகுக்கப்பட்டு, அனுமதி பெறும் பொருட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இத் திட்டத்திற்கு ரூ. 2·60 கோடிக்கு மேல் செலவாகும்.

**23.** இப்போது 6 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ரூ. 1·20 கோடி திட்டச் செலவில் 10 நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை 12 ஹெக்டேர் பரப்பில் மீன் பண்ணை கூடுதலாக அமைய வகைசெய்வதுடன் மேலும் 5 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யவும் உதவும். மீன் குஞ்சுகள் தேவை முழுவதையும் நிறைவு செய்யும் வகையில் இத் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

**24.** மீனவர் வீட்டு வசதித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 9,900-க்கும் மேற்பட்ட வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை விற்பனை அங்காடிகளுக்கு எடுத்துச் செல்ல வசதி செய்து தரும்பொருட்டு, மீனவர் குப்பங்களிலிருந்து முக்கிய சாலைகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**25.** தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனம் வாங்கியுள்ள மெக்ஸிகோ நாட்டு இழு படகுகள் இரண்டும் நல்ல வகையில் செயல்பட்டு வருகின்றன. இப் படகுகள் 1981 ஜூலை முதல் தேதியிலிருந்து இதுவரை 56 டன் இறால் மீன்களையும் 17·66 டன் எடையுள்ள பல்வகை மீன்களையும் பிடித்துள்ளன. பிடித்த மீன்களின் மதிப்பு ரூ. 34 இலட்சம் ஆகும்.

### காடு வளர்ப்பு.

**26.** சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன், சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், தமிழ் நாட்டில் 1–4–1981 முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 10 ஆண்டுக் கால அளவில் ரூ. 108 கோடி செலவு செய்யப்படும். இத் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுக் காலம் செயல்படுத்தப்படும் முதல் கட்டப் பணிகளுக்கு ரூ. 45 கோடி செலவாகும். இத் திட்டத்திற்காக 1982–83-ல் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**27.** காடு வளர்க்கப்படும் பரப்பளைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதே நேரத்தில் வனச் செல்வத்தைப் பாதுகாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக, அடுத்த நிதி ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் கூடுதலாக மோட்டார் வண்டிகளையும் ஏனைய சாதனங்களையும் காட்டு வளப் பணியாளர்களுக்கு அரசு அளிக்கும். புதிதாகச் சாலைகள் அமைப்பு பணியையும் இருக்கிற சாலைகளை மேம்படுத்தும் பணியையும் அடுத்த நிதி ஆண்டில் ரூ. 36 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அரசு மேற்கொள்ளும். 1982–83ஆம் ஆண்டில் ரூ. 34·78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணியாளர் குடியிருப்புக்களும், சோதனைச் சாவடிகளும் கட்டப்படும். நீலகிரி தார் உய்விடம் ஒன்று, அடுத்த நிதி ஆண்டில் மத்திய அரசு நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

### பாசனம்.

**28.** பெரும் பாசனத் திட்டங்களுக்கும், நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கும் ரூ. 22·23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு பாசன சிறப்புத் திட்டத்திற்குச் சுமார் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 3 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் புதிதாக மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பெரியார், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நொய்யல் நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 7·13 கோடி), தருமபுரி மாவட்டத்தில் கேசரி குலிஹள்ளா நீர்த்தேக்கத் திட்டம் (ரூ. 2·79 கோடி) ஆகியவை மேற்கொள்ளப்படும்: கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பரப்பு கால்வாய் விரிவுபடுத்தும் பணி ரூ. 46·70 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். இவற்றால் 5,700 ஹெக்டேர் கூடுதல் பரப்பளவுக்குப் பாசன வசதி கிடைப்பதுடன், 14,400 டன் உணவு தானியங்கள் கூடுதலாக உற்பத்தியாகுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நடப்பு நிதி ஆண்டில் 16 சிறு பாசனத் திட்டங்களைப் புதிதாக மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றால் 1,000 ஹெக்டேர் பரப்புக்குப் பாசன வசதி கிடைப்பதுடன், 2,150 டன் உணவு தானியம் கூடுதலாக விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**29.** உப்பாறு நீர்த்தேக்கத் திட்டம் 1982–83ஆம் ஆண்டில் நிறைவுறுமென்றும், இதனால் 720 ஹெக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தின்கீழ் 9,040 ஹெக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கும். அடுத்த நிதி ஆண்டில் ரூ. 10 கோடி செலவில் பெரியாறு-வைகை கால்வாய் ஏற்பாடுகளை நவீனப்படுத்தும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தற்போதுள்ள கால்வாய் ஏற்பாட்டில் ஏற்படுகிற நீர் இழப்பைக் தொடர்ந்து செயல்படும். இத் திட்டம் 1984ஆம் ஆண்டுக்குள் நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள கால்வாய் ஏற்பாட்டில் ஏற்படுகிற நீர் இழப்பைக் குறைப்பதுடன், இது 10,300 ஹெக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசன வசதி அளிக்கும். இத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**30.** பெரும் பாசன, நடுத்தரப் பாசனத் திட்டங்களுடன் சிறுபாசனத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதற்கும், இந்த அரசு சம முக்கியத்துவம் அளித்து வருகிறது. 1982–83ஆம் ஆண்டில், 30 சிறுபாசனத் திட்டங்கள் நிறைவேறி, 2,530 ஹெக்டேர் நிலத்திற்குப் புதியதாகப் பாசன வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்னாள் ஜமீன் ஏரிகளை உரிய தரத்திற்குக் கொண்டு வருவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்டப் பணியாக, வட ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள ஏரிகளை அடுத்த நிதி ஆண்டில் உரிய தரத்திற்குக் கொண்டு வரும் பணி மேற்கொள்ளப்படும். இதற்கென ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### மின் உற்பத்தி.

**31.** இம் மாநிலத்தின் மின்சாரத் துறைதான் இம் மாநிலத்தின் நிதி ஆதாரங்களைப் பெரும் அளவில் பாதிக்கும் துறையாக அமைந்திருக்கிறது. இதுபற்றி பின்னர் நான் விவரித்துக் கூறுவேன். ஒரு மாநிலம் வேளாண்மையிலாகட்டும், தொழில் துறையிலாகட்டும், முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்பது, அம் மாநிலத்தில் மின் விசை மேம்பாடு எவ்வாறுள்ளது என்பதை வைத்தே நிர்ணயிக்கப்படுகிறது. புனல் ஆதாரங்களிலிருந்தும், அனல் ஆதாரங்களிலிருந்தும் மின் சக்தியை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு சிறப்பான சாதனைகளைச் செய்துள்ளது. மின்விசைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இம் மாநில அரசு தலையாய முன்னுரிமை அளிப்பதே இதற்குக் காரணமாகும். இம் மாநிலத்தின் ஆறாவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 3,150 கோடியில் மின் விசைத் துறைக்கு ஏறக்குறைய ரூ. 1,023 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அடுத்த நிதி ஆண்டிற்கு மின் உற்பத்திக்கென ரூ. 220 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இப்போது பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் (210 மெகாவாட்) மூன்றாவது இயந்திரம் நிறுவுதல், சேர்வலாறு புனல் மின் உற்பத்தித் திட்டம் (20 மெகாவாட்), காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் (ஒவ்வொன்றும் 100 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் 4 இயந்திரங்கள்), கீழ்மேட்டூர் புனல் மின் உற்பத்தித் திட்டம் (120 மெகாவாட்), குந்தா மின் நிலையம் (20 மெகாவாட்), மேட்டூர் புனல் மின் திட்டம் (420 மெகாவாட்) ஆகியவையே



மேற்கூறிய திட்டங்களாகும். மேற்சொன்னவற்றுடன், கல்பாக்கத்தில் ஒவ்வொன்றும் 235 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இரண்டு இயந்திரங்கள், சென்னை அணுவாற்றல் நிலையத்தில் செயல்படத் தொடங்குவதை, இம் மாநில அரசு ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறது. முதல் இயந்திரம் அடுத்த ஆண்டின் தொடக்கத்திலும் இரண்டாவது இயந்திரம் அதற்கடுத்த ஆண்டிலும் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. 210 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் முதல் இயந்திரம் 1984—85ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென இல்க்கிடப்பட்டுள்ளது. இருக்கின்ற புனல் மின் வளத்தைப் பயனுக்குக் கொண்டு வரும் முயற்சியாக 3 சிறு புனல் மின் உற்பத்தித் திட்டங்களை ரூ. 11·75 கோடி மதிப்பீட்டுச் செலவில் இம் மாநில அரசு மேற்கொண்டுள்ளது. இவை பைக்காராவிலும், கீழ் பவானியிலும், வைகை அணையிலும் அமைக்கப்படும். 1981 ஆகஸ்டில் மத்திய அரசின் அனுமதி பெற்ற இத் திட்டங்கள் 1984 நவம்பரில் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**32.** 1981 டிசம்பர் இறுதிவரை, 9,38,500 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் 30,000 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதென இலக்கிட்டுள்ளோம். சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு மின் வசதி அளிக்கும் பொருட்டு, ஊராட்சிப் பகுதிகளில் குடிசைகளுக்கு விளக்கு வசதி அளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று 1979 ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்டது. இதுவரை 4·05 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1—1—1982 நிலவரப்படி, 15,595 கிராமங்களுக்கும் 47,454 சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள கிராமங்கள், உட்கிராமங்கள் ஆகியவற்றில் இவை 99 விழுக்காடு ஆகும். மின்வசதி பெற்றிராத ஆதி திராவிடர் குடியிருப்பு எதுவுமே தமிழ்நாட்டில் இப்போது இல்லையெனலாம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், இந்த சாதனை நிகழ்ந்துள்ளது என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

### தொழில் வளர்ச்சி

**33.** இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்பட வேண்டுமென்பதற்காக தற்போதுள்ள ஊக்கத் திட்டங்கள் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தொழில் வளர்ச்சியை வசதிப்படுத்துவதற்காகப் பின்வரும் சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (அ) தொழிற்சாலைகள் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் பெறுவதற்கான மேல்வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. (ஆ) இம் மாநிலத்தில் 5 இடங்களில் புதிய தொழில் தொகுதிகள் உருவாக்கப்படும். இத்தொகுதிகளில் அமைக்கப்படும் தொழிற்கூடங்கள் முதல் 5 ஆண்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கும் பெறும். (இ) மின் அணுவியல், மருந்துப் பொருள்கள், மோட்டார் துணைப்பகுதிகள் தயாரிக்கும் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டால் அவற்றிற்கு உதவித் தொகை அளிக்கப்படும். இவ்வாறு புதிய சலுகைகளும், ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்பட்டுள்ளமையாலும், நமது தொழில் அமைச்சர் வேறு சில மாநிலங்களுக்குச் சென்று வந்ததாலும், இம்மாநிலத்தில் அண்மையில் புதிய தொழில் முயற்சிகள் தொடங்குவது பற்றிப் பல தொழிலதிபர்கள் நமக்குக் கடிதங்கள் எழுதியிருப்பதுடன் மேற்கொண்டு விவரங்களும் கேட்டுள்ளனர்.



**34.** உள்ளூர் ஆதாரங்கள், மூலப் பொருள்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், அடிப்படை வசதிகள் முதலியவை, சில பகுதிகளில் கிடைப்பதைக் கருத்தில் கொண்டு, இம் மாநிலத்தில் மேலும் 6 வட்டங்களைப் பின்தங்கிய வட்டங்கள் என அறிவிப்பது என்றும், பின்தங்கிய பகுதிகளுக்குக் கிடைக்கிற எல்லாச் சலுகைகளையும் அந்த 6 வட்டங்களில் புதிய தொழில்களைத் தொடங்குகிற தொழில் முனைவர்களுக்கு அளிப்பதென்றும், அரசு முடிவு செய்துள்ளது.

**35.** கருப்பஞ்சக்கையிலிருந்து செய்தித்தாள், எழுதும்தாள் ஆகியவற்றை ரூபாய் 190 கோடி மதிப்பீட்டுச் செலவில் உற்பத்தி செய்யும் திட்டம், இந்த நாட்டிலே புதியதொரு தொழில் உத்தியைத் தோற்றுவிக்கும். தமிழ்நாடு அரசும், இந்திய நிதி உதவி நிறுவனங்களும், உலக வங்கியும் அளிக்கும் நிதி வசதியைக் கொண்டு, இந்தக் காகித ஆலை தொடங்கப்படும். தமிழ்நாடு செய்தித்தாள், எழுதும்தாள் தயாரிக்கும் நிறுவனம், நிதி உதவி நிறுவனங்களுடனும், உலக வங்கியுடனும் அவசியமான உடன்படிக்கைகளைச் செய்துள்ளது. நிலத்தைக் கையகப்படுத்தும் பணியும் இத் திட்டத்திற்கு வேண்டிய இயந்திரங்களை வரவழைப்பதற்கு முன்பணம் கொடுக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

**36.** இம்மாநிலத்தில் அமைக்கப்பட விருக்கிற தொழில் முயற்சிகளுக்கு வெளிநாடுகளில் வசிக்கின்ற இந்தியர்களிடமிருந்து மூலதனம் திரட்டுவதற்காகத் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தில் தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மற்றொரு முக்கியமான சாதனையாகும்.

**37.** தொழில் துறையிலுள்ள அரசுத் துறை நிறுவனங்கள், இம் மாநிலத்தைத் தொழில் மயமாக்கும் பணியில் பயனுள்ள தொண்டாற்றி வருகின்றன. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தமிழ்நாட்டின் அரசு நிதி உதவி நிறுவனமாகும். இந்த நிறுவனம் குறுந் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்கும் ரூ. 3,000 முதல் ரூ. 30 இலட்சம் வரை நிதி உதவி அளித்து வருகிறது. குறித்தகாலக் கடன் வழங்குவதுடன், சில தொழில்களில் பங்கு மூலதன முதலீடு செய்யவும், வாங்கிய பின்னர் தொகை செலுத்தும் திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் வழங்குவதற்கு உறுதியளிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கிறது. குறைந்த முதலீட்டில் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் குறுந்தொழில்களுக்கும், சிறுதொழில்களுக்கும் நிதி உதவி அளிப்பதற்கே, இம் மாநில அரசின் கொள்கையை ஒட்டி, இந்த நிறுவனமும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த நிதி ஆண்டில், ரூ. 37 கோடி மட்டுமே நிதி

உதவியாக அளிக்கப்பட்டிருக்க, இந்த நிதி ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் ரூ. 31 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அளிக்கப்படும் நிதி உதவி ரூ. 45 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். 1982–83ஆம் ஆண்டில் ரூ. 60 கோடி அளவுக்கு நிதி உதவி அளிப்பதெனத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் இலக்கிட்டுள்ளது.

**38.** தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அரசுத் துறையில் பெருந் தொழிற்சாலைகளையும், நடுத்தரத் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி நிர்வகிக்கவும், தனிப்பட்ட தொழில் முனைவர்கள் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் தொழிற்கூடங்களை ஏற்படுத்தவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம், அரக்கோணத்தில் உருக்கு உற்பத்திச்சாலையையும், ஆலங்குளத்திலும் அரியலூரிலும் சிமிட்டி ஆலைகளையும் நிர்வகித்து வருகிறது. வெடிமருந்து தயாரிப்புத் திட்டம் உட்பட புதிய தொழில் திட்டங்கள் அமைக்கப்படும்போது, இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும். அரசுத் துறையில் மூன்றாவது சிமிட்டி ஆலையை நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் அளிக்குமாறு மத்திய அரசுக்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் விடுத்துள்ள வேண்டுகோளை மத்திய அரசு இன்னும் ஏற்கவில்லை.

**39.** மத்திய அரசுத் துறைத் திட்டங்களில் மாநிலத்தில் மத்திய அரசு செய்கிற மூதலீடுகளைப் பொறுத்தே, ஒரு மாநிலத்தின் தொழில் முன்னேற்றம் அமைந்திருக்கும். இம் மாநிலத்தில் மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் மேலும் பலவற்றை நிறுவ வேண்டுமென மத்திய அரசிடம் இம் மாநில அரசு வலியுறுத்தி வருகிறது, இத் திட்டங்களுக்கு மத்திய அரசு உரிய ஏற்பு அளிக்குமென நம்புகிறோம்.

**40.** கும்மிடிபூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழிற் பகுதிகளை ஏற்படுத்தும் பொறுப்பும் இப்பகுதிகளில் இன்றியமையாத அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரும் பொறுப்பும், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட இருக்கும் தொழிற் கூடங்களுக்கு இந்த நிறுவனம், உதவித் தொகையும் மற்ற தொழில்களுக்குக் குறித்த காலக் கடன் வசதி முதலியவற்றையும் தொடர்ந்து அளித்து வருகிறது.

**41.** தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் சுரங்கங்களிலிருந்து மாக்னசைட் மூலப்பொருளை எடுத்து வருகிறது. 1981–82 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் ரூ. 81·22 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்ய வெப்பந்தாங்கிக் கல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் சிறந்த மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்ய கனிப் பொருட்கள் செறிவுபடுத்தும் தொழிற்சாலை ஒன்றையும் இந்த நிறுவனம் அமைக்கக் கருதியுள்ளது. சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் மாக்னசைட் கற்களை, நன்றாகச் சுடப்பட்ட மாக்னசைட் கற்களாக மாற்றுவதற்காக ஏறக்குறைய ரூ. 5 கோடி செலவில் சுழற்காளவாய் ஒன்று முதலில் ஏற்படுத்தப்படும். இதனால் வேலை வாய்ப்புக்கள் பெருகும்.

**42.** தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனம் தொடர்ந்து சிறந்த வகையில் பணியாற்றி வருகிறது. மூன்றாவது ஆண்டிலேயே இந்த நிறுவனம் ரூ. 25 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இந்த நிறுவனம் சிவகங்கையில் கிராஃபைட் செறிவுச் சாலை ஒன்றை ஏற்படுத்தவும் கறுப்புக்கல் வெட்டி, மெருகேற்றும் தொழிற்கூடம் ஒன்றைச் சென்னைக்கருகில் ஏற்படுத்தவும் கருதியுள்ளது.



**43.** திருத்தணியில் அன்றாடம் 1,250 டன் கரும்பு பிழியும் திறனுள்ள சர்க்கரை ஆலை ஒன்றைத் தொடங்குவதற்கு உரிமம் வழங்குமாறு மத்திய அரசை இம் மாநில அரசு வேண்டியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலும் சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்கக் கருதியுள்ளது. அரசுத் துறையும், கூட்டுறவுத் துறையும் சர்க்கரை ஆலைகளை அமைக்க முன்வராத, கரும்பு கிடைக்கிற பகுதிகளில், இப்போதுள்ள ஆலைகள் செயல்படுவதற்குக் குந்தகமின்றி, புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்குத் தனியார் துறையை அனுமதிக்கலாம் என்று இந்த அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

## சிறு தொழில் வளர்ச்சி.

**44.** சிறுதொழில் வளர்ச்சிக்கு இந்த அரசு எப்பொழுதுமே மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ் நாட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சியுறச் செய்யப் பாடுபடும் அரசு நிறுவனங்களில் முக்கியமான ஒன்றாகும். இந்த நிறுவனம், சிறு தொழில்களுக்குப் பலவகையிலும் ஒருங்கிணைந்த உதவியும், ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகிறது. தொழிற்கூடங்களைக் கட்டித் தருகிறது; அடிப்படை வசதிகளுடன் சீர் செய்த மனைகளை அளிக்கிறது; முக்கியமான மூலப் பொருள்களை வழங்குகிறது; மூலதன முதலீட்டிற்காக மத்திய அரசு தரும் மூலதன உதவித் தொகையையும் மாநில அரசு தரும் மூலதன உதவித் தொகையையும் வழங்குகிறது. 1981–82-ல் 5 பேட்டைகளில், சீர் செய்த 837 மனைகளை இந் நிறுவனம் இதுவரை ஒதுக்கிக் கொடுத்துள்ளது. சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தனக்குச் சொந்தமாயுள்ள தொழிற் பேட்டைகளில் 300 தொழில் கூடங்களை 1981–82-ல் கட்டியுள்ளது. இவற்றுடன், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தோல் பொருள் தயாரிப்புத் தொழில், மருந்தாக்கியல் தொழில், பொறியியல் தொழில் ஆகிய தொழில்களுக்கென்றே தனியாகத் தொழில்பேட்டைகளை 1982–83-ல் அமைக்கவும் இந் நிறுவனம் கருதியுள்ளது.

**45.** முக்கிய மூலப் பொருட்களை வழங்குவதில் இந்த நிறுவனத்தின் சாதனை சீராக உயர்ந்துள்ளது; அதாவது, வழங்கும் பொருள்களின் மதிப்பு 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 18 கோடியாக இருக்க, இந்த நிதி ஆண்டில் ரூ. 24 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனையைப் பொறுத்தவரையில், சிறுதொழில் பிரிவுகள் உற்பத்தி செய்த பொருள்களில் மொத்தத்தில் ரூ. 3 கோடி மதிப்புள்ள பொருள்களை அவற்றின் சார்பாக சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 1980–81-ல் விற்பனை

செய்திருக்கிறது. சிறு தொழில் பிரிவுகளுக்கும் அரசுத் துறைகளுக்கும் உதவ, மதுரையிலும் கோயம்புத்தூரிலும் இரண்டு விற்பனை அங்காடி தகவல் திரட்டும் குழுக்களையும் சென்னையில் ஒரு வணிக நிலையத்தையும் அடுத்த நிதி ஆண்டில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்

**46.** கடந்த சில ஆண்டுகளாகத்தான் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில், இத் தொழில் தொடர்பாக அரசு எடுத்த வளர்ச்சி நடவடிக்கைகள் காரணமாக முக்கியத்துவம் பெற்று வருகிறது. கூடுதல் அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது உட்பட, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளதால் முசுக்கட்டை பயிரிடும் பரப்பு, 48,000 ஏக்கராக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83-ல் கூடுதலாக 8,000 ஏக்கர் பரப்பில் முசுக்கட்டை பயிரிடப்படும்; அதனால் 40,000 பேர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு கிடைக்கும். 6,000 உழவர்களுக்கும் 2,000 நெசவாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும்பொருட்டு, ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டுல விளக்க-பயிற்சி நிலையங்கள் இரண்டு தொடங்கப்படும். திருந்திய வித்துக்கள் எளிதில் கிடைக்கச் செய்ய, ஏறத்தாழ ரூ. 24 இலட்சம் செலவில் உயர் ரக "விதை" பண்ணை ஒன்று அடுத்த நிதி ஆண்டில் நிறுவப்படும். உழவர்களது பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் பிரிவுகளின் தனித்தியங்கவல்ல தன்மையைப் பெருக்க உதவும் கிராம அளவிலான பட்டுப்புழு வளர்ப்புக் கொட்டகைகள் 40 தொடங்கப்படும். அடுத்த நிதி ஆண்டில் ரூ. 58·37 இலட்சம் கூடுதலாக முதலீடு செய்வதன் மூலம், அரசுப் பண்ணைகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும். பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்ற, பெரியார், செங்கற்பட்டு மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்படும்.

### கிராமத் தொழில்கள்

**47.** கதர்-கிராமத் தொழில் வாரியம், கிராம மக்களிடையேயுள்ள வறுமையைப் போக்குவதையும், கிராமப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பின்மையை ஒழிப்பதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு கதர்-கிராமத் தொழில்களைப் பெருக்குவதோடு, மேம்படுத்தியும் வருகிறது. இவ்வாரியம், 1980–81-ல் ரூ. 48 கோடி பெறுமானமுள்ள பொருட்களை உற்பத்தி செய்து, ரூ. 53 கோடி அளவில் விற்பனையைப் பெருக்கியது. அடுத்த நிதி ஆண்டில் ரூ. 64 கோடி பெறுமானமுள்ள பொருட்களை உற்பத்தி செய்யவும் ரூ. 70 கோடிக்கு விற்பனையை விரிவாக்கவும் கருதியுள்ளது. 4.26 இலட்சம் பேர்களுக்கு இவ் வாரியம் வேலை வாய்ப்பினை அளித்துள்ளதோடு, 1982–83-ல் கூடுதலாக 33,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்குமெனக் கருதப்படுகிறது. ஆறாவது திட்டக் கால இறுதியில், இம்மாநிலத்திலுள்ள கதர்-கிராமத் தொழில் துறையில், ஏறத்தாழ 8·58 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். கைவினைஞர் பலருடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன், இவ்வாரியம் அவர்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. 1982–83-ல் ரூ. 7 கோடி அளவுக்கு 18,000 கைவினைஞர்களுக்கு உதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

**48.** தென்னை நார் உற்பத்தி நிலையிலிருந்து தென்னை நார்ப் பொருள் தயாரிக்கும் நிலை வரை, தென்னை நார்த் தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொன்றும் ரூ. 8·50 இலட்சம் செலவில் தென்னங்கயிறு திரிக்கும் சங்கங்கள் இரண்டையும் ரூ. 5·40 இலட்சம் செலவில் தென்னை நார்ப் பாய் தயாரிக்கும் சங்கம் ஒன்றையும் அடுத்த நிதி ஆண்டில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. பழுப்பு நார் ஆராய்ச்சி-பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்க இவ் வாரியம் முன்வந்துள்ளது; இதற்கு, ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள நிலத்தை மாநில அரசு உதவியாக அளிக்கும்.

### கைத்தறி

**49.** கைத்தறித் துறைக்காக, மாநிலத்தின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 27·82 கோடி ஒதுக்கியிருக்க, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அது ரூ. 84·58 கோடியாக அதிகப்படுத்தப்பட்டுள்ளதிலிருந்து இத் தொழில் குறித்து மாநில அரசு எந்த அளவுக்கு அக்கறை எடுத்துள்ளது என்பது தெளிவாகும். ஏழைக் கைத்தறி நெசவாளர்களைத் தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவித்து, மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் நன்மைகளை அவர்களும் பெறும் வகையில் அவர்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ப்பதென, அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. தறிகள் வைத்திருக்கும் பெரிய முதலாளிகளின் பிடியிலிருந்து நெசவாளர்களை விடுவிக்கும் பொருட்டு, அவர்களுக்குச் செலவுக் கடன்களை அனுமதிப்பதற்கு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியைப் பெறவும், அந் நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரவும் அரசு கருதியுள்ளது.

**50.** இம் மாநிலத்தில் மொத்தமுள்ள 5·56 இலட்சம் தறிகளில் 2·89 இலட்சம் (52 சதவீதம்) தறிகள் இதுவரை 1,251 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களாக நிறுவப்பட்டுள்ளன. ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் 67 சதவீதத் தறிகளைக் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டுவருவதென இவ்வரசு திட்டமிட்டுள்ளது. சொந்தத்தில் தறி இல்லாத நெசவாளர்களின் பயனுக்காக, பொதுப் பணிப் பட்டறை ஒன்றை ஏற்படுத்துவதே இத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்த நிதி ஆண்டில் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 700 நெசவாளர்களின் பயனுக்கென்றே, பொதுப் பணிக் கொட்டகைகள் கொண்ட நெசவுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழினைப் புதிதாகத் தொடங்கக் கருதியுள்ளது.

**51.** கூட்டுறவு அமைப்பின்கீழுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படுகின்ற நூலினை வழங்கும்பணியை, இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 12-ம் தொடர்ந்து செய்துவருகின்றன. தறி நூலுக்கு இருக்கின்ற அதிகத் தேவையை ஈடு செய்ய, புதுக்கோட்டை, தருமபுரி, தேனி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு கூட்டுறவு நூற்பாலை வீதம்



மூன்று புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளன ; நூற்பாலை ஒன்றுக்கு 25,000 கதிர்கள் என்கிற திறனளவுடன், மொத்தம் ரூ. 21 கோடி மூலதனச் செலவில் அந்த நூற்பாலைகளை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மகாகவி பாரதியாரின் நினைவாக, எட்டையபுரத்தில் 12,000 கதிர்கள் கொண்ட புதிய நூற்பாலை ஒன்றை நிறுவவும் கருதப்பட்டுள்ளது. சேலம், வேலூர் ஆகிய இடங்களில் தற்போதுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனளவு மேற்கொண்டும் 12,000 கதிர்களாகக் கூடுதலாக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும். மேற்சொன்ன புதிய ஆலைகளை நிறுவுவதன் மூலமும், தற்போதுள்ள ஆலைகளின் உற்பத்தித் திறனளவை உயர்த்துவதன் மூலமும் கூடுதலாக சுமார் 3,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும்.

**52.** வருங்காலத்தில் தறி நூலுக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் நோக்குடன் இந்திய அரசின் நிதி உதவியுடன் இணை மானிய அடிப்படையில் ''மூலப் பொருள் சேமிப்பு வங்கி'' ஒன்றைத் தொடங்க இந்த அரசு கருதியுள்ளது. தற்போது இம் மாநிலத்திலுள்ள பட்டு நூல் நெசவாளர்கள் நியாய விலையில் கோரா பட்டு நூலிழையைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர். இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, சீனாவிலிருந்து கோரா பட்டு நூலிழையை இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கோரா பட்டு நூலிழையின் முதல் ஒப்படைச் சரக்கு விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**53.** அரசு 'கோ ஆப்டெக்ஸ்' நிறுவனம் மேற்கொள்ளும் விற்பனைக்குப் பெரிய அளவில் தன்னுடைய ஆதரவினை நல்கி வருகிறது. 1980–81-ல் 'கோ ஆப்டெக்ஸ்' நிறுவனம் ரூ. 45 கோடி அளவுக்குக் கைத்தறித் துணி விற்கும் என எதிர்பார்த்திருக்க, அதன் விற்பனைச் சாதனை ரூ. 48 கோடியாகும். நடப்பு நிதி ஆண்டில் இந் நிறுவனத்தின் விற்றுமுதல் ரூ. 65 கோடி அளவுக்கு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதிக விற்றுமுதல் இலக்கினை எய்தும் பொருட்டு, நடப்பு நிதி ஆண்டில் 'கோ ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்கு, இவ்வரசு மத்திய அரசின் உதவியுடன் கூடுதலாக ஒரு கோடி ரூபாய் பங்கு மூலதன உதவித் தொகை வழங்கியுள்ளது. கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி, சேமிப்பு காப்புறுதித் திட்டம், வீட்டு வசதித் திட்டம் முதலிய நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**54.** மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கைத்தறிப் பணியாளர் (வேலை நிலைமைகள்-பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரது இசைவினைப் பெற்று சட்டமாகியுள்ளது. இம் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் வேலை நிலைமைகளை இச்சட்டம் முறைப்படுத்த விழைகிறது. இச் சட்ட விதித் துறைகளைச் செயல்படுத்துவதைக் கண்காணிக்கும் பொருட்டும், தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான உதவியை அளிக்கும் பொருட்டும், மாநிலக் கைத்தறி வாரியம் ஒன்றைப் போதிய அதிகாரங்களுடன் நிறுவும் செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.



### வீட்டு வசதி

**55.** அரசு நிறுவனங்களின் வீட்டு வசதி நடவடிக்கைகள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 1981-82ல் பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினர், குறைந்த வருமானமுள்ளவர் முதலியோரது குடும்பங்கள் 8,030க்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஒன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வகுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில், 8,830 குடும்பங்களுக்கு வீட்டு வசதி அளிக்கப்படும். அரசுப் பணியாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டும் பணியையும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. இது வரை 11,976 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

**56.** குடிசைமாற்று வாரியத்தின் பணி செவ்விய முறையில் நடந்தேறி வருகிறது. 1980–81 வரையில் சுமார் ரூ. 35 கோடி செலவில் 31,000 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் 3,000 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டில் மேலும் 3,500 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும்.

**57.** 1979-ல் தொடங்கப்பட்ட கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், கிராம மக்களின் பேராதரவினால் பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளது. ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் என்னும் மூல இலக்கு, ஐந்தாண்டுகளில் இரண்டு இலட்சம் வீடுகளாக உயர்ந்துள்ளது. 1980-81ல் 40,831 வீடுகள் கட்டப்பட்டன ; இவற்றில் 34,510 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு உரியவையாகும். 1982–83-ல் 40,000 வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி வழங்கப்படும்.

### சாலைகள்.

**58.** விரிவான சாலை வசதியின் முக்கியத்துவத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது; பல்வேறு திட்டங்களின்கீழ், சாலைகள் அமைப்பு-மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், 1,500-க்கும் குறைவாக மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதே திட்டத்தின்கீழ், சாலை மதகுகள் கட்டப்பட்டு வருகின்றன; 1981–82ஆம் ஆண்டில் சாலைகளுக்காகவும், மதகுகளுக்காகவும் ஏறத்தாழ ரூ. 43 கோடி செலவு செய்யப்படும். வறட்சித் துயர்தணிப்புத் திட்டத்தின்கீழ், புதிய சாலைகளை அமைப்பதற்காக ரூ. 6 கோடி செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாண்டில், ரூ. 18 கோடி செலவில் 31 புதிய சாலைகள் அமைக்க புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கல்ராயன் மலைப்பகுதியிலும், ஏனைய பழங்குடியினர் பகுதிகளிலும் சாலை அமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கும், புதிய சாலைகளை அமைப்பதற்கும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 6 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருகின்ற நிதி ஆண்டிலும் இம் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். ரூ. 10 கோடி மதிப்பீட்டுச் செலவில் புதிய பணிகள் 1982–83-ல் மேற்கொள்ளப்

படும். அதே ஆண்டில் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்திற்காக, இன்னுமொரு ரூ. 11·07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் ஓடும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை எடுத்துக்கொள்வதற்காக, அடுத்த நிதி ஆண்டிற்கு ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 1979–80 முதல் 1981–82 வரை, 8,103 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்துமாறு உத்தரவிடப்பட்டது. இதன்மூலம் 41 இலட்சம் மக்கள் தொகை அடங்கியுள்ள 4,052 கிராமங்கள் பயன் அடையும். அடுத்த நிதி ஆண்டில் சுமார் 1,220 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் எடுத்துக் கொள்ளப்படும். இத்துடன் தற்போதுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்காக ரூ. 22·69 கோடி தனியே ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் சாலைகளை அமைக்கவும், பராமரிக்கவும், மேம்படுத்தவும் பெரு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது மேற்சொல்லியவற்றிலிருந்து தெரிய வருகிறது.

### சாலை-நீர்வழிப் போக்குவரத்து.

**59.** செயல்திறன் அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்களின் சாதனை மிகவும் நன்றாக உள்ளது. எரிபொருள் விலை ஏற்றம், ஏனைய இயக்கச் செலவுகள் உயர்ந்துள்ளதை ஈடுசெய்யும் பொருட்டு, பேருந்துக் கட்டணங்கள் 1981ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் நாளிலிருந்து மாற்றியமைக்கப்பட்டபோதிலும், டீசல் எண்ணெய் விலையை மேலும் கணிசமாக உயர்த்தி மத்திய அரசு 1981ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் நாளில் அறிவிப்பு வெளியிட்டது, போக்குவரத்துக் கழகங்கள் போட்ட கணக்கை குலைத்துச் சிதைத்துவிட்டது. ஒருசில ஆண்டுகளுக்கு முன் ஆதாயம் ஈட்டி வந்த இக் கழகங்கள், தற்போது நிதி இடர்ப்பாடுகளில் சிக்கியுள்ளன. இருந்தபோதிலும், இக் கழகங்களின் பணியாளர்களுக்குப் பல்வேறு தாராள சலுகைகளும் வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

**60.** இம் மாநிலத்தில், வேலூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், ஈரோட்டில் ஜீவா போக்குவரத்துக் கழகம், நாகர்கோவிலில் நேசமணி போக்குவரத்துக் கழகம், காரைக்குடியில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் முதலிய போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை 1982–83 முதல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள போக்குவரத்துக் கழகங்களின் பரப்பு வரம்பைக் குறைத்து, பேருந்துகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி, செம்மையான நிர்வாகத்திற்கு வழி செய்யும் நோக்கத்துடன் இப்புதிய கழகங்கள் நிறுவப்படுகின்றன.

**61.** கன்னியாகுமரியில் கரைப் பகுதியிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்குப் படகுப் போக்குவரத்துப் பணியை விவேகானந்தர் கேந்திரம் நடத்தி வந்தது. செறு வாருவதில் உள்ள இடர்ப்பாடுகளினாலும், ஏனைய உள்ளூர்ப் பிரச்சினைகளினாலும், படகு விடுவது நிறுத்தப்பட்டது. படகுப் போக்குவரத்துப் பணியை அரசு மேற்கொண்டு, 1981ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் முதல் நடத்தி வருகிறது. கரைப் பகுதிக்கும் நினைவுப் பாறைக்கும் இடையே இணைப்பு வசதியை உறுதிப்படுத்தவும், இதில் உள்ள பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காணவும் கரைப் பகுதியிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு நடைபாலம் கட்டுவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான விரிவான வரைபடங்களும் மதிப்பீடுகளும் தயாராகி வருகின்றன.



கிராம வளர்ச்சியும் தன்னிறைவுத் திட்டமும்.

**62.** செய்த உழைப்புக்கான ஊதியத்தின் ஒரு பகுதியை உணவு தானியமாக வழங்கும் மத்திய அரசுத் திட்டமாக 1979ல் தொடங்கப்பட்ட வேலைக்கு உணவுத் திட்டம் 1980 அக்டோபரிலிருந்து கிராம வேலை வாய்ப்பு தேசியத் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (அ) கிராம மக்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பைப் பயனான முறையில் ஏற்படுத்தல்; (ஆ) கிராமப் பொருளாதாரம் விரைவாக வளரவும் கிராமத்தில் உள்ள ஏழை மக்களின் வருமானம் உயரவும் வழிகோலும் வகையில் கிராமப்புற அடிப்படை வசதிகளை வலுப்படுத்தி சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்தல்; (இ) கிராம மக்களின் சத்துணவுத் தரத்தையும் வாழ்க்கை நிலையையும் மேம்படுத்தல் முதலியவையே மேற்சொன்ன திட்டத்தின் நோக்கங்களாகும். இம் மாநிலத்தில் உள்ள 378 வளர்ச்சி வட்டாரங்களிலும் இத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**63.** கிராமப் புறத்தில் உள்ள பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு இத் திட்டம் வேலைவாய்ப்பு வசதிகளை அளிப்பதுடன், சமுதாயச் சொத்துக்களையும் உருவாக்கியுள்ளது. 1981–82-ல் இம் மாநிலத்திற்கு ரூ. 22·20 கோடி மானியம் அளிக்கப்பட்டுள்ளது; 14,138 டன் அரிசியும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1980ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் 1982 ஜனவரி இறுதி வரை ரூ. 30 கோடி மதிப்புள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**64.** பல்வேறு திட்டங்கள் மூலம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கமாகும். 1980–81-ல் 69 வளர்ச்சி வட்டாரங்களில் மட்டும், இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் முக்கியத்துவத்தையும், கிராம மக்களுக்கு இதன் மூலம் கிடைத்துள்ள எண்ணற்ற பயன்களையும் உணர்ந்த பின்னர், நடப்பு நிதி ஆண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதென அரசு முடிவு செய்தது. எஞ்சியுள்ள வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் இத் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும். 1981-82-ல் இத் திட்டச் செலவு ரூ. 89 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் குடிநீர் வழங்க ரூ. 30 கோடி செலவிடப்படும். மாநில அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 41 கோடி மானியமாகவும், ரூ. 11 கோடி கடனாகவும் அளிக்கிறது. எஞ்சிய தொகையை ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து செலவிடும். அடுத்த நிதி ஆண்டில் தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் குடிநீர் வழங்கு பணிகளுக்கும், ஏனைய பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கும் சுமார் ரூ. 97 கோடி செலவிடப்படலாம்



என எதிர்பார்க்கப்படுகிறது.

**65.** கிராமப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதன் மூலம் கிடைத்த ஊக்கமளிக்கும் பலன்களினால் உந்தப்பெற்று, பேரூராட்சிகளுக்கும், போதிய நிதி வசதியற்ற நகராட்சிகளுக்கும் இத் திட்டம் தக்க மாறுதல்களுடன் 1982–83 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1982–83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

**66.** கிராமப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் வழங்கும் இலக்கினை எய்த அரசு செயல்பட்டு வருகிறது. நீர் ஆதாரங்களை அறிவியல் முறைக்கேற்ப ஆய்வு செய்தும் பகுப்பாய்வு செய்தும் குடியிருப்புக்கள் ஆறு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. பல்வகை குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உலக வங்கி உதவியுடன் 78 நகரங் களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

சுற்றுலா.

**67.** திறமையான போக்குவரத்து அமைப்பு, நல்ல சாலைகள், உணவக வசதிகள் முதலிய நல் வாய்ப்புக்களால் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி அடைந்து வருகிறது. கலை வளம் நிறைந்துள்ள இம் மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் ஏராளமாக இருப்பதையும், வேலைவாய்ப்பு வசதிப் பெருக்கம் உட்பட சுற்றுலா வளர்ச்சியினால் கிட்டக் கூடிய சமூக, பொருளாதார நலன்களையும் உணர்ந் துள்ள அரசு சுற்றுலா வளர்ச்சிக்கு அதிக அளவு நிதி ஒதுக்கி வருகிறது. இக் கொள்கைக்கு ஏற்ப, அயல் நாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய முக்கிய சுற்றுலா இடங்களை இணைத்து, சுற்றுலா பயண வழித் தடங்களை வகுக்கும் வகையில், விரிவான இணைப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி முதலிய இடங்களை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டங்கள் தனியே தயாரிக்கப் பட்டுள்ளன, இவற்றிற்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரியுள்ளபோதிலும் நிதி உதவி கிடைப்பதற்குக் காத்திராமல், இவை படிப்படியாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

**68.** இம் மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இடவசதியும் போக்குவரத்து வசதிகளும் செய்து தருவதில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆற்றிவரும் பணி பலருடைய பாராட்டையும் பெற்றுள்ளது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக் கோலாலம்பூரிலும் சிங்கப்பூரிலும் இக் கழகம் முகவர் களை நியமித்துள்ளதன் பயனாக அதிக அளவு அன்னியச் செலாவணியை ஈட்ட இயன்றுள்ளது. வெவ்வேறு பொருளாதார நிலைகளிலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் அரசுக் கொள்கையை இக் கழகம் செயல்படுத்தி வருகிறது. வெளி நாடுகளி லிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள், உயர் வருமான முள்ள சுற்றுலாப் பயணிகள் முதலியோரின் தேவையை நிறைவு செய்ய, இக் கழகம் மதுரையில் மூன்று நட்சத்திர உணவு விடுதி ஒன்றை அமைத்துள்ளது, கோயம்புத்தூரில் இரண்டாவது 3 நட்சத்திர உணவுவிடுதி ஒன்றைக் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை ஓய்விட வசதி அதிகத் தொகை செலவிடும் வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் உல்லாசப் பகுதியாக விரிவு படுத்தப்பட்டு வருகிறது. நடுத்தர வருமானமுள்ள, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவையை நிறைவு செய்ய இக் கழகத்தின் தற்போதைய உணவகங்களும் தரம் உயர்த்தப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

**69.** இளம் சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமன்றி குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கும் அதிகச் செலவு ஏற்படாத வகையில் இடவசதி செய்து கொடுக்க, இக் கழகம் இளைஞர் இல்லங்கள் ஒன்பதைக் கட்டி வருகிறது. அத்தகைய இளைஞர் இல்லம் ஒன்று ஏர்க்காட்டில் தொடங்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல், இராமேஸ்வரம், மண்டபம், உதகமண்டலம், மாமல்ல புரம் முதலிய இடங்களில் இளைஞர் இல்லங்கள் தொடங்குவதற்குத் தயாராக உள்ளன. எஞ்சியுள்ள இல்லங்கள் அடுத்த சில திங்கள்களில் முடிக்கப்பட்டு விடும். குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணி களுக்குக் குறைந்த செலவில் இடவசதி செய்துதருவதில் நாட்டிலேயே மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடுதான் முன்னணியில் நிற்கிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது பேருந்துகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தியுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளில், அதன் செயலாக்கம் மேலும் விரிவுபடும். அப்போது சுற்றுலா மேம்பாட்டிற்காகப் புதிய நடவடிக்கைகளை அது மேற்கொள்ளும்.

கல்வி.

**70.** கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் செய்யப்படும் நிதி ஒதுக்கம் கடந்த சில ஆண்டுகளில் தொடர்ந்து உயர்ந்துவந்துள்ளது, கல்விக்கு அரசு கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. 6—11, 11—14 வயதுள்ள மாணவ, மாணவியரைப் பள்ளியில் சேர்ப்பதில் அரசு நல்ல சாதனைகளைப் புரிந்துள்ளது. இளஞ் சிறார்கள் மனதில் பள்ளி செல்லும் மனப்போக்கை ஏற்படுத்தும் பொருட்டு, 4,433 சிறார் நல நிலையங்கள் (பாலவாடிகள்) ஒவ்வொன்றிலும் அடுத்த நிதியாண்டில் பாலர் கல்விப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதியளிக்கும். 6—11 வயதுள்ளவர்களில் தொடக்கப் பள்ளி நிலையில் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடுப்வர்களின் விழுக்காடு அண்மை ஆண்டுகளில் குறைந்து வருகிறது. 1973–74-ல் இது 51 விழுக்காடாக இருந்தது, 1980–81-ல் 30 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

**71.** ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 1981ஆம் ஆண்டு சூன் திங்கள் 1ஆம் நாள் முதல் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். ஏராளமான ஆசிரியர்கள் தேவைப்படுவதை நிறைவு செய்ய, அடுத்த நிதி ஆண்டில் ஆசிரியர் பதவிகள் பலவற்றிற்கு அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது. 6—11, 11—14 வயதுள்ள மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதால், அதற்கேற்ப, 1,000 இடைநிலை ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்படும். அனுமதி வழங்கப்படவிருக்கும் ஏனைய பதவிகளில், தமிழ் ஆசிரியர் பதவிகள் 500, உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள் 150, உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவிகள் 50, பி.எட். நிலை ஆசிரியர் பதவிகள் 300

முதலியவை அடங்கும். அரசு மேல்நிலைப் பள்ளிகள் 97-ல் வகுப்பு அறைகளையும், ஆய்வுக்கூடங்களையும் ரூ. 167·50 இலட்சம் செலவில் கட்டும் பணி 1982—83-ல் மேற்கொள்ளப்படும்.

72. ஆதி திராவிடர், பழங்குடியினரின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தேர்ந்தெடுக்கப் பட்ட 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8 முதல் 10 வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடங்களில் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1981—82-ல் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டம், பல மேல்நிலைப் பள்ளிகளில், முதல், இரண்டாம் ஆண்டு மேல் நிலை வகுப்புகளுக்கு அடுத்த நிதி ஆண்டிலிருந்து விரிவாக்கப்படும்.

73. மாநில அரசு செயல்படுத்திவரும் முதியோர் கல்வித் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் 61 வளர்ச்சி வட்டாரங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 50 ஊராட்சி ஒன்றியங்களில் முறை சாராக் கல்வி நிலையங்களும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்காக 122 தொடர்கல்வி நிலையங்களும் 1982—83-ல் கூடுதலாகத் தொடங்கப்படும்.

74. பள்ளிக்கூட நிலையில் பொதுக் கல்விக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுபோன்றே கல்லூரிக் கல்விக்கும், தொழில்நுட்பக் கல்விக்கும் முக்கியத் துவம் கொடுக்கப்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள்; அரசுக் கல்லூரிகளில் பல புதிய பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு பாடமுறைகள் 1982—83-ல் தொடங்கப் படும். திருச்சி, அரசினர் சட்டக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டும் பணியும், மதுரை, சட்டக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

75. 1979—80 முதல் இதுவரை 12 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ளன. திருநெல்வேலியில் பொறியியல் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும், பல புதிய பாட முறைகள் தொடங்கப் படும்; தொழில்நுட்பக் கல்விக் கூடங்களை மேம்படுத்த, கட்டிடங்கள் கட்டவும் சாதனங்கள் வாங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம் தனது வசதிகளை மேம்படுத்திக் கொள்ளவும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து நிதி உதவி பெறவும் வகை செய்ய, இவ்வரசு மானியம் வழங்க 1982—83-ல் ரூ. 62 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் அறிவியல், தொழில்நுட்பவியல் அரும் பொருட்காட்சியகங் களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கென அமைக்கப்பட்ட குழு ஏற்கெனவே செயல்படத் தொடங்கியுள்ளது.



76. விளையாட்டுத் துறையில், பள்ளி செல்லும் வயதடையா இளஞ்சிறார்களிடையே "விளையாட்டு களில் ஆர்வமுள்ளவர்களை இளம் வயதிலேயே தேடிக் கண்டுபிடித்துப் பயிற்சியளித்து ஊக்குவித்தல்" என்னும் புதிய திட்டம் அடுத்த நிதியாண்டிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்படும். மகளிருக்காக விளையாட்டுப் பள்ளி ஒன்று கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்படும். 1982—83-ல் கூடுதலாக 150 கிராமப்புற விளையாட்டு நிலை யங்களும், பொழுதுபோக்கு மையங்கள் எட்டும் ஏற்படுத்தப்படுவதற்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

77. அரசு நியமித்த உயர் அதிகாரக் குழு செய்த பரிந்துரைகளின்படி கன்னிமாரா பொது நூலகம் நவீனப் படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத் தொல்பொருளியல் துறை காவிரிப்பூம்பட்டினத்தை ஒட்டியுள்ள கடலுக்கு அடியில் ஆராய்ச்சிகளைத் தீவிரப்படுத்தும்.

## தமிழ்க் கலைகள், பண்பாடு.

78. தமிழ் வளர்ச்சி, மரபுவழித் தமிழ்க் கலைகள், பண்பாட்டு நடவடிக்கைகள் முதலியவற்றில் இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இக் கொள்கையை ஒட்டி, அடுத்த நிதி ஆண்டில் சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

79. தொலைதூரக் கிராமங்களில் பழைய பனை ஓலைச் சுவடிகள் நூற்றுக்கணக்கில் உள்ளன; இவை போதிய பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளன. கலை, அறிவியல் சம்பந்தப்பட்ட தமிழ் பனை ஓலைச் சுவடிகளையும் குறிப்பாக, இசை, சிற்பம், ஓவியம், தாவரவியல், வான் இயல், விலங்கியல், பறவை யியல் போன்ற சில அறிவியல் துறைகளில் அதிகமாகப் புழக்கத்தில் இராத சுவடிகளையும் தேடித் திரட்டிப் பதிப்பிக்கக் கருதப்பட்டுள்ளது. தமிழ் மக்களிடம் இலக்கிய, பண்பாட்டு விழிப்புணர்வை ஊக்கி வளர்க்கும் நோக்குடன், அரிய மதிப்புள்ள பழைய புத்தகங் களை மீண்டும் அச்சிட்டு வெளியிடக் கருதியுள்ளது.

80. தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களின் வரலாறு, பண்பாடு, கலை, சமூக வாழ்க்கையினை முறையாக எழுதி வைக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. அச்சில் ஏறியது போக, தலைமுறை தலைமுறையாக வாய் வழியாய் வந்த அரிய அறிவுச் செல்வங்கள் ஏராளமாக உள்ளன. இவை இலக்கிய மதிப்பும் கலைத் தரமும் செறிந்தவை. அவற்றை நாம் எழுத்தில் எழுதி வைக்காவிட்டால், அடுத்த தலைமுறைக்கு அவை கிடைக்காமல் போய்விடும். எனவே, தமிழ்நாட்டின் கிராம வரலாற்றுப் பாரம்பரியத்தை எழுத்தில் வடித்து நூற்களஞ்சியங்களைப் பதிப்பிக்க அரசு கருதியுள்ளது. அச்சிட்ட இந்தப் புத்தகங்கள் தவிர, நமது கிராம மக்களின் இசை வளத்தையும் ஏனைய கலைகளையும் பிரதிபலிக்கும் வகையில் இப் பாரம்பரியச் செல்வம் ஒலிப் பதிவும் செய்யப்படும்.

81. கிராமியக் கலைகள், கிராமியப் பாடல்களுடன், தமிழ்நாட்டின் பண் முறையைப் பிரதிபலிக்கும் கர்நாடக இசையைப் பாதுகாக்கும் பொருட்டு, இசை மேதைகள் பாடியவற்றை ஒலிப் பதிவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உருவாக்கிப் போற்றி வளர்க்கப்பட்டுள்ள தலைசிறந்த சில ராகங்கள் இந்த ஒலிப் பதிவுகளில் முக்கிய இடம் பெறும்.

## மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலன்.

82. கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் சுகாதார

வசதி '' என்பதே உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசிய சுகாதாரப் பட்டயத்தின் முழக்கமாகும். இதில் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. இச் சீரிய நோக்கத்தை எய்தும் பொருட்டு, நோய்த் தடுப்பு, சிகிச்சை அளித்தல், பொதுச் சுகாதாரம்-துப்புரவு மேம்பாடு, அனைத்திற்கும் மேலாக குடும்ப நலத் திட்டம் ஆகியவற்றில் முற்போக்குக் கொள்கையினை மாநில அரசு கடைப்பிடித்து வருகிறது.

**83.** கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளில் சிறார்கள், வயது வந்தவர் ஆகியோர் மீது மக்கள் நல்வாழ்வுத் துறை கவனம் செலுத்தி வருகிறது. பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் உடல் நிலையை அடுத்த நிதி ஆண்டில் முறையாகப் பரிசோதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 5—11 வயதுள்ள ஒவ்வொரு சிறார்க்கும் அனைத்துத் தகவல்களும் அடங்கிய சுகாதார அட்டை வழங்கப் படும். சென்னையிலுள்ள குழந்தைகள் மருத்துவ மனையில் தற்போதுள்ள 250 படுக்கைகள், 500 படுக் கைகளாக 1982—83ஆம் ஆண்டில் ரூ. 173.24 இலட்சம் செலவில் உயர்த்தப்படும். அடுத்த நிதி ஆண்டில் பன்னிரண்டு அரசு மருத்துவ மனைகளில் குழந்தை சிகிச்சைப் பிரிவுகள் திறக்கப்படும். அடுத்த நிதி ஆண்டில் ரூ. 140·49 இலட்சம் செலவில் 15 தொடக்கச் சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாகத் தரமுயர்த்தப்படும்.

**84.** தலை உறுப்பை முப்பரிமாணத்தில் படம் பிடிக்கும் கருவி ஒன்றைச் சென்னைப் பொது மருத்துவமனைக்கு அண்மையில் அரசு வாங்கியுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் சுமார் ரூ. 1·5 கோடி செலவில் தஞ்சாவூர் மருத்துவமனையில் தலை உறுப்பை முப்பரிமாணத்தில் படம் பிடிக்கும் கருவியையும் மதுரை மருத்துவ மனையில் உடல் முழுவதையும் முப் பரிமாணத்தில் படம் பிடிக்கும் கருவியும் வாங்கி அமைக்கப்படும். 1982—83-ஆம் ஆண்டில் மதுரை யிலுள்ள நச்சாய்வியல் ஆய்வுக்கூடத்திற்கு ரூ. 20 இலட்சம் மதிப்பு உடைய சாதனங்கள் வாங்கப்படும். இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவ மனைகளில் பயன்படுத்த 'எக்ஸ்' கதிர் இயந்திரங்களும் ஏனைய கூடுதல் சாதனங்களும் வாங்கப்படும். காஞ்சி புரத்திலுள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனைக்கு, ரூ. 10 இலட்சம் செலவில் அவசியமான இணைப்புக் கருவிகளுடன் மிகை ஒலி சாதனம் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி பெறும் செவிலியர், செவிலிப் பணியாளர் ஆகியோ ருக்குச் சுமார் ரூ. 103 இலட்சம் செலவில் கோயம் புத்தூரிலும் மதுரையிலும் கூடுதல் இடவசதி செய்து கொடுக்கப்படும். இம்மாநிலத்தில் மின் உற்பத்தி இயந்திரங்கள் மிக அவசியமாகத் தேவைப்படும் சில மருத்துவ மனைகளில் அவை அமைக்கப்படும்.

**85.** 1982—83ஆம் ஆண்டில் விபத்து, அவசரப் பணிகள் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணி சுமார் ரூ. 50 இலட்சம் செலவில் மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு, அதாவது சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும்.

**86.** ஹாத்தி குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகத்தை, அரசு அண்மை யில் பொதுச் சுகாதார-நோய்த் தடுப்பு மருந்துகள் இயக்ககத்திலிருந்து பிரித்து, தனித் துறையாக அமைத் துள்ளது.

**87.** இந்திய முறை மருத்துவத்தை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அடுத்த நிதி ஆண்டில், மேலும் 10 தொடக்க சுகாதார நிலையங் களில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும். சித்த மருந்துப் பொருள் தயாரிக்க, வட்டார மருந்துப்



பொருள்கள் தயாரிப்பு நிலையம் சுமார் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பொள்ளாச்சி யில் அமைக்கப்படும். பாளையங்கோட்டை, அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் உள்ள மருந்துப் பொருள் தயாரிக்கும் பிரிவு ரூ. 10 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்படும். பாளையங்கோட்டை யிலுள்ள அக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவ மனையில் இணைக்கப்பட்டவாறு 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்று தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை, அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவ மனையுடன் மருந்துப் பொருள் ஆய்வுக்கூடம் ஒன்று 1982—83ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

**88.** கிராம மக்களின் பல் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக அறிவியல் முறையில் தயாரிக்கப்பட்ட பற்பொடிகளை மருத்துவத் துணை நிலையங்கள், தொடக்கச் சுகாதார நிலையங்கள், அரசு மருந்தகங்கள் வட்ட மருத்துவமனைகள் முதலியவற்றின் மூலம் இலவசமாகக் கிராம மக்களுக்கு வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் பாம்புக் கடியால் அவதிப்படும் மக்களுக்கு உடனடியாகவும் திறமையாக வும் சிகிச்சை அளிக்க மருத்துவத் துணை நிலையங்கள், தொடக்க சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள், முதலியவற்றின் மூலம் ஊனீர் மருந்து அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**89.** விருப்ப அடிப்படையில் குடும்ப நலத் திட் டத்தை மிக வெற்றிகரமான முறையில் செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படவில்லை யானால், பொருளாதார வளர்ச்சி அனைத்தும் பய னற்றுப் போய்விடும். 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தெரிவித்துள்ளபடி, இம் மாநிலத்தில் மக்கள் தொகையின் கட்டுப்பாட்டு நில வரம் மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது. இம் மாநிலத்தில் பிறப்பு வீதம் 1971—1980 பத்தாண்டு களில் 17.23 விழுக்காடாகக் கணிசமாகக் குறைந்துள்ளது. இதுவே இந்நாட்டிலுள்ள மிகக் குறைவான பெருக்க விகிதம் எனலாம். சிறு குடும்ப முறையைப் பின்பற்றுமாறு தகுதியுடைய தம்பதியருக்கு அறிவுரை கூறவும் ஊக்குவிக்கவும் சிறந்த முறையில் முகாம்கள் நடத்தப்பட்டு, அவை நல்ல பயனை அளித்துள்ளன. 1981—82-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள குடும்ப நல அறுவைச் சிகிச்சை எண்ணிக்கையில் 1981 டிசம்பர் இறுதிவரையான இலக்கில் 83 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் குடும்ப நல அறுவை சிகிச்சை இலக்கு முழுவதையும் எய்துவதே இவ்வரசின் குறிக்கோளாகும். இதற்காக பல்வேறு சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவிகளும் பெறப்பட்டுள்ளன.

**90.** டேனிஷ் அனைத்து நாடுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் சுகாதாரப் பாதுகாப்பு- குடும்ப நலத் திட்டம், சேலம், தென்னார்க்காடு ஆகிய



இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ரூ. 14·40 கோடி செலவில் ஐந்து ஆண்டு களில் செயல்படுத்தப்படும். குறிப்பாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் சுகாதார-குடும்ப நல நிலையை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் பொதுவான நோக்க மாகும். சுகாதார முறையில் அடிப்படை வசதி ஏற்படுத்தி வலுப்படுத்துவது, சுகாதார குடும்ப நல வசதிகளை நல்குவது, துப்புரவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், சமுதாய நலத் திட்டங்கள் முதலியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங் களாகும். 58 சுகாதார துணை நிலையங்களையும், 20 சுகாதார பார்வையாளர்களுக்குக் (பெண்) குடியிருப்புகளைக் கட்டுவது, 95 சுகாதாரத் துணை நிலையங்களையும் கூடுதலாக ஏற்படுத்துவது போன்ற இத்திட்டத்தின் சில கூறுகளுக்கு அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது.

**91.** இரண்டு மாவட்டங்களிலுள்ள சுமார் 3,640 கிராமப்புற குடியிருப்புப் பகுதிகளில், 18 இலட்சம் பேர்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க, கிராமப் புற குடிநீர் வழங்கு துணைத் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தை அடுத்த 4 ஆண்டுகளில் செயல்படுத்த மத்திய அரசு மூலம் - டேனிடா' நிறுவனத்திடமிருந்து ரூ. 35 கோடி நிதி உதவி வேண்டப்பட்டுள்ளது.

### சமூக நலன்

**92.** ஆதிதிராவிடர்களின் சமூக-பொருளாதார நிலைகளை மேம்படுத்துவது குறித்த பணியை, மாநில அரசு கடந்த சில ஆண்டுகளாக முழு மூச்சுடன் மேற் கொண்டுள்ளது. அரசுப் பணிகளில் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காட்டை அனைத்து துறை களும் முறையாக ஒதுக்குவதை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கமாகும். கிராம வளர்ச்சி ஒருங் கிணைந்த திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 51,443 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்ட முறையில் அமைந்த, மத்திய அரசு சிறப்பு நிதி உதவியுடன் கூடிய திட்டத்தின் கீழ் 44,500 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. ஆதிதிராவிடர்களுக்கு உதவ கிராமப் புற நெசவுத் தொழில் நிலையங்களும், நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 8.04 கோடியாகும். இதனால் 10,384 பேர் பயன் பெறுவர். வேளாண்மைத் தொழிலாளர்களாகப் பணிபுரியும் ஆதிதிராவிடர்களுக்கு உதவும் பொருட்டு வேளாண்மைத் துறையில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1982 நிதி ஆண்டு தொடங்கி மூன்றாண்டுக் காலத்தில், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதிகள், மூலக் கிராமங்களுக்குச் செல்லும் வசதிகள், பொதுச் சாலை வசதிகள், சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல், இன்றியமையாப் பொருள்கள் வழங்குதல் முதலிய வசதிகள் செய்து கொடுக்கச் சிறப்புத் திட்டம் தயா ரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிக்கும் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டியுள்ளது என்பதை ஆழ்ந்தறிந்து, நல நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தனி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வீட்டு மனைகள், வீடுகள் கட்டுவதற்கு ஏற்ற வகையில் சீராக்கப்படுவதை உறுதிப்படுத்த அரசு விரும்புகிறது. இப் பணியை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளு மாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். கிராமப் புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பெரும் பயன் ஆதிதிராவிடர் குடும்பங் களுக்கே கிட்டியுள்ளது. ஏற்கெனவே தெரிவித்த படி, 1980–81 ஆம் ஆண்டில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 40,831 வீடுகளில் 34,510 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு உரியவையாகும். நடப்பு நிதி ஆண்டில், 1981 டிசம்பர் வரை, கட்டி முடிக்கப் பெற்ற 9,756 வீடுகளில் 8,545 வீடுகள் ஆதிதிராவிடர் களுக்காக ஒதுக்கப்பட்டவை. வீடுகள் கட்டிக் கொடுப்பதில் ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்படும் உதவி, வரும் ஆண்டுகளில் தொடர்ந்து முனைப்பாக செய்யப்படும்.

**93.** ஆதி திராவிட மாணவர்களுக்கு மாணவர் விடுதிகள் கட்டும் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. ரூ. 3,57·94 இலட்சம் செலவில் 51 மாணவர் விடுதிகள் கட்டவும், ரூ. 2,00·65 இலட்சம் செலவில் 27 மாணவியர் விடுதிகள் கட்டவும், திருத்திய அனுமதி அரசினால் 1981 டிசம்பரில் வழங்கப் பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர் களின் நலனுக்காக, ரூ. 22.50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அடுத்த நிதி ஆண்டில், பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதிகள் 40 புதிதாகத் தொடங்கப்படும். குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் நலனுக்காக, புதிதாக மூன்று மாணவர் விடுதிகளும் தொடங்கப்படும். குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் பள்ளி களுக்காகக் கட்டிடங்கள் கட்ட ரூ. 7·5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**94.** 1980–81ஆம் ஆண்டு முதற்கொண்டு சிறப்புக் கூறுகள் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

(அ) ஆறாவது திட்டக் காலத்தில் 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருக்கும் நிலை மாறி உயர்ந்திட உதவுவது ;

(ஆ) குடிநீர், இணைப்புச் சாலைகள், மின்வசதி, சுகாதாரம், கல்வி முதலிய வசதிகள் செய்துகொடுத்தல். 1980–85ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 535 கோடியாகும். 1982–83ஆம் ஆண்டில், இதற்கான ஒதுக்கீடு ரூ. 114 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், 1.66 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் பெறும். சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் அதிக ஆதிதிராவிடர்க்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்கள் உழைப்பைப் பயன் படுத்தும் புதிய தொழில் முயற்சிகளையும், உற்பத்தி நிலையங்களையும் மேற்கொள்வதன் மூலம் அவர்கள் பொருளாதார நிலையும், ஊதியம் ஈட்டும் திறனும் மேம்பாடு அடையும். இவை ஆதிதிராவிடர்களுக்கு நிலையான பயன்கள் அளிப்பதோடு மட்டுமல்லாமல், புதிய சொத்துக்களையும் உருவாக்கும். கூடி உழைக் கும் தொகுப்புத் திட்டங்களும் ஊக்குவிக்கப்படும். ஆதிதிராவிடர்களின் நிலங்களுக்குப் பாசனம் அளிக்க உதவும் வகையில் அடிமட்டப் பகுதிகளிலும் கடை மடைப் பகுதிகளிலும் குழாய்க் கிணறுகள் நிறுவப்படும். 1982–83-ஆம் ஆண்டில் இதற்காக சுமார் 2,000 குழாய்க் கிணறுகள் நிறுவப்படும்.

**95.** தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு நிறுவனம், ஆதி திராவிடர்களின் நலனுக்காகப் பல்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த திட்டத்திலும் செலவில் 25 விழுக்காடு தொகையை 4 விழுக்காடு வட்டியில் தொடக்க உதவித் தொகையாக அளிப்பது இதில் ஒன்றாகும்.

**96.** மகளிர், சிறார் நலனுக்கான திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்திவருகிறது. 18—30 வயதுள்ள 1,000 ஏழை மகளிருக்குத் தட்டச்சு, வணிகக் கணக்கியல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சுருக்கெழுத்தில் பயிற்சி அளிக்கும் வகையில் 1982—83ஆம் ஆண்டிலும் இத் திட்டத்தை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் கூடுதலாக 200 பாலர் நல நிலையங்கள் தொடங்கப்படும்.

**97.** சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்தவும், சிறார்களுக்கு ஊட்டச் சத்துணவு முதலியவற்றை வழங்கவும் இம் மாநிலத்தில் இப்போது செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் உதவும். குறிப்பிட்ட வயதைக் கடந்த ஆதரவற்ற கைம்பெண்கள், ஆதரவற்ற உடலூனமுற்றோர், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், பார்வை இழந்தோர் ஆகியோருக்கு முதியோர் உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் அவர்களுக்கு அரிசியும் ஆடைகளும் அளிக்கப்படுகின்றன.

**98.** உடல் ஊனமுற்றோரின் நலனில் அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது. இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம், பால் விற்பனை நிலையங்கள், தானியங்கிப் பால் வழங்கு நிலையங்கள் ஆகியவற்றில் உடல் ஊனமுற்றோர் அரசு அளிக்கும் உதவியுடன் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். பொருத்துநர் தொழிலிலும், மின்கம்மியர் தொழிலிலும் காதுகேளாதோருக்குப் பயிற்சி அளிக்க, நடப்பு நிதி ஆண்டில் கிண்டி, தொழில் பயிற்சி நிலையத்தில் இரண்டு தனிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. காதுகேளாத பெண்களுக்குப் பயிற்சியளிக்கத் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றில் தனிப் பிரிவு ஒன்று 1982—83ஆம் ஆண்டில் தொடங்கப்படும். 1982—83ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் இறுதி மதிப்பீட்டுச் செலவில், உடல் ஊனமுற்றோருக்கான 5 சிறப்புப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து நாடுகள் உடல் ஊனமுற்றோர் ஆண்டில் தொடங்கப் பெற்ற அனைத்துத்திட்டங்களும் அடுத்த நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

வருவாய்த் துறை நிர்வாகம்.

**99.** தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 1,36,641 ஏக்கர் நிலம் உபரி என அறிவிக்கப்பட்டது. உபரி என அறிவிக்கப்பட்ட நிலத்தில், 88,907 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கரும்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு 4,041 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது; பொதுக் காரியத்திற்காக 8,500 ஏக்கர் நிலம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. 16,289 ஏக்கர் நிலம் குறித்து நீதிமன்றத் தடை ஆணை உள்ளது. எஞ்சிய 18,904 ஏக்கர் நிலம் உடனடியாக ஒப்படை செய்வதற்கு உள்ளது. 88,907 ஏக்கர் நிலத்தில் 32,351 ஏக்கர் நிலம், 29,028 ஆதி திராவிடர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

**100.** தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகையாளர் உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின் கீழ், 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படிப் பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 4,37,117 ஆகும். அவர்கள் பயிரிடும் நிலம் மொத்தம் 6,26,538 ஏக்கர் ஆகும்.

**101.** வருவாய்த் துறை ஃபிர்க்கா ஆய்வாளர்களுக்கு அலுவலக-குடியிருப்புக்கான 100 கட்டிடங்கள் அடுத்த நிதி ஆண்டில் கட்டப்படும்.

**102.** நிலப் பதிவேடுகளில் நில உரிமையாளர், பற்றிய விவரங்கள் நாளது வரை எழுதி வைக்கும் திட்டம், தமிழ்நாட்டில் 1979ஆம் ஆண்டு சூன் திங்கள் 1ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கி உள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்தப் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டம் உழவர்களுக்குப் பெரும் பயன் பயக்கிறது. தங்களது உடைமைகளைப் பற்றி முழு விவரங்களும் அவர்களுக்குக் கிடைக்கச் செய்கிறது அவர்களை வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெற வகை செய்வதோடு, அவர்கள் சொத்துக்களை வர்த்தகரீதியாகக் கையாளுவதையும் எளிதாக்குகிறது. நிலப்பதிவேடுகளில் நில உரிமையாளர், முதலிய விவரங்களை நாளதுவரை எழுதி வைக்கும் பணி, விரைவில், குறிப்பாக இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டுமென்பதில் அரசு முனைப்பான அக்கறை கொண்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, அடுத்த நிதி ஆண்டில் இத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்.

**103.** தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க அரசு பின்பற்றும் நடைமுறைக் கேற்ற சீரிய கொள்கை காரணமாகத் தமிழ்நாடு, தொழில் நல்லுறவுகளைப் பொறுத்தவரை, அமைதியையும் சுமுகச் சூழ்நிலைகளையும் தொடர்ந்து பேணி வருகிறது. தொழிலாளர்க்கு நலம் பயக்கும் சட்டங்கள் பலவற்றை இயற்றி நன்முறைப்படுத்துவதில் அரசு கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது. வேளாண்மைத் தொழிலாளர் நிலையை மேம்படுத்தும் பொருட்டு, குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைக்கும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

காவல் துறை, தீயணைக்கும் படையினர், நீதிமன்றங்கள்.

**104.** பொதுவாக இந்தியாவின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, சட்ட-ஒழுங்கு நிலைமை இம் மாநிலத்தில் சீராக உள்ளது. காவல் துறையினர் செவ்வனே பணியாற்றுவதே இதற்கு முக்கிய காரணமாகும். குற்றங்களை அறிவியல் முறையில் கண்டுபிடிக்க உதவும் சாதனங்களைப் பயன்படுத்தச்செய்யவும் சாலைப் போக்குவரத்து ஒழுங்குமுறைகளை மேம்படுத்தச் செய்யவும் சட்ட ஒழுங்கு நிலைமைகளைச் சமாளிக்கச் செய்யவும் மாநில அரசு காவல் துறையை வலுப்படுத்தியுள்ளது. சென்னை மாநகரில் போக்குவரத்தை முறைப்படுத்தும் விளக்குகள் ஒருங்கிணைந்து சீராக இயங்கச் செய்வதற்கும் அதிக ஒளி வீசும் பெரிய மின் விளக்குகளை அமைப்பதற்கும் நடப்பு நிதி



ஆண்டில் ரூ. 19 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. 31 காவல் நிலையங்கள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு இவை யாவும் செயல்பட்டு வருகின்றன. அடுத்த நிதி ஆண்டிலும் மேற்சொன்ன எண்ணிக்கையில் காவல் நிலையங்கள் தொடங்கப்படும். இந்த ஆண்டில் பழைய வண்டிகளில் 10 சதவீத வண்டிகளுக்குப் புதிலாக புதிய வண்டிகள் வாங்கப்படும்; அடுத்த நிதி ஆண்டில் ரூ. 160 இலட்சம் செலவில் புதிய வண்டிகள் வாங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டில் ரூ. 341 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 150 காவல் நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதி ஆண்டில், காவல் துறையில் சுமார் 2,500 கூடுதல் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நிலவும் கடினமான பிரச்சினைகளைச் செவ்வனே சமாளிப்பதற் காக ரூ. 2·5 கோடி செலவில் சென்னைப் பெருநகர் காவல் படையைச் சீரமைக்கும் செயற் குறிப்பு ஒன்றும் தற்போது பரிசீலனையில் உள்ளது. 1982—83-ல் மதுரையிலும் கோயம்புத்தூரிலும் பெருநகர் காவல்துறை அமைப்பை ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் துறையில் மேலும் ஒரு மாவட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம், அதிகார எல்லையைத் தக்க வாறு மாற்றியமைத்து, திருநெல்வேலி, இராமநாத புரம் மாவட்டத்திலுள்ள காவல் துறையைச் சீரமைக் கவும் கருதப்பட்டுள்ளது. காவல் துறைப் பணியாளர் களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது, காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இது மேலும் வேகத்துடன் நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. காவலர்களின் நற்பணிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 1,500 காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் பதக்க மும், மாதாந்திரப் படியும் அளிக்கும் திட்டத்தை அரசு ஆளுநர் உரையில் அறிவித்தது.

**105.** தீ விபத்துகள், ஏனைய விபத்துக்கள் ஆகிய வற்றின் அறைகூவலைச் சமாளிக்கும் வகையில் தீயணைப்புத்துறை, தக்க சாதனங்களுடன் ஆயத்தமாக உள்ளது. தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு நல நடவடிக்கையாக, அரசு, நடப்பு நிதி ஆண்டில் உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் ரூ. 40 இலட்சம் செலவில் குடி யிருப்புகள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது.

**106.** சாதனம், கட்டிடங்கள், பணியாளர் முதலிய வகையில் நீதித் துறைக்கு வசதி செய்து கொடுக்க அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதி மன்றங்கள், நீதித் துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் முதலியவற்றிற்குப் படி எடுக்கும் 'ஜெராக்ஸ்' கருவிகள் வழங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள நீதித் துறை அதிகாரிகள் 464 பேர்களுக்கு ஒலிப்பதிவுப் பொறிகள் (டேப் ரெக்கார் டர்கள்) வழங்கப்படும். திண்டுக்கல்லில் இவ்வாண்டு ஜனவரித் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து புதிதாக மாவட்ட-செஷன்ஸ் நீதிமன்றம் ஒன்று செயல்படத் தொடங்கியுள்ளது. உரிமை வழக்கு, குற்றவியல் நீதிமன்றங்களுக்கு இடவசதி அளிக்க திண்டுக்கல்லில் சுமார் ரூ. 34 இலட்சம் செலவில் நீதித் துறைக்காக, இணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்படும். மதுவிலக்குக் குற்றங்களை விசாரிக்க, நடப்பு நிதி ஆண்டில் துணை நீதிமன்றங்கள் 21 ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், குற்றங்களை விசாரணை செய்ய; நடப்பு நிதி ஆண்டில் முதல் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்டிரேட் துணை நீதிமன்றங்கள் நான்கிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூரிலும், திருப்பூரிலும் துணை நீதிமன்றங்கள், பவானியிலும் போளூரிலும் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட, செஷன்ஸ் நீதிபதிகள், நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோர் பயன்படுத்த 30 மோட்டார் வண்டிகள் வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**107.** அடுத்த நிதி ஆண்டில், புதிதாக மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஒன்பதும் கூடுதல் சிவில் நீதிமன்றங்கள் ஆறும், குற்றவியல் நீதிமன்றங்கள் நான்கும், துணை நீதிமன்றம் ஒன்றும் செயல்படத் தொடங்கும். வழக்கறிஞர்களுக்குக் கூடுதலாக அலு வலக இடவசதி அளிக்கச் சென்னை மாநகரில் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்படும்.

### சென்னை மாநகர் மேம்பாடு

**108.** சென்னை மாநகரையும், அதன் சுற்றுப்புற இடங்களையும் உலக வங்கி நிதி உதவியுடன் மேம் படுத்தவும் அழகுபடுத்தவும் சில திட்டங்கள் உள்ளன. உலக வங்கி நிதி உதவிபெறும் முதலாவது திட்டம் ரூ. 55 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப் பட்டுள்ளது. கொடுங்கையூரில் மனைகள்-பணிகள் திட்டத்தைத் தவிர இத் திட்டம் 1982 ஜூனில் நிறைவேற்றி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. குடிசைப் பகுதியிலுள்ள 26,000 குடும்பங்கள் இத் திட்டத்தினால் பயனடைந்துள்ளன. இத் திட்டம் முடிக்கப்பட்டதும், பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினருக்குச் சீர் செய்த மனைகள் 13,500 வழங்கப்படும். உலக வங்கி நிதி உதவி பெறும் இரண்டாவது திட்டத்திற்குச் சுமார் ரூ. 74 கோடி செலவாகும். இத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் குடிசைவாழ் மக்கள் 50,000 பேருக்கு இடவசதி அளிக்கக் கருதப் பட்டுள்ளது; மேலும், பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினருக்குச் சீர் செய்த மனைகள் 15,000 வழங்கப்படும். மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதி களிலுள்ள குடிசைவாழ் மக்களுக்கு அவர்களது வீட்டு மனைகளுக்காகப் பட்டா வழங்குதல், வீடுகளைச் சீரமைப்பதற்காக எளிய மாதத் தவணைகளில் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடன்களை அவர்களுக்கு அனுமதித்தல் ஆகியவை இரண்டாவது திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இதன்மூலம் சுமார் 30,000 குடும்பங்கள் பயனடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. குடிசைப் பகுதிகள் சீரமைப்பு, சாலைகளையும் வீட்டு வசதிகளையும் மேம்படுத்தல், சாலைப் போக்குவரத்து ஏற்பாடுகளைச் சீரமைத்தல் முதலியவை, உலக வங்கி நிதி உதவி பெறும் திட்டங் களின் நோக்கமாகும்.

**109.** அடுத்த நிதி ஆண்டில் சென்னை நகரில் விற்பனை வரியின் மீது விதிக்கப்பட்டுள்ள உபரி



தீர்வையிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ரூ. 4 கோடி ஒதுக்க இந்த வரவு-செலவுத் திட்டம் வகைசெய்கிறது. வெள்ள நீர் வடிகால்காளச் சீரமைத்தல், புதை கம்பி வடங்களை மீண்டும் அமைத்தல், சாலைகளைச் சீரமைத்தல் முதலிய திட்டங்களை மேற்கொள்வதற்காக மேலும் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கு, கழிவு நீரகற்று ஏற்பாடுகளை மேம்படுத்த தனியே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை மத்திய அரசு விரைவில் செயல்படுத்தும் எனவும் அந்த ஏற்பாடு, சென்னை நகர்ப் பயணிகளுக்குப் பெரும்பேறாக அமையும் எனவும் இவ்வரசு நம்புகிறது.

### ஆண்டுத் திட்டம்

**110.** ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்தே இம் மாநிலத்தில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுவது போற்றத்தக்க வகையில் இருந்து வருகிறது. 1980–81 ஆம் ஆண்டில், இம் மாநிலத்தில் ரூ. 408.25 கோடி செலவில் ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்ற மத்தியத் திட்டக்குழு ஒப்புதல் அளித்தது. ஆனால், குடியானவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடனைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு மாநில அரசு சிறப்பு நிதி உதவி அளித்த பின்னரும் இம் மாநிலத்தின் திட்ட சாதனை ரூ. 456.46 கோடியாக அமைந்தது. நடப்பு நிதி ஆண்டில் ரூ. 514 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டபோது, 1981–82 ஆம் ஆண்டிற்கான திட்டச்செலவு ரூ. 559.46 கோடியாக உயருமென மதிப் பிடப்பட்டது. புதிய திட்டங்களை மேற்கொண்ட தாலும் வேறு சில பொறுப்புகளை நிறைவேற்றிய தாலும் மாநிலத் திட்டச் செலவு ரூ. 625.53 கோடியாக உயரக் கூடும். அடுத்த நிதி ஆண்டிற்கு ரூ. 711 கோடி அளவிலான திட்டத்திற்கு மத்திய நிதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், நிறைவேறி வரும் திட்டங்களையும் அடுத்த நிதி ஆண்டில் மேற் கொள்ளக் கூடிய புதிய திட்டங்களையும் கருத்திற் கொண்டு, திட்டச் செலவு ரூ. 772.61 கோடி அளவில் இருக்குமென வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டிலும் மின் துறைக்கே மிக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு திருத்தத் திட்ட ஒதுக்கீட்டில் 26 சத வீதம் மின் துறைக்கு ஒதுக்கியிருக்க, அடுத்த நிதி ஆண்டில் மாநிலத் திட்ட ஒதுக்கீட்டில் இது 29 சத வீதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டு, திட்ட ஒதுக்கீட்டில் பல துறை களுக்கும் ஒதுக்கியுள்ள தொகை விவரம் வருமாறு: வேளாண்மையும் தொடர்புள்ள துறைகளும் ரூ. 171.54 கோடி; பாசனம் ரூ. 40.39 கோடி; மின்விசைத் துறை ரூ. 220 கோடி; தொழில்களும் கனிவளமும் ரூ. 42.07 கோடி; போக்குவரத்தும் சாலைகளும் ரூ. 63.23 கோடி; கல்வி ரூ. 29.64 கோடி; தொழில்நுட்பக் கல்வி ரூ. 5.99 கோடி; மருத்துவமும் பொதுச் சுகாதாரமும் ரூ. 27.56 கோடி; கழிவுநீரகற்றலும் குடிநீர் வழங்கலும் ரூ. 62.15 கோடி; வீட்டு வசதியும் நகர்ப்பகுதி வளர்ச்சியும் ரூ. 67.97 கோடி; ஆதி திராவிடர், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் நலன் ரூ. 21.41 கோடி; பிற துறைகள் ரூ. 20.66 கோடி.




### வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள்

**111.** இந்த நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது, திட்டச் செலவு களுக்கும் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளுக்கும் போதிய ஒதுக்கீடுகள் செய்வதில் கவனம் செலுத்தப் பட்டது. இருப்பினும், தொடக்கத்தில் ஒதுக்கியதை விட ரூ. 300 கோடிக்கு மேலாக சில கூடுதல் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்பாராத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த வறட்சிப் பணிகளுக்காக ரூ. 53·49 கோடி, தன்னிறைவுத் திட்டத்தை 150 வளர்ச்சி வட்டாரங்களில் நீட்டிப்பதற்காகக் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 44 கோடி, மின்சார வாரியம் குடிமைப் பொருள் வழங்கு நிறுவனம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றுக்காக வழங்கியுள்ள முன்பணங்கள் ரூ. 85 கோடி, கல்வித் துறை திட்டங்களுக்கான கூடுதல் செலவாகிய ரூ. 8 கோடி, மருத்துவத் துறைக்குக் கூடுதலாக ரூ. 6 கோடி, சாலைகள் அமைப்பதற்காகக் கூடுதலாக ரூ. 7 கோடி போன்றவை இச் செலவினங்களில் குறிப்பிடத் தக்கவையாகும்.

### நிதி நிலைமை.

**112.** 1981–82ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கை சென்ற ஆண்டு இந்த அவை முன் வைக்கப்பட்ட போது, ஆண்டு இறுதியில் ரூ. 122.96 கோடி அளவில் பற்றாக்குறை இருக்குமெனக் குறிப்பிடப்பட்டது. திட்ட நிதி ஒதுக்கீட்டினை ரூ. 560 கோடியிலிருந்து ரூ. 625.53 கோடியாக உயர்த்திய பின்னரும், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் விவசாயிகளுக்குச் சில சலுகைகள் அளித்த பின்னரும், மதுவிலக்குக் கொள்கை யைத் தளர்த்தியதால், வரி வருவாய் பெருகியது காரண மாக, இப் பற்றாக்குறை கணிசமான அளவுக்குக் குறைந்தது. 1981-82 ஆம் ஆண்டுக்குத் தற்போது தயாரித்துள்ள திருத்த மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1423.46 கோடியாகவும் செலவுகள் ரூ. 1297.83 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன; இதனால், ரூ. 125.63 கோடி உபரி இருக்கும். திருத்த மதிப்பீட்டின்படி மூலதனச் செலவு ரூ. 156.35 கோடியாக இருக்கும். கடன் கணக்கில் ரூ. 126.24 கோடி உபரி இருக்கு மெனவும், கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிகரச் செலவு ரூ. 172.66 கோடியாக இருக்குமெனவும் இப்போது கணக்கிடப்பட்டுள்ளது. மின்வாரியம், நுகர்பொருள் வாணிபக் கழகம், போக்குவரத்துக் கழகங்கள் முதலிய அரசுத் துறை நிறுவனங்களுக்குக் கூடுதல் கடன்களும் வழிவகை முன்பணங்களும் வழங்கிய தாலேயே கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிலைமை சீர்கேடுற்றது. இதன் நிகர விளைவு தொகுநிதியில் ரூ. 77.14 கோடி பற்றாக்குறை இருக்கும். பொதுக் கணக்கில் இருக்கிற ரூ. 68.98 கோடி உபரியைக் கணக்கில் கொண்டபின், இப் பற்றாக்குறை இப்போது ரூ. 8.16 கோடியாகக் குறைந்துள்ளது. ஆண்டுத் தொடக்கத்திலிருந்த பற்றாக்குறை ரூ. 9.61 கோடி, நடப்பு நிதி ஆண்டு பற்றாக்குறை ரூ. 8.16 கோடி ஆகியவற்றுடன் 1981–82 ஆம் ஆண்டு இறுதிக் கையிருப்பில் 17.77 கோடி பற்றாக்குறை இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

**113.** 1982–83-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டப்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1569.49 கோடி அளவிலும், செலவுகள் ரூ. 370.04 கோடி அளவிலும் உபரி ரூ. 199·45 கோடி அளவிலும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன. 1982–83-ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு ரூ. 165·25 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கடன் என்பதன் கீழ் நிகர வருவாய் ரூ. 118·91 கோடி கிடைக்கக்கூடும். கடன்களும் முன்பணங்களும் என்பதன் கீழ் நிகரச் செலவு ரூ. 323·99 கோடியாக இருக்கும். எனவே, தொகுநிதியில் நிகரப் பற்றாக் குறை ரூ. 170·88 கோடியாக இருக்கும். வருவாய்க் கணக்கில் கணிசமான அளவுக்கு உபரி இருந்தபோதிலும், எல்லாக் கணக்குகளிலுமாகச் சேர்த்துப் பார்க்கும்போது இந்த அளவுக்கு நிகரப் பற்றாக்குறை இருப்பதற்குக் காரணம், மாநில மின் வாரியத்திற்கு ரூ. 271 கோடி அளிக்க வகை செய்துள்ளதேயாகும். பொதுக் கணக்கில் கிடைக்கக்கூடிய உபரியான ரூ. 53·21 கோடியைக் கணக்கில் கொண்டால், இந்த ஆண்டில் ரூ. 117.67 கோடி பற்றாக்குறை இருக்கும். 1982–83 நிதி ஆண்டு தொடக்கப் பற்றாக்குறை ரூ. 17·77 கோடியாக இருப்பதையும் இவ்வாண்டுப் பற்றாக்குறை ரூ. 117,67 கோடியாக இருப்பதையும் சேர்த்துப் பார்த்தால், 1982–83-ஆம் ஆண்டிற்கான இறுதிக் கையிருப்பு நிலையில் ரூ. 135·44 கோடி பற்றாக்குறை இருக்கும்.

**114.** நடப்பாண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் ரூ. 9·57 கோடி பற்றாக்குறை இருக்குமென மதிப்பிட்டிருக்க, திருத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் ரூ. 1,27·51 கோடி உபரி இருக்குமென மதிப்பிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கலாம். அடுத்த நிதி ஆண்டிற்கான வருவாய் உபரி ரூ. 1,99·45 கோடியாக இருக்கக்கூடும். வருவாய்க் கணக்கில் கணிசமான அளவுக்கு உபரி இருந்தபோதிலும், நடப்பு ஆண்டு இறுதியில் எல்லாக் கணக்குகளுக்குமாகச் சேர்ந்துப் பார்க்கும்போது, மொத்தப் பற்றாக்குறை ரூ. 17·77 கோடியாக இருக்கக் கூடும். அடுத்த நிதி ஆண்டின் இறுதியில் இந்தப் பற்றாக்குறை ரூ. 1,35·44 கோடியாக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை இருப்பதற்கான காரணங்கள் வருமாறு ;

(அ) நடப்பாண்டுக்குத் தமிழ்நாடு மின்வாரியத்தின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட அளவு ரூ. 167 கோடியாகும். மின்வாரியம் இப்போது ஈட்டிவருகிற வருவாய், மின்சார நிலையங்களை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவுகளுக்கும் ஏனைய இன்றியமையாப் பொறுப்புகளைத் தீர்ப்பதற்கும் கூட போதுமானதாக இல்லை. மின்வாரியத்தின் பற்றாக் குறை முழுவதையும் தமிழ்நாடு அரசு ஈடு செய்ய இயலாவிட்டாலும், மின்வாரியத்திற்கு இவ்வரசு மிகப் பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம் விற்பனை செய்கிற ஒவ்வொரு டன் அரிசிக்கும் ரூ. 500 இழப்பு அடைகிறது. எனவே, அந்த நிறுவனத்திற்கு மாநில அரசு வழிவகை முன்பணம் அளித்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் அரிசி விற்பனையில் மட்டிலும் ரூ. 35 கோடி இழப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனது பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக, அந்த நிறுவனத்திற்கு இவ்வரசு இந்த நிதி ஆண்டில் ரூ. 25 கோடி வழிவகை முன்பணம் அளிக்க வேண்டியிருந்தது. இதுவரை மாநில அரசு அளித்துள்ள முன்பணத் தொகையில் ரூ. 65 கோடி நிலுவையாய் உள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1982ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை செலுத்த வேண்டிய



ரூ. 11·44 கோடி வட்டியைக் கூட செலுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த நிறுவனத்தால் 1980-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்தே அரசுக்கு வட்டி எதையும் செலுத்த முடியவில்லை.

(இ) பேருந்துப் பயணக் கட்டணங்களை உயர்த்தியிருந்த போதிலும், மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் தங்களுடைய நடப்புப் பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்க்கவும், அன்றாடச் செலவுகளைச் செய்யவும் இயலவில்லை. அந்த நிறுவனங்களும் நிதி உதவி செய்யுமாறு அவ்வப்போது இவ்வரசை வேண்டியுள்ளன.

(ஈ) தன்னிறைவுத் திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் பெரும் பயன் அடைந்துள்ளனர் என்பது தெளிவானதால், கடந்த நிதியாண்டில் 69 வட்டாரங்களில் மட்டுமே இத்திட்டம் செயல்பட்டிருக்க, இப்போது இத்திட்டத்தை 150 வட்டாரங்களில் விரிவாகச் செயல்படவைக்க பெருஞ் செலவு செய்ய வேண்டியுள்ளது.

(உ) வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக மத்திய அரசு ஒதுக்கிக் கொடுத்துள்ள தொகைக்குக் கூடுதலாகச் செலவாகிய தொகை முழுவதையும் மாநில நிதியிலிருந்தே பெறப்படுகிறது.

**115.** இக் காரணங்களை முன்னிட்டு, நடப்பாண்டு இறுதியில் ரூ. 17.77 கோடி பற்றாக்குறையாக இருக்கக் கூடும். அடுத்த நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மிகப் பெரும் அளவில் துண்டு விழுந்துள்ளதற்கு முக்கிய காரணம், தமிழ்நாடு மின் வாரியத்தின் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கும், அந்த நிறுவனத்தின் ஏனைய பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கும் தேவைப் படும் அதிக அளவு நிதிக்கு அந்த வாரியம் மாநில அரசையே முழுதும் நம்பியுள்ளதுதான். முன்னரே சொல்லியுள்ளவாறு, மின்விசைத் துறைக்கு 1982–83ஆம் ஆண்டில் திட்ட ஒதுக்கீடு ரூ. 220 கோடியாக உள்ளது. திட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 220 கோடியைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளாமல் பார்த்தாலும், இப்போதுள்ள மின் கட்டண வீதங்களின்படி, மின் வாரியத்திற்கு 51 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும். எனவே, 1982–83ஆம் ஆண்டிற்கு மின்வாரியத்திற்குத் தேவைப் படுகிற தொகை மலைக்கத் தக்க அளவுக்கு ரூ. 2,71 கோடியாக அமையும். இத் தொகையைப் பெற மின் வாரியம் மாநில அரசையே முழுதும் நம்பியுள்ளது. மின்வாரியத்திற்கு இந்த அளவுக்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்றால், இம் மாநிலத்தில் முற்போக்கான புதிய திட்டங்களையும் பணிகளையும் மேற்கொள்ள முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்குணர்வர். இந்த நாட்டிலேயே மிகக் குறைந்த கட்டணங்களில் ஒன்றாக அமைந்துள்ள தமிழ் நாடு மின் கட்டண விகிதங்களால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை மின்வாரியம் சந்திக்க வேண்டியுள்ளது. மத்தியத்



திட்டக் குழு பலமுறை வற்புறுத்தி ஆலோசனை கூறியுள்ளபடி, தமிழ்நாடு மின்வாரியம் தனது நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்கு மட்டுமின்றி, நிதி வசதியின்மை காரணமாக நிறைவேற்றப்படமுடியாம லிருக்கும் இன்றியமையாத பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாநில அரசு தன் சொந்த நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தக் கூடிய சூழ் நிலையை உருவாக்கவும், மின்சாரக் கட்டண விதங்களை உயர்த்து வதைத் தவிர வேறு வழியில்லை. இந் நிலையில், தமிழ்நாடு மின்சார வாரியம் மின் கட்டண விதங்களைத் திருத்தியமைப்பது குறித்து மீண்டும் பரிசீலனைசெய்வது தவிர்க்கமுடியாத அவசரத் தேவை, என்று நான் கூறுவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வர் என உறுதியாக நம்புகிறேன்.

### பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவு

*" பெறுமவற்றுள் யாம் அறிவ தில்லை அறிவறிந்த மக்கள்பே றல்ல பிற "*

என்பது வள்ளுவனார் வாக்கு. நாளைய நம்பிக்கை நட்சத்திரங்களாகத் திகழும் குழந்தைச் செல்வங்கள் வீட்டுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் பெரும் அருட் கொடை. ஏழ்மைக் கோட்டுக்குக் கீழேயுள்ள பல குடும்பங்களில் குழந்தைக்குப் பிசைந்து ஊட்டுவதற்குச் சோறு இல்லாமல், கை பிசைந்து, கண் கலங்கி அன்னைகள் நிற்கும் அவல நிலையைப் போக்க சிறிதேனும் முயற்சி செய்வது அரசின் அவசர, அவசிய கடமை என்பதை இந்த அரசு உணர்கிறது. இந்த அடிப்படையில், 2 முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு, மதியம் ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதற்கு வகைசெய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 1982 ஜூலைத் திங்கள் முதற்கொண்டு தமிழ்நாடு முழுவதிலுமுள்ள, ஒரு வேளை உணவுக்கும் வழியின்றித் தவிக்கும் மிக ஏழ்மையிலுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத் திட்டம் மேற்கொள்ளப்படும். மாநிலம் முழுவதிலும் பரவலாக உள்ள ஏழைக் குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் அமுது ஊட்டும் இந்த அறப்பணியில் அரசுக்குத் துணை நின்று ஒத்துழைப்பு நல்க, தாராள சிந்தை கொண்ட பெருந்தகைகளும், தொண்டாற்றி அனுபவம் கொண்ட சமூக நிறுவனங் களும் முன்வர வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**117.** இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ரூ. 100 கோடி நிதி வசதி தேவைப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அந்த நிதி வசதியை ஓரளவுக்குப் பெறும் பொருட்டு, வரி விதிப்பில் சில மாற்றங்களை இவ்வரசு செய்ய விழைகிறது :—

(அ) சமுதாயத்தில் வாய்ப்பு வசதியுள்ள மக்களே கைத்தறிப் பட்டுத் துணிகளைப் பெரிதும் பயன் படுத்துகிறார்கள். எனவே, கைத்தறிப் பட்டுத் துணிக்கு 5 சத வீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்க இவ்வரசு கருதுகிறது.

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத் தின் 41ஆவது இனத்தின்கீழ் வருகிற மின்சாரப் பொருள்களுக்கும் 41 (A) இனத்தின்கீழ் வருகிற மின்சாரக் கருவிகள், சாதனங்கள் முதலியவற்றிற்கும் இப்போது 9 சத வீதமாக இருக்கிற விற்பனை வரி 10 சத வீதமாக உயர்த்தப்படும்.

(இ) இறக்குமதி செய்யப்படுகிற வெளிநாட்டு மது வகைகளுக்கும் இந்தியாவில் தயாரிக்கப்படுகிற வெளிநாட்டு மது வகைகளுக்கும் விற்பனை வரி வீதம் 25 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப் படும்.

(ஈ) மோட்டார் வண்டிகளின் பகுதிகளுக்கும் துணை உறுப்புகளுக்கும் விற்பனை வரி வீதம் 13 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாக உயர்த்தப் படும்.

(உ) இப்போதுள்ள 4 சத வீத பலமுனை விற்பனை வரி 5 சத வீதமாக உயர்த்தப்படும்.

(ஊ) மோட்டார் வண்டிகளுக்குப் பயன்படுத்தப் படுகிற டயர்களுக்கும் டியூப்களுக்கும் விதிக்கப்படுகிற விற்பனை வரி 10 விழுக்காட்டிலிருந்து 12 விழுக் காடாக உயர்த்தப்படும்.

(எ) வர்த்தகம்-வணிகக்குறி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட பெயருடன் விற்கப்படும் பிஸ்கோத்துகள், சாக்கலெட்டுகள், மிட்டாய் வகைகள், போன்றவற்றிற்கு இப்போதுள்ள 6 விழுகாட்டிற்குப் பதிலாக 10 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

(ஏ) மின் சக்தியினால் இயக்கப்படும் இயந்திரங்கள் மீதான விற்பனை வரி 6 விழுக்காட்டிலிருந்து 8 விழுக் காடாக உயர்த்தப்படும்.

(ஐ) சிமிட்டி விற்பனை மீது இப்போது விதிக்கப் படுகிற 10 சத வீத வரி 12 சத வீதமாக உயர்த்தப் படும்.

(ஒ) விசைத் தறிகளில் பயன்படுத்துவதற்காக கூம்பு வடிவில் விற்கப்படுகிற பருத்தி நூலுக்கும் கலவைப் பருத்தி நூலுக்கும் இப்போதுள்ள 3 சதவீத வரி 4 சத வீதமாக உயர்த்தப்படும்.

**118.** சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களான ஏழை பாழைகளே மண்ணெண்ணெயைப் பெரிதும் பயன் படுத்துவதால், மண்ணெண்ணெய் மீதான விற்பனை வரியை 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைப்பதென முடிவு செய்துள்ளோம்.

விற்பனை வரியில் செய்யப்பட்டுள்ள இந்த மாற்றங் கள் 1982-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயலுக்கு வரும்.

**119.** தற்போதுள்ள நகர் மனை வரி 1971ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 1ஆம் நாள் அன்று நிலத்திற்கிருந்த நிலவர மதிப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. 1981ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1ஆம் தேதி யன்று இந்நிலங்களுக்குள்ள நிலவர மதிப்பை கணக் கிட்டு புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் நகர் மனை வரி விதிக்கப்படும். நகர் மனை வரிச் சட்டத்தின் விதி முறைகள் மேலும் 16 நகரங்களுக்கு விரிவாக்கப்படும். மேற்சொன்னவற்றிற்கு வகை செய்யும், சட்ட வரைவுக்கு சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும்.

**120.** நாட்டில் நிலவிவரும் பணவீக்கத்தாலும், விலை யேற்றத்தாலும், குறைந்த ஓய்வூதியமாகிய ரூ. 100 மாதந்தோறும் பெற்றுவருபவர்களின் வாழ்க்கை நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற இந்தப் பிரிவினருக்கு உதவும் வகையில் குடும்ப ஓய்வூதியம்

உட்பட குறைந்தபட்ச ஒய்வூதியத் தொகையைத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 125 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சலுகையால் 43,500 ஒய்வுபெற்ற அரசு அலுவலர்கள் பயனடைவார்கள்.

**121.** முதியோர் உதவித் தொகை பெறுவோர் சமுதாயத்தில் வறுமையில் வாடும் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது. இப் பிரிவினருக்கும் அரசின் உதவி தேவையாக உள்ளது. சுமார் 2 இலட்சம் பேர் முதியோர் உதவித் தொகை, விதவைகள் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை, விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை ஆகிய திட்டங்களினால் பயன் பெறுகின்றனர். இவர்கள் தற்போது திங்கள்தோறும் பெறும் தொகையான ரூ. 25, ரூ. 35 ஆக உயர்த்தப்படும். இவர்கள் தொடர்ந்து அரிசியும், ஆடைகளும், கூட்டப்பட்ட உயர்த்தப்பட்டுள்ள இந்த உதவித் தொகையுடன் பெற்று வருவார்கள். ஆதரவற்ற நிலையில் சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் வாடும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவைகள், 45 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்கள், 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள், கண்பார்வையற்ற அனைவர், ஆகியோர் அடங்கிய இரண்டு இலட்சம் பேர் இந்தக் கூடுதல் தொகை அளிப்பதன்வாயிலாகப் பயன் பெறுவார்கள்.

**122.** எரி பொருள்கள் விலை, போக்குவரத்துச் செலவுகளின் உயர்வுகளுக்கு ஏற்ப அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயணப் படி, தினப் படி, நிலையான பயணப் படி ஆகியவை உயர்த்தப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது. இதற்கான ஆணைகள் தனியாக வெளியிடப்படும்.

**123.** குறைந்தபட்ச ஒய்வூதியம், முதியோர் உதவித் தொகை, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயணப் படி, தினப் படி, நிலையான பயணப் படி ஆகியவற்றில் அளித்துள்ள சலுகைகள் 1982ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் அமுலுக்கு வரும்.

**124.** வரி அமைப்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் மாற்றங்களினால் வரும் ஆண்டில் ரூ. 38 கோடி அரசுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அரசு அலுவலர்களுக்கும், ஒய்வூதியம், உதவித் தொகை பெறுவோருக்கு அளித்துள்ள சலுகைகளால் ரூ. 7 கோடி கூடுதலாகச் செலவாகும். ஆகவே, வரும் ஆண்டில் நிகர வருவாய் ரூ. 31 கோடி அளவில் உயரும். இரண்டு முதல் பத்து வயது வரையிலுள்ள சிறுவர், சிறுமியருக்கு உணவு அளிக்கும் திட்டத்தை நடத்த அரசுக்கு ரூ. 100 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இதனால், ஏற்கெனவே வரவு-செலவுத் திட்டத்தில் இருக்கும் பற்றாக்குறையான ரூ. 1,35.44 கோடி ரூ. 2,04.44 கோடியாக மேலும் உயரும்.

**125.** ஏழ்மைக் கோட்டிற்குக் கீழேயிருந்து போதுமான வாழ்க்கை வசதிகளைப் பெறமுடியாமல் அவதியுறுகின்ற மக்களின் துயரைப் போக்கவேண்டியிருக்கிறது. சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பின்தங்கி நலிந்து கிடக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடப்பாடும் அரசிற்கு இருக்கிறது. அரசிற்குப் பல்வேறு வகைகளிலும் வரிகளையும் வரியில்லா வருமானத்தையும் செலுத்துகின்ற மக்கள் தங்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்று பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். இந்த நோக்கங்களை இன்றைய அரசு ஓரளவுக்கு நிறைவேற்றி வருவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறது என்றாலும், மக்கள் மன நிறைவு கொள்ளத்தக்க அளவுக்கு முழுவதையும் நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்குப் பொருளாதார தட்டுப்பாடே காரணமாக அமைந்திருக்கிறது.

**126.** அரசு வகுக்கும் கொள்கைகளையும் தீட்டும் திட்டங்களையும் நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு, அரசு அலுவல்களிலும், அரசு சார்பான அலுவல்களிலும் பணிபுரிவோர்களிடம் இருக்கிறது. அவர்களின் முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நம்பியும், எதிர்பார்த்துத்தான் இந்த அரசு இயங்கி வருகிறது. அவர்களில் பெரும் பகுதியினரும் விரும்பித் தருகின்ற ஒத்துழைப்பினால்தான், அரசு தன் கடமைகளைச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நிறைவேற்ற முடிகிறதென்பதை நன்றி உணர்வோடு கூறிக்கொள்கிறேன். மேலே குறிப்பிடப்பட்டவை போன்ற பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலைகள், பல்வேறு வகைகளில் அரசை வாட்டி வந்தாலும், அரசு, மற்றும் அரசுச் சார்பான அலுவல்களில் பணிபுரிவோர்களின் நலன்களைக் காப்பதில், பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப, நியாயத் தன்மை அடிப்படையில் அவ்வப்போது ஏற்ற முடிவுகளைத் தமிழக அரசு எடுத்து வருகிறது. அரசு, மற்றும் அரசுச்சார்பான அலுவல்களில் பணிபுரிவோர்கள் அனைவரும் நாட்டின் நிலையையும் அரசின் பொருளாதார நிலையையும் கருத்திற்கொண்டு, தொண்டுள்ளத்தோடு அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்க் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பணியாளர்கள், மற்றும் சில தொழிலாளர் பிரிவினர்கள் பல கோரிக்கைகள் வைத்துள்ளனர். பட்டினி கிடக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளைக்காவது உணவளிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். எல்லோருடைய பிள்ளைபாச உணர்வின் முன் வைக்கிறேன். அவர்கள் சில காலம் பொறுத்திருந்தால், நிதி நிலை உயரும்போது அவர்களது கோரிக்கைகளைப் பற்றிப் பேசி நல்ல முடிவிற்கு வருவோம். இதை நல்ல நம்பிக்கையோடு ஏற்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**127.** நீர்நிலைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரில் ஒரு பகுதியை நீர்நிலைக்குப் பாதிப்பு இல்லாமல் கதிரவன் எடுத்துச் சென்று, பின்னர் நாடு முழுவதும் பரவலாகப் பயன்படும் முறையில் மழையாகப் பொழிவதைப் போன்றதுதான் ஒரு அரசு குறிப்பிட்ட இனங்களிலே வரி வசூல் செய்து, அதனை நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படுகின்ற வகையில் பரவலாகச் செய்வதும் ஆகும் என்று பெருங் கவி காளிதாசர் தமது சிறந்த காவியமான இரகுவம்சத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில்தான் கூடுமான வரையில் தாங்கக் கூடிய இனங்களின் மீது வரி வசூல் செய்து, நாட்டுமக்களுக்குப் பரவலாகப் பயன் அளிக்கும் பல்வேறு திட்டங்களின் மூலம் இந்த அரசு செலவு செய்து வருகிறது.

**128.** '' வசதி படைத்தோரிடமிருந்து தட்டி எடு ; ஏழைகளைத் தட்டிக் கொடு '' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய நல்லுரையை ஏற்று, இந்த அரசு அதனை நிறைவேற்றி வருகிறது என்பதற்கு, நிதி நிலை அறிக்கையே சான்றாகும்.

**129.** தமிழகத்தின் வளர்ச்சி நிலையையும், பொருளாதாரச் சூழ்நிலைகளையும், நாம் எதிர்நோக்கும் விளைவுகளையும் நிதி நிலைகளையும் அவையினரிடம் இந்த அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளேன். அவை உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிதி நிலை அறிக்கையை ஏற்று, உறுதுணையான பரிந்துரைகளை வழங்கி, தமிழ்நாடு வளம் பெறவும், தமிழ்நாட்டு மக்கள் மேம்பாடு எய்தவும், உரிய கருத்துக்களைத் தெரிவித்து, அரசின் முயற்சிகளுக்குப் பேருதவி புரியுமாறு அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**130.** இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான உதவியையும் ஒத்துழைப்பையும் தந்த நிதித் துறைச் செயலாளர் திரு கே.ஜே.எம். ஷெட்டி அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று செயலாற்றிய அதிகாரிகள்-அலுவலாளர்கள் ஆகிய அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**131.** 1982–83ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை ஏற்குமாறு அவையினரை மீண்டும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதித் துறை

# தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம், 1982–83

சுருக்கம்

| விவரம். (1) | 1980–81 கணக்குகள். (2) | 1981–82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1981–82 திருத்த மதிப்பீடு. (4) | 1982–83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிக் கணக்கில்) | | |
| I. தொகு நிதி— | | | | |
| வருவாய்க் கணக்கில் வரவுகள் | 12,79·96 | 11,28·27 | 14,23·46 | 15,69·49 |
| வருவாயிலிருந்து செய்யப்பட்ட செலவு | 11,52·25 | 11,37·84 | 12,97·83 | 13,70·04 |
| வருவாய்க் கணக்கில் உபரி அல்லது பற்றாக்குறை | (+)1,27·71 | (—)9·57 | (+)1,25·63 | (+)1,99·45 |
| மூலதனக் கணக்கில் வரவுகள் | 2,11.28 | 2,89·96 | 2.78·96 | 3,00·01 |
| கடன்கள், முன்பணங்கள் உட்பட மூலதனத்திலிருந்து செய்யப்பட்ட செலவு (நிகரம்) | 4,20·51 | 4,34.35 | 4,81·73 | 6,70.34 |
| மூலதனக் கணக்கில் உபரி அல்லது பற்றாக்குறை | (—)2,09·23 | (—)1,44·39 | (—)2,02·77 | (—)3,70·33 |
| மொத்த தொகு நிதி (நிகரம்) | (—)81.52 | (—)1,53·96 | (—)77·14 | (—)1,70·88 |
| II. எதிர்பாராச் செலவு நிதி (நிகரம்) | (—)1·38 | .. | .. | .. |
| III. பொதுக் கணக்கு (நிகரம்) | (+)81·13 | (+)42·47 | (+)68·97 | (+)53·21 |
| நிகர வரவு-செலவுகளின் மொத்தம் (I+II+III) | (—)1·77 | (—)1,11·49 | (—)8·17 | (—)1,17·67 |
| தொடக்க இருப்பு | (—)7·83 | (—)11·47 | (—)9·60 | (—)17·77 |
| இறுதி இருப்பு | (—)9·60 | (—)1,22·96 | (—)17·77 | (—)1,35·44 |



# நாளும் வளரும் நல்வாழ்வுப்பணிகள்

மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர்
## திரு. எச். வி. ஹண்டே



அன்பிற்குரிய தமிழக மக்களே,

'வளரும் தமிழகம்' என்ற இந்தத் தலைப்பில், தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் குடும்பநலப் பணிகள் குறித்து உங்களுக்குப் பல விவரங்களைச் சொல்வதில், நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாடு பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது என்று சொல்லுகின்ற நேரத்தில், மருத்துவம் மற்றும் குடும்ப நலப் பணிகளிலும் நாம் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதனைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். நம் நாட்டைப் பொறுத்த வரையில் மொத்தமக் கட்தொகையில் பெரும்பகுதியினர் கிராமப் புறங்களிலேயே வாழ்கின்றனர். அம்மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகளை அளித்து அவர்களது வாழ்க்கையை உயர்த்துவது நம் தலையாய கடமையாகும். தமிழகத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. 1981-82ஆம் ஆண்டில் கூடுதலாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கிளை நிலையங்கள் பல உள்ளன. இந்தக் கிளை நிலையங்கள் ஏறக்குறைய 2,000க்கு மேல் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மூன்று மருத்துவர்களும், மற்றும் தேவையான மருத்துவப் பணியாளர்களும் உள்ளனர். கி.பி. 2000க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு (Alma Atta by 2,000 A.D) என அறிவித்திருப்பதை நிறைவேற்ற நாம் கிராமப்புறங்களில் அதிக அளவு ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்தாக வேண்டும். அதன்படி, 50,000 மக்கட்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவு நாம் ஏற்படுத்த வேண்டும். தற்போது இயங்கிவரும் 403 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தவிர ஏறக்குறைய 300க்கு மேற்பட்டவைகளை நாம் ஏற்படுத்த வேண்டும்.

கிராமங்களில் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் நடமாடும் மருத்துவக் குழுக்கள், (Mobile Medical Team) அமைக்கப்படுகின்றன. இந்த நடமாடும் மருத்துவக் குழுக்கள் சிறு கிராமங்களுக்குச் சென்று அந்தந்த கிராமங்களில் வாழும் மக்களுக்கு அவர்களது வீட்டின் அருகிலேயே மருத்துவ சிகிச்சைகள் செய்கின்றன. சிறு கிராமங்களில் வாழும் மக்கள் வெகு தூரத்திலுள்ள மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருப்பதினால், அவர்களது இல்லங்களுக்கு அருகிலேயே இந்த நடமாடும் மருத்துவக் குழுக்கள் (Mobile Medical Team) சென்று சிகிச்சை அளிக்கின்றன.

தற்போதுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிகப்படுத்துகின்ற அதே நேரத்தில், இந்த நிலையங்களுடைய தரத்தையும் மேம்படுத்துவதற்கும் நாம் முயற்சி எடுத்துள்ளோம். அதன்படி, கடந்த ஆண்டு தமிழகத்தில் 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை 20 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனைகளுடைய தரத்திற்கு உயர்த்தியுள்ளோம். இதன்மூலம் கிராமப்புற மக்கள் அதிக வசதிகள் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மருத்துவ சுகாதார நிலையங்கள் இல்லாத சிறுகிராமங்களில் சிறு மருத்துவ நிலையங்களைத் (Mini health centres) திறக்க அரசு ஊக்கம் அளித்து வருகிறது. இதில் சேவை நிறுவனங்களின் (Voluntry service) ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகின்றது. இந்த சிறு மருத்துவ நிலையங்களுக்கு (Mini health centre) உரிய செலவில், 50 சதவிகிதத்தை சேவை நிறுவனங்கள் ஏற்றால் மீதமுள்ள 50 சதவிகிதத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. ஏறக்குறைய 5,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதிக்கு, ஒரு சிறு மருத்துவ நிலையம் என்ற அடிப்படையில் இந்த நிலையங்கள் திறக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இதுவரை இதுபோல் 190 நிலையங்கள் திறந்து செயல்பட்டு வருகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்பம் மற்றும் தாய் சேய் நலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பிரிவினர் தகுதியுள்ள தாய்மார்களுக்குத் தேவையான ஆலோசனை மற்றும் வசதிகள் அளிப்பதுடன், பிறந்த குழந்தைகளுக்கு நலமுடன் வாழத் தேவையான வசதிகளையும் வழங்குகின்றன.

அடுத்து, நகர்ப்புறங்களைப் பற்றியும் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன். மாவட்டத் தலைமை மருத்துவமனை, தாலுகா தலைமை மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துதல், புதிய மருத்துவப் பிரிவுகளை அமைத்தல் முதலிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. Paediatric ward, Dental wing, Ophthalmic wing, Ortho wing, and E. N. T. wing.

போன்ற அனைத்து மருத்துவ வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

ஆங்கில முறை மருத்துவத்தைத் தவிர சித்தா, ஹோமியோபதி, ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவ முறைகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றன. சித்த வைத்தியப் பிரிவு ஏராளமான மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 150க்கு மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த வைத்தியப் பிரிவுகள் உள்ளன. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சமீபத்தில் அறிவித்த புதிய 20 அம்சத் திட்டத்தில் 14வது பிரிவில் காசநோய்த் தடுப்பு, தொழுநோய்த் தடுப்பு, கண் சிகிச்சை ஆகியவை குறித்துக் குறிப்பிட்டுள்ளார்கள். இத்துறையில் தமிழகம், தனி கவனம் செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விரும்புகிறார்கள்.

கண் சிகிச்சையைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு முகாம்கள் மூலம் 3,000 மற்றும் அரசு மருத்துவமனைகள் மூலம் 30,000 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிகிச்சை பெற்றவர்களுக்கு இலவசக் கண்ணாடிகளும் வழங்கப்படுகின்றன. தொழுநோய் தடுப்புத் திட்டத்தில் புதுமுனைப்புடன் பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். குறிப்பாக தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும், பரிசோதனை செய்யத்திட்டமிடப்பட்டு திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 5.5 இலட்சம் மாணவர்களில், 3.4 இலட்சம் மாணவர்களுக்கு 1981-82 கல்வியாண்டில் இதுவரை பரிசோதனை நடத்தப்பட்டு உள்ளது. அதில் 3000 மாணவர்களுக்குத் தொழுநோய் ஆரம்ப கட்டத்திலுள்ளது என்பதைக் கண்டு பிடித்துள்ளார்கள். தொழுநோய் பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டங்களில் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது. தமிழகத்தில் தொழுநோய் அதிகமாக உள்ள மாவட்டங்களில் செங்கற்பட்டும் ஒன்று. இங்கு, பரிசோதனை மற்றும் தீவிர தடுப்புப் பணித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நேரடியாகச்சென்று பரிசோதனை நடத்தியும், பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்தும் நவீன வசதி அளிக்கப்பட்டு வருகிறது. வாரம் ஒன்றிற்கு ரூபாய் 30- மதிப்புள்ள மருந்துகள் ஒரு நோயாளிக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

காசநோய்க்கு உள்ள மருத்துவமனைகளைத் தவிர அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாலுகா மருத்துவ மனைகளில், இதற்கெனத் தனிப்பிரிவு செயல்படுகின்றது. பெரு நகரங்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளிலும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை நாம் செய்து வருகின்றோம். சென்னையில் பொது மருத்துவ மனையில் 45 இலட்சம் ரூபாய் செலவில் C. T. Scanner என்ற கருவி கடந்த ஆண்டு நிறுவப்பட்டது. அண்மையில் கிரிக்கெட் பந்தயம் நடைபெற்ற போது 'வெங்சர்க்கார்' என்னும் விளையாட்டு வீரர் தலையில் அடிபட்டு, அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இங்கு இவருக்குச் சிகிச்சை அளிக்க இந்தக் கருவி மிகவும் உதவியாக இருந்தது என்பது மட்டுமல்லாமல் நமக்குப் பாராட்டுதலையும் அவர்கள் தெரிவித்தார்கள். இது தமிழகத்தினுடைய தனிச் சிறப்பாகும். இருதய அறுவைச் சிகிச்சை சென்னை அரசு பொது மருத்துவமனையில் பெருமளவு செய்யப்படுகின்றது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அரசு, நோயாளிகளிடம் பணம் பெறாமல் Open heart surgery செய்கிறது. ஒரு நோயாளிக்கு இந்த அறுவைச் சிகிச்சை செய்ய சுமார் ரூபாய் 15,000 முதல் 20,000 வரை செலவாகும் என்று கணக்கிடப்படுகிறது.

சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் கடந்த ஆண்டு முதன்முறையாக 'சிறுநீரகம் மாற்றும் ( Kidrey Transplantation ) சிகிச்சை' செய்யப்பட்டது. இது போன்று பல்வேறு மருத்துவப் பிரிவுகளின் மூலம், நவீன மருத்துவ வசதி, ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செய்யப்பட்டு வருகின்றது.

ஆசியாவிலேயே பெரிய 'புற்று நோய் நிலையம்' தமிழகத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் உலக வங்கி ஒத்துழைப்புடன் சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கரங்களால் துவக்கப்பட்டது. அது தற்போது செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது.

சித்தா, ஆயுர்வேதா, யோகா, இயற்கை வைத்திய முறைகளை ஊக்குவிக்கவேண்டி இந்திய மருத்துவத் துறை ஒன்று தமிழகத்தில் இயங்கி வருகின்றது. 'அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ முறை மருத்துவமனை' சென்னையிலும், அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டையிலும் இயங்கி வருகின்றன. சென்னையில் 'சித்தா, யுனானி முறைகள் பின்பற்றப்பட்டு அந்தச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பாளையங்கோட்டையில் சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய மருத்துவ முறை சிகிச்சையினை ஊக்குவிப்பதற்காக தாலுகா மருத்துவமனையிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டு வருகின்றன. இந்திய மருத்துவத்திற்கு அவசியமான மூலிகைக் காடுகள் வளர்க்க அரசு ஊக்கம் அளித்து வருகிறது. பழைய சுவடிகளைச் சேகரித்து, இந்திய மருத்துவ முறைகள் பற்றிய புத்தகங்களை இந்தத் துறை வெளியிடுவதற்கு, அரசு பெரிதும் உதவி செய்து வருகிறது.

நகரத்திலுள்ள மக்களுக்குக் கிடைக்கும் சிறந்த மருத்துவ வசதிகள் போல், கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணத்தின் அடிப்படையில், சென்னை, கோவை, மதுரை போன்ற பெரு நகரங்களிலுள்ள மருத்துவ நிபுணர்களைத் தாலுகா மருத்துவ மனைகளுக்கு அனுப்பி அவர்களின் சிகிச்சை, கிராமப்புற மக்களுக்கும் எட்டும் வண்ணம் இன்றைய தமிழகம் சிறந்த பணியினை ஆற்றி வருகிறது.

சாலை விபத்துக்களிலும், மற்றும் தீ விபத்து போன்ற விபத்துக்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக முதலுதவி அளிப்பதற்காக ஒரு திட்டத்தை 1979ல் வகுத்து இத்திட்டம் படிப்படியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

இது போன்ற பல்வேறு விதமான மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கின்ற நேரத்தில், மருத்துவ மனைகளில் தூய்மையாகவும் சுத்தமாகவும் இருக்க, பொதுமக்கள் மற்றும் அரசு மருத்துவப் பணியாளர்கள் முதலியோர் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

# 1982-83- ஆம் ஆண்டு

# நிதி நிலை அறிக்கை

# சிறப்புக் கூறுபாடுகள்

1982—83-ஆம் ஆண்டுக்கு 68 லட்சம் டன் அரிசியும், 23.50 லட்சம் டன் சிறு தானியங்களும் 4.80 லட்சம் டன் பயறு வகைகளும் உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப் பெற்றுள்ளது.

200 ஏக்கரில் விதைப் பண்ணைகள் இரண்டு, 80 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கத் திட்டம்.

60 லட்ச ரூபாய் செலவில் விதை பதப்படுத்தும் நிலையம் 3 உருவாக்கத் திட்டம்.

புதிய இடங்களில் விதைப் பண்ணை வளர்ச்சிப் பணிகள்.

கிராமப்புறக் கிடங்குத் திட்டத்தின் கீழ் 62 லட்ச ரூபாய் செலவில் 62 கிடங்குகள் உருவாக்கப்பட இருக்கின்றன.

40 கோடி ரூபாய் அளவிற்கு, தேங்காய் உற்பத்தியைப் பெருக்கத் திட்டம்.

கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்திற்காக 30 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கீடு.

கால்நடைகளுக்காக 25 புதிய மருந்தகங்கள் தொடங்கும் திட்டம்.

மத்திய அரசின் உதவியுடனும் இங்கிலாந்து நாட்டின் கூட்டு முயற்சியுடனும் 3 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் வெக்கை நோய் ஆய்வுக் கட்டுப்பாட்டிற்குரிய முன்னோடித் திட்டம்.

50,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட பால்பண்ணை ஒன்றும் குளிரூட்டு நிலையங்கள் இரண்டும் திருநெல்வேலியில் அமைக்கத் திட்டம்.

புதுக்கோட்டையில் 9.5 லட்ச ரூபாய் செலவில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட உள்ளது.

மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் 10 00 வாங்குவதற்கு 11.30 லட்ச ரூபாய் உதவித் தொகை.

1982—83ஆம் ஆண்டில் வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் 20,000 ஆதி திராவிடர்கள் உறுப்பினர்களாக்கப்படுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் - இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க மைய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறையிலும் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட உள்ளது.

காயல் பகுதிகளில் 300 ஹெக்டேர் பரப்பளவில், இறால் பண்ணைகளை 2.60 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் திட்டம்.

சுவீடன் நாட்டில் உள்ள அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் 108 கோடி ரூபாய் செலவில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்.

வடஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள ஏரிகளை உரிய தரத்திற்குக் கொண்டுவரும் பணிக்காக ரூ. 3 கோடி ஒதுக்கீடு.

1981-ஆம் ஆண்டுவரை 9.3 லட்சம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு. 1982—83 ஆம் ஆண்டுக்கு, மேலும் 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்புத்தர இலக்கு.

ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் மின்வசதி.

5 இடங்களில் புதிய தொழில் தொகுதிகள் உருவாக்கப்பட உள்ளன. அங்கு, முதல் 5 ஆண்டுக் காலத்திற்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிப்பு.

மேலும் 6 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள் என அறிவிக்கப் பெறுவதுடன், மேற்படி வட்டங்களில் புதிய தொழில்கள் தொடங்குவதற்குச் சலுகைகள் அளிக்கப்படும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIIC) நடப்பு ஆண்டில் அளிக்கும் கடன் உதவி ரூ. 45 கோடி; 1982—83-ல் 60 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி அளிக்க இலக்கு.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பணிகள் விரிவுபடுத்தப்படும்.

அரசுத் துறையில் மூன்றாவது சிமிண்ட் ஆலை நிறுவும் திட்டம்.

சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் மாக்னசைட் கற்களை நன்றாக சுடப்பட்ட மாக்னசைட் கற்களாக மாற்றுவதற்கு ஏறக்குறைய 5 கோடி ரூபாய் செலவில் சுழற் காளவாய் ஒன்று அமைக்கும் திட்டம்.

மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்ய வெப்பந் தாங்கிக்கல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கத் திட்டம்.

மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரூ. 220 கோடி ஒதுக்கீடு. சிறு புனல் மின் உற்பத்தித் திட்டங்கள் 3, ரூபாய் 11.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

திருத்தணியில் புதிய சர்க்கரை ஆலை, புதுக்கோட்டை மாவட்டத்தில் மேலும் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

சிவகெங்கையில் கிராபைட் செறிவுச் சாலையும், சென்னையில் கறுப்புக் கல்வெட்டி மெருகேற்றும் தொழிற்கூடமும் அமைக்க ஏற்பாடு.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் விநியோகிக்கும் பொருள்களின் மதிப்பு 18 கோடி ரூபாயிலிருந்து 24 கோடியாக உயர்த்தப்படும்.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் முசுக்கட்டை பயிரிடும் பரப்பு நடப்பு ஆண்டில் 48 ஆயிரம் ஏக்கருக்கு உயரும். 1982—83-ல் மேலும் 8 ஆயிரம் ஏக்கர் கூடுதலாகும். 40 ஆயிரம் பேர் கூடுதலாக வேலை வாய்ப்புப் பெறுவர்.

6000 உழவர்களும் 2000 நெசவாளர்களும் பயிற்சிபெற 20 லட்ச ரூபாய் மதிப்பில் கட்புல விளக்கப்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும்.

கதர் கிராமத் தொழில் வாரியம் அடுத்த நிதியாண்டில் 64 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யவும், ரூபாய் 70 கோடிககு விற்பனையை விரிவாக்கவும் திட்டம்; ஏறக்குறைய 35 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு!

18,000 கைவினைஞர்களுக்கு ரூ. 7 கோடி அளவுக்கு நிதி உதவி.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கைத்தறி வளர்ச்சிக்கு 84.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

700 ஆதி திராவிட நெசவாளர் பயன் பெறப் புதிய நெசவுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும்.

மூன்று புதிய கூட்டுறவு நூற்பாலைகள் 21 கோடி ருபாய் மூலதனத்தில் தொடங்கும் திட்டம். புதிய ஆலைகளின் மூலமும் தற்போதுள்ள ஆலைகளின் மூலமும் உற்பத்தித் திறனளவு உயர்த்தப்படுவதன் மூலம் 3000 பேருக்கு வேலை வாய்ப்பு

தறிநூல் தட்டுப்பாட்டைத் தவிர்க்க இந்திய அரசின் நிதி உதவியுடன் இணை மானிய அடிப்படையில் மூலப் பொருள் சேமிப்பு வங்கி உருவாக்கத் திட்டம்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்றுமுதல், நடப்பு நிதி ஆண்டில் 65 கோடி

ரூபாயாக இருக்கும். மேலும், ஒரு கோடி ரூபாய் பங்கு மூலதன உதவித் தொகையாக மத்திய அரசின் உதவியுடன் வழங்கப்பட உள்ளது.

1982—83-ல் தமிழக வீட்டு வசதி வாரியத்தின் மூலம், 8,830 குடும்பங்களுக்கு வீட்டு வசதி அளிக்கப்படும்.

1982—83-க்கு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக, 3,500 குடியிருப்புகள் உருவாக்கும் இலக்கு.

ரூ. 18 கோடி செலவில் 31 புதிய சாலைகள் அமைக்கும் புதிய திட்டத்திற்கு அனுமதி. நீலகிரி மாவட்டச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ 6 கோடி செலவில் அனுமதி. 1982—83-ல் 10 கோடி ரூபாய் செலவில் புதிய பணிகளைச் செயல்படுத்தல்.

குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் புதிய சாலை அமைக்க ரூ. 11.07 கோடி ஒதுக்கீடு.

வேலூரில் பட்டுக்கோட்டை அழகிரி பெயரிலும், ஈரோட்டில் ஜீவா பெயரிலும், நாகர்கோவிலில் நேசமணி பெயரிலும், காரைக்குடியில் மருதுபாண்டியர் பெயரிலும், போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 1982—83-ல் இவை செயல்படத் துவங்கும்.

தேசிய கிராமப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு ஜனவரி 1982 வரை 30 கோடி ரூபாய் மதிப்புள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன

கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் பாறைக்குச் சென்றுவர நடைபாதை கட்டுவதற்கு முடிவு.

நடப்பு நிதி ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்திற்கு 89 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. 1982—83-க்குள் 97 கோடி ரூபாய் செலவிடப்படும்.

பேரூராட்சிகளுக்கும், போதிய நிதி உதவியற்ற நகராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்த 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

உலக வங்கி உதவியுடன் 78 நகரங்களில் குடிநீர் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இராமேஸ்வரம் மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலா இடங்களை மேம்படுத்தப் பெருந்திட்டங்கள்; இவற்றிற்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரியுள்ள போதிலும், அதற்காகக் காத்திராமல் மாநில அரசால் படிப்படியாக செயல் படுத்தப்படுகின்றன.

4433 பாலவாடிகளில் பாலர் கல்விப் பிரிவு தொடங்கப் பெறுதல்.

இடைநிலை ஆசிரியர் பதவி 1000, தமிழாசிரியர் பதவி 500, உடற்பயிற்சி ஆசிரியர் பதவி 150, உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி 50, பி.எட். நிலை ஆசிரியர் பதவி 300 புதிதாக ஏற்படுத்தப்படும்.

1982—83-ல் 67 மேல்நிலைப் பள்ளிகளில் 167.50 லட்சம் ரூபாய் செலவில் வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்படும்.

ஆதிதிராவிட இனத்து மாணவர்களுக்கு மேல்நிலைப் பள்ளியில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

முறைசாராக் கல்வி நிலையம் 50, தொடர் கல்வி நிலையம் 122 கூடுதலாகத் தொடங்கப் பெறும்.

அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் வசதிகளைப் பெருக்கிக்கொள்ள 62 லட்ச ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

கிராமப்புற விளையாட்டு நிலையங்கள் 150 கூடுதலாக உருவாக்கப்படும்.

பள்ளி செல்லும் (5 முதல் 11 வயதுள்ள) மாணவாகளின் உடல் நலப் பரிசோதனைத் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் அனைத்துத் தகவல்களும் அடங்கிய சுகாதார அட்டை வழங்கப்படும்.

சென்னையில் உளள குழந்தைகள் மருத்துவ மனையில் தற்போது 250 படுக்கைகள் உள்ளன. இவை, 500 படுக்கைகளாக உயர்த்தப்படும் இதற்கு, ரூபாய் 173.24 லட்சம் செலவிடப்படும்.

15 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 140.49 லட்ச ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாகத் தரமுயர்த்தப்படும்.

1.5 கோடி ரூபாய் செலவில் தஞ்சாவூர், மதுரை மருத்துவ மனைகளில் தலை உறுப்பை முப்பரிமாணத்தில் படம் பிடிக்கும் கருவி (Scanner) வாங்கி அமைக்கப்படும்.

சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் விபத்து அவசரப்பணித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் 10-ல் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு பாளையங்கோட்டை இந்திய மருத்துவ மனைக் கல்லூரியில் அமைக்கப்படும்.

கிராமப்புற மக்களின் பற்களைப் பாதுகாக்கச் சிறப்புத் திட்டம்.

பாம்புக் கடியால் அவதியுறும் மக்களுக்குச் சிகிச்சை தரும் சிறப்பு திட்டம்.

35 கோடி ரூபாய் செலவில் சேலம், தென்னார்க்காடு ஆகிய இடங்களில் 3,640 கிராமப்புற குடியிருப்புப் பகுதிகளில் 18 லட்சம் பேர்களுக்குக் குடிநீர் வசதித் திட்டம்.

ஏறத்தாழ 51,443 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிராமப்புற நெசவுத் தொழில் நிலையங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை ரூபாய் 8.04 கோடி செலவில் புதிதாக ஏற்படுத்துவதன்மூலம் 10,384 ஆதி திராவிடக் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் திட்டம்.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1980—81-ல் ஆதிதிராவிடர்களுக்கு 34,510 வீடுகள் வழங்கப்படுகின்றன.

ரூபாய் 357.94 லட்சம் மதிப்பீட்டில் மாணவர் விடுதிகள் 51 கட்டுவதற்கும், ரூபாய் 200.65 லட்சம் மதிப்பீட்டில் மாணவியர் விடுதிகள் 27 கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பின் தங்கிய இனத்து மாணவர்களுக்காக 40 விடுதிகள் கட்டப்படுகின்றன.

குடிநீர், இணைப்புச்சாலை, மின்வசதி, சுகாதாரம், கல்வி முதலிய வசதிகளை, 1982—83-ல் செய்து கொடுப்பதற்கு 114 கோடி ரூபாய் செலவிடப்படும். இதனால் 1.66 லட்சம் ஆதிதிராவிடக் குடும்பங்கள் பயன்பெறும்.

ஆதிதிராவிடர் நலனுக்காக குழாய்க் கிணறுகள் 2000 நிறுவப்படும்

1982—83-ஆம் ஆண்டுக்கு சிறுவர் நல் வாழ்வு மையங்கள் 200 அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது..

செவி கேளாதோர்க்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

25 லட்ச ரூபாய் செலவில் உடல் ஊனமுற்றோருக்கு, சிறப்புப் பள்ளிகள் 5 அமைக்கப்படும்.

29,028 ஆதி திராவிடர்களுக்கு 32,351 ஏக்கர் நிலங்கள் ஒப்படைசெய்யப்பட்டுள்ளன.

நிலப்பதிவு ஏடுகளில், நில உரிமையாளர் பற்றிய விவரங்கள் எழுதி வைக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு.

மண்ணெண்ணெய் மீதான விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

குடும்ப ஓய்வூதியம் உட்பட, குறைந்தபட்ச ஊதியம் 100 ரூபாயிலிருந்து 125 ரூபாயாக்கப்படுகிறது. ஓய்வூதியம் பெறுவோர் 43,500 பேர் இதன்மூலம் பயன் பெறுவர்.

முதியோர் உதவித் தொகை ரூ. 25 லிருந்து 35 ஆக உயர்த்தப்படுகிறது. இதன் மூலமாக 2 லட்சம் பேர் பயன் பெறுகின்றனர்.

மதிய உணவுத் திட்டத்தின் கீழ், 2 வயது முதல் 10 வயது வரையுள்ள ஏழைக் குழந்தைகளுக்குத் தமிழக அரசு இலவசமாக பகல் உணவு அளிக்கும் திட்டம் ஜூலை 1-ஆம் நாள் முதல் அமல் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு ரூ. 100 கோடி நிதிவசதி அளிக்கப்படும்.

எரிபொருள்கள் விலை, போக்குவரத்துச் செலவுகளின் உயர்வுக்கு ஏற்ப அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி, தினப்படி, நிலையான பயணப்படி ஆகியவை ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் உயர்த்தப்படுகிறது.



# ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பகல் உணவு



## 100 கோடி ரூபாயில் ஒரு புரட்சித் திட்டம்

ஆட்டை சொல்லும் செய்தி

சின்னஞ்சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
. . . . . . . . . . . . .
பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே

என்றெல்லாம் குழந்தைகளை வர்ணித்துப் போற்றியுள்ளார் பாரதியார். சின்னஞ்சிறுசுகளின் நல்வாழ்வில்தான் உலகத்தின் செழிப்பே அடங்கியுள்ளது என்று புறநானூறு கூறுகிறது.

இந்த உண்மைகளை எல்லாம் உணர்ந்த தமிழக அரசு 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஏழைச் சிறு குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தில் சில முன்னேற்றப்படிகளை அறிமுகம் செய்துள்ளது.

நாளைய நம்பிக்கை நட்சத்திரங்களாகத் திகழும் குழந்தைச் செல்வங்கள் அவலமுறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக 2வயது முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதற்கு 100 கோடி ரூபாயில் ஒரு திட்டம் வகுக்கப்பெற்றுள்ளது. ஒருவேளை உணவுக்கும் வழியில்லாமல் தவிக்கும் மிக ஏழ்மையிலுள்ள குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் வாயிலாக மதிய உணவு இலவசமாக வழங்கப்படும். சூலைத் திங்கள் முதற்கொண்டு இத் தொண்டு நடைபெற உள்ளது.

இந்தத் திட்டம் குறித்து மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சட்ட மன்ற மேலவையில் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

''இந்தத் திட்டம் முழுக்க முழுக்கப் பெண்கள் பொறுப்பேற்று நடத்தும் திட்டமாக இருக்கும். இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்பட ஒவ்வொருவருடைய யோசனையும் பயன்படுத்தப்படும்.

''இந்தத் திட்டத்தில் 2 வயதில் இருந்து 10 வயது வரை என்று ஏன் கொண்டுவந்தோம் என்றால், 2 வயதிலிருந்து பள்ளிக்குப் போகும் வயது வரை குழந்தைகள் தங்களை மறந்து, எந்த சாதி மக்களோடு உட்கார்ந்து சாப்பிடுகிறோம் என்று தெரியாத சூழ்நிலை ஏற்படுத்தப்படும். சாதி உணர்வு நீங்க இந்தத் திட்டம் பயன்படும்.''

---



## டெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழா

**1982** ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ம் நாள் டெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் தமிழ்நாட்டின் சார்பில் அனுப்பப்பட்ட மூன்று கிராமிய நடனக் குழுக்களில் (காவடி ஆட்டம், கரக ஆட்டம்) மாரியம்மன் நடன கலைக் குழுவினை இந்திய பாதுகாப்பு அமைச்சக வல்லுநர் குழு தேர்வு செய்ததின் அடிப்படையில் இக்கலை நிகழ்ச்சி மதுரையைச் சேர்ந்த திரு வேலு குழுவினருடன் (31 பேர்) பங்கேற்றது.

29.1.82 அன்று காலை பிரதமர் இல்லத்திலும், உள்துறை அமைச்சர் இல்லத்திலும், அக்னி சட்டியுடன் நடனம் நடத்தப்பட்டது. கலைக்குழுவினரைப் பாராட்டி பரிசுகளும் வழங்கப்பட்டன.

# இருவழி நன்மைகள்!



எச். பி. என். ஷெட்டி, இ.ஆ.ப.,
ஆணையாளர், அரசுச் செயலாளர்,
ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித்துறை

வேளாண்மை வீரர்களான விவசாயிகளுக்கு மற்றும் கிராமப்புற மக்களுக்கு இன்று பெரும் பிரச்சனையாக உள்ளவை, இரண்டு. ஒன்று, நிலத்திலிடுவதற்கு இயற்கை உரம். மற்றொன்று எரிபொருள். இரசாயன உரங்கள் தாராளமாகக் கிடைத்தாலும் கூட, அவைகளுடன் இயற்கை உரத்தையும் இட்டால்தான் விளைச்சல் சிறப்பாக அமைகிறது என்பது உண்மை. மேலும் எரிபொருள்களுக்கு விறகுகளையும், மண்ணெண்ணெய்யையுமே நம்பி இருக்க இயலா நிலை தற்போது உருவாகியுள்ளது.

கால்நடைகளின் சாணங்களை எரிபொருளாகப் பயன்படுத்தினால் எஞ்சுவது சாம்பல் மட்டுமே. எனவே எரிபொருள் தேவை தீர்க்கப்படும்போது, இயற்கை உரமான சாணம் கிடைப்பதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது. எனவே எரிபொருள் தேவையைத் தீர்க்கும் அதே வேளையில் இயற்கை உரத்தையும் பாதுகாக்கும் இருவழி நன்மைகளை அடையக் கண்டு பிடிக்கப்பட்டதுதான் சாண எரிவாயு அமைப்பு. எனவே நாடெங்கிலும் மக்கள் இத்தகைய அமைப்புகளை நிறுவிப் பயன்பெறும் வகையில் சாண எரிவாயு அமைப்பினை நிறுவும் திட்டம் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய நாடெங்கும் மொத்தம் நான்கு இலட்சம் எரிவாயு அமைப்புகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் தமிழகத்திற்கான இலக்கு 40000- அமைப்புகள். மேலும் இதன் முதற்படியாகத் தமிழகத்தில் 1982 மார்ச்சுத் திங்களுக்குள் 3500 அமைப்புகள் நிறுவ வேண்டுமென்பது இலட்சியம்.

இத்திட்டம் அண்மையில் இந்தியத் தலைமை அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய 20 அம்சத் திட்டத்திலும் முக்கிய இடம் வகித்துள்ளது.

இத்தகைய சாண எரிவாயு அமைப்புகளை நிறுவுவதற்கான செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. மேலும் சாண எரிவாயு அமைப்பினை நிறுவ ஆகும் செலவு பற்றிய விவரம் வருமாறு:—



| அமைப்பின் அளவும்-அது ஒரு நாள் உற்பத்தி செய்யும் வாயுவின் அளவும் | தேவைப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை | தேவைப்படும் ஈரச்சாணத்தின் அளவு (கி.கி) | சமையல் மூலம் பயன் பெறும் நபர்களின் எண்ணிக்கை | செலவு |
|---|---|---|---|---|
| கன மீட்டர் (கன அடி) | | | | |
| 2 (70) | 3-4 | 30-45 | 5-8 | ரூ [illegible]50.00 |
| 3 (106) | 4-5 | 45-50 | 8-12 | ரூ 2250.00 |
| 4 (140) | 5-7 | 55-60 | 12-16 | ரூ 2910.00 |
| 6 (210) | 7-10 | 80-100 | 16-20 | ரூ 3760.00 |

இவ்வமைப்பினை நிறுவுவதற்கான மொத்தச் செலவில் 25 முதல் 33 சதவிகிதம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் சாண எரிவாயு அமைப்பினை அறிமுகப்படுத்தும் கூட்டு நிறுவனம் அல்லது அரசைச் சார்ந்த நிறுவனம் ஓர் அமைப்பிற்கு ரூ. 200 என்ற அளவில் மானியம் வழங்கும். சாண எரிவாயு அமைப்பினை மக்களிடையே பிரபலப்படுத்தி, அமைப்பை நிறுவ முன்வருவோரை அழைத்து வரும் ஊர் நல அலுவலருக்கு ஓர் அமைப்பிற்கு ரூ. 30 என்ற வீதத்தில் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. இவை தவிர்த்து, அமைப்புகளை நிறுவுவதற்குத் தேவைப்படும் அனைத்துத் தொழில் நுட்ப உதவிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மேலும் இவ்வமைப்புகளை நிறுவுவதற்குத் தேவையான முன்பணத்தை அரசுடமை வங்கிகளிலிருந்து கடனாகப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மொத்தத்தில், சாண எரிவாயு அமைப்பினை அமைப்பது எளிது. அதன் பயனோ மிக அதிகம். வாயு வந்த பின்பு எஞ்சியிருக்கும் சாணம் நல்லதொரு சத்துரம். பாத்திரங்களைக் கரியாக்காமல், வீடுகளில் புகை சூழாமல், அடுப்பு எரிக்கவும், விளக்கு எரிக்கவும், பயன்படும் சாணஎரிவாயு அமைப்பினை நிறுவுவதில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டுவார்கள் என்பது அரசின் எண்ணம். இன்றே எரிவாயு அமைப்பினை அமைத்து பயன்பெறுவீர்.

உங்கள் ஊரிலுள்ள ஊர்நல அலுவலரை அணுகினால், சாண எரிவாயு அமைப்பதற்குரிய வழிமுறைகளைக் கூறி உங்களுக்கு உதவ அவர் காத்திருக்கிறார்.



# நன்னீர் இறால் பண்ணை

-விநாயகம்

தமிழ்நாடு மீன்துறையின் சார்பில் செங்கல்பட்டில் நன்னீர் இறால் பண்ணைத் திறப்பு விழா 26-2-82 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு மீன்துறைஇயக்குநர் திரு சி. செல்லப்பன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:

கட்டுமரம் விசைப் படகு மூலம் $2\frac{1}{4}$ இலட்சம் டன் மீன் பிடிக்கப்படுகின்றது. இதை 3 இலட்சம் டன்னாக உயர்த்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

பவானிசாகரில் நன்னீர் இறால் வளர்ப்புப்பற்றி ஆராய்ச்சி நடத்தப்படுகின்றது.''

செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். ஜே. ராமச்சந்திரன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''நல்ல தண்ணீரில் இறால் வருவதில்லை என்று இதுவரை நினைத்து வந்தேன். இப்பொழுதுதான் முதன் முறையாகப் பார்க்கின்றேன்.

செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு ஆனூர் பு.கே. ஜகதீசன் அவர்கள் உரையாற்றுகையில் கூறியதாவது;

''ஓராண்டுக் காலம் தொடர்ந்து முயற்சி செய்து இந்த இறால் பண்ணையை இங்கு ஏற்படுத்தித் தந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறால் பண்ணையையும், மீன்துறை ஆய்வாளர் அலுவலகத்தை தையும் திறந்து வைத்து மாண்புமிகு நிதி, மீன்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியாவது:

நன்னீர் இறால் பண்ணையை நல்ல முறையில் உருவாக்க முடியும் என்பதற்கு இந்தப் பண்ணை ஒரு எடுத்துக்காட்டாகும்.

''நாம் வாங்கிய இரு கப்பல்கள் மூலம் கடந்த ஆண்டு ஜூலை முதல் போன மாதம் வரை ரூ.34 இலட்சத்திற்கு மீன் பிடித்தல் மூலம் பணம் பண்ணியுள்ளது. ஜப்பானிலிருந்து இங்கு வந்து நமது கடற்கரையில் ஜப்பானியர்கள் மீன் பிடிக்கிறார்கள் என்றால் இங்கு எவ்வளவு மீன் உணவுகள் கிடைக்கின்றன என்பது தெளிவாகின்றது.

''இங்கு அமைக்கப்பட்டுள்ள குளங்கள் ஒவ்வொன்றும் சுமார் 80அடிx135 அடி அளவில் அடைக்கப்பட்டுள்ளன. இதன் பரப்பளவு 1.1 ஏக்கராகும். இங்கு அமைக்கப்பட்டுள்ள 3 குளங்களின் மூலம் வளர்க்கப்படும் இறால் மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 15,000 வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

''இந்த இறால் பண்ணையின் நிர்வாகம் செங்கை மாவட்ட மீன்துறை ஆய்வாளரின் நேரடிப் பார்வையின் கீழ், ஒரு மேற்பார்வையாளர், ஒரு காவல்காரர் மற்றும் ஒரு மீனவரைக் கொண்டு செயல்படுத்தப்படும்.''

இவ்விழாவில் சிறப்புரை ஆற்றுவதற்கு முன் மாண்புமிகு நிதி, மீன்துறை அமைச்சர் அவர்கள் கடலோர மீனவர் சங்கங்களுக்கு டிரான்சிஸ்டர்களை வழங்கினார். சுத்திவாக்கம் மீனவர்களுக்கு நைலான் வலைகளும் வழங்கப்பட்டன. சாலான்குப்பம் சங்க உறுப்பினர்களுக்கு வீடுகளுக்கான ஒப்பந்தப் பத்திரங்களும் திருச்சினாங்குப்பம் மீனவ மகளிர்களுக்கு தையல் இயந்திரங்கள் குடிமனைப்பட்டாக்கள் ஆகியயவை வழங்கப்பட்டன. முதியோருக்கு உதவித் தொகைகளும் வழங்கப்பட்டன.

விழா இறுதியில், சென்னை மண்டல மீன்துறை இயக்குநர் திரு எம்.வி. நடராஜன் அவர்கள் நன்றி கூறினார்.



# தோட்டக்கலைக் கண்காட்சி



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்களின் துணைவியார் திருமதி நிர்மலா காளிமுத்து பரிசு பெறுகிறார்

-மருது

சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் 27,28 பிப்ரவரி 1982 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்ற தோட்டக்கலைக் கண்காட்சியினை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறையும், சென்னை மாவட்ட ஆட்சியாளரின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்தன.

ஐந்தாவது முறையாக நடைபெறும் இந்தத் தோட்டக்கலைக் கண்காட்சி, சுற்றுலாப் பொருட்காட்சியில் ஆண்டுதோறும் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

இவ்வாண்டு நடைபெற்ற தோட்டக்கலைக் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்கள் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகளில் கனிகள், காய்கறி வகைகள், கிழங்குகள், மலர்கள் ஆகியவை அடங்கும். 1,350 பலவகையான பொருட்கள் இவ்வாண்டு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 1,100 தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 440 தனி நபர்களும் 15 நிறுவனங்களும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்றனர்.

இவ்வாண்டு, கடந்த ஆண்டுகளைவிட அதிக அளவில் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதால், சீரான முறையிலும் கவர்ச்சியுடனும் கண்காட்சியில் அவை வைக்கப்பட்டிருந்தன.

முதன் முறையாக, தோட்டக்கலை குறித்த ஓவியங்களும் பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.





பொருட்காட்சியில், சிறப்புமிக்க அம்சங்கள் — ஏழு அடி நீளமுள்ள புடலங்காய், மூன்றரை அடி நீளமுள்ள முருங்கைக்காய், 25 கிலோ எடையுள்ள கருணைக் கிழங்கு மற்றும் இனிப்பான மரவள்ளிக்கிழங்கு.

28—2—82 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இக் கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். விழாவிற்கு தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகத் தலைவர் திரு துரை கோவிந்தராசன் அவர்கள் தலைமை தாங்கினார்.

இவ்வாண்டு அளிக்கப்பட்ட பரிசுகளில் கோப்பைகள், சுழற் கேடயங்கள், மற்றும் தோட்டக்கலை நிபுணர்கள் எழுதிய புத்தகங்களும் இருந்தன.

| | |
|---|---|
| முதற்பரிசு : | மரவள்ளிக்கிழங்கு லயோலாக் கல்லூரி சென்னை. |
| முதற்பரிசு : | முருங்கைக்காய் திரு செல்லப்பன், இயக்குநர் மீன்வளத்துறை சென்னை. |
| முதற்பரிசு : | கருணைக்கிழங்கு திரு ஏ. சத்திய நாதன், விழுப்புரம் தாலுகா. |
| முதற்பரிசு : | செயலாளர், சி. ஜி. எஸ். எஸ் பண்ணை, சென்னை — 96. |




புத்தொளிக்கோர்
அற்புத சக்தி
கோபுரம்
சலவை சோப்பு
அப்பழுக்கின்றி அழுக்கை அகற்றி
வெண்மை பளிச்சிடச் செய்கிறது.
அதிக துணிகளை வெளுப்பதால்
லாபமும் அதிகம்.
நீங்களும் உபயோகியுங்கள்
மற்ற சலவை
சோப்புகளைவிட
மிகக் குறைந்த
விலை!
பார் 500 கி.
ரூ. 3.50
எல்லா காதி கிராப்ட்களிலும் கிடைக்கும்
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
''குறளகம்'', சென்னை-600 001.
உங்கள் அருகில் உள்ள காதி கிராப்டுக்கு வருகை தந்து
இதர இல்லத் தேவைகளையும் வாங்கி பயன்பெறுங்கள்.
ELEGANT



# தக்க தருணத்தில் தகுந்த இரத்தம் தந்திட....

நடுத்தர வயதுள்ள ஒருவர், கவலை தோய்ந்த முகத்துடன் வருகிறார்.

அங்கு இருந்த அம்மையார் ஒருவரிடம், ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு அமைதியின்றிக் காணப்படுகிறார்.

அம்மையார், அலமாரியிலிருந்த பதிவேட்டைக் கொண்டு வந்து அவசர அவசரமாகப் புரட்டுகிறார்.

''இடையில் இருப்பது ஒரு நாள் தான்.. எப்படியும் உதவி புரியுங்கள்..'' என்று வந்தவர் பரிதாபமாகக் கேட்கிறார்.

''நிச்சயமாக! நாங்கள் அதற்காகத்தானே இருக்கிறோம்...'' அம்மையார் அனுதாபத்துடன் பதில் சொல்கிறார்.

கடிதத்துடன் வந்தவரின் சகோதரருக்கு அறுவைச் சிகிச்சை அதுவும் இருதய அறுவைச் சிகிச்சை!

அறுவைச் சிகிச்சை, பிப்ரவரி 20-ந் தேதி சென்னை அரசினர் பொது மருத்துவமனையில்... அதற்கு 8 புட்டிகள் ''ஓ'' பிரிவு இரத்தம் வேண்டுமாம்.

பிப்ரவரி 18ந் தேதி பகல் பன்னிரண்டு மணிக்கு, தன் சகோதரருக்கு இரத்தம் வேண்டும் என்று வந்திருக்கிறார் அவர்.

இடையில் இருப்பது ஒரே ஒரு நாள்தான்!

**பி.வி.கிரி**

எட்டுப் புட்டிகள்.. புத்தம் புதிய இரத்தம்....

''இதோ, தயார்!'' என்று பதிவேட்டைப் புரட்டிய அம்மையார் சொன்னதும், வந்தவரின் முகத்தில் நம்பிக்கை ஒளி தெரிகிறது.

ஆம். சென்னை இரத்ததான சேமிப்பு நிலையம் (Madras Voluntary Blood Bank) ஒன்று 1975 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் மனமுவந்து இரத்த தானம் செய்ய முன்வருவோர்கள் மற்றும் முன்வந்தவர்களின் முழு முகவரியினைப் பதிவு செய்து வைத்துள்ளது. யாருக்கேனும் இரத்தம் தேவைப்படும் என்றால், இவர்கள் ஏற்கெனவே இரத்தம் கொடுத்தவர்களின் முகவரிகளைத் தருகிறார்கள். அந்த வகையில்தான் அந்த நடுத்தர வயதுக்காரர், இரத்ததானம் பெற அங்கு வந்திருந்தார்.

சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள ,டி.டி. கிருஷ்ணமாச்சாரி கம்பெனிக்குள் நுழைந்தால், அமைதி தவழும் அழகிய நூலகம் ஒன்றைப் பார்க்கலாம். அங்குதான் இந்த நிலையம் செயல்படுகிறது.

முழுவதும் பெண்களாலேயே நிர்வகிக்கப்படும் இந்த நிலையம் சமுதாய நலப்பணிகளிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, கண்ணொளி தருவதுபோன்று,





**அதிக அளவில் இரத்த நன்கொடையாளர்களை அனுப்பிய சென்னை அசோக் லேலண்டு நிறுவனத்திற்கு, சென்னை மாவட்ட ஆட்சியாளர் திருமதி சி. கே. கரியாலி அவர்கள் கேடயம் வழங்குகிறார்.**

உயிர்காக்கும் உயரிய தொண்டினை ஆற்றி வருகிறது.

**இந்த வங்கியின் முத்தான மூன்று நோக்கங்கள்:**

1. மிக முக்கியமான தேவையுள்ளவர்களுக்கு, இரத்தம் சுலபமாகக் கிடைக்கச் செய்தல்.
2. பணத்துக்காக இரத்த தானம் செய்பவர்களைப் பொருட்படுத்துவதைத் தவிர்த்து, ஆரோக்கியமான இரத்தம் கிடைக்கச் செய்தல்.
3. மக்களின் பொறுப்புத் தன்மையை மேலோங்கச் செய்தல், தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்வதை ஊக்குவித்தல். மற்றும் இரத்தம் தருவது பற்றிய பயத்தைத் தவிர்த்தல்.

இதன் ஒரு அங்கமான, கிடைத்தற்கரிய ரத்தப் பிரிவைச்சேர்ந்த நன்கொடையாளர்கள் சங்கம் (Rare blood group Donars club) ஒன்று 1977 குடியரசு நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

சாலை விபத்துக்களின்போதும் கீழே விழுந்து அடிபடும்போதும் அறுவைச் சிகிச்சையின்போதும் மகப்பேற்றின் போதும் நோயாளிக்கு இரத்தம் தேவைப்படுகிறது.

தக்க தருணத்தில் தகுந்த இரத்தம் கொடுத்தால்தான், நோயாளியின் உயிரை நாம் மீட்க முடியும். அது 'உயிர்ப் பிச்சை தருவது போல' என்று கூட நாம் சொல்லலாம்.

சாலை விபத்தொன்றில் ஒருவர் அடிபட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் ... அவருக்கு நிறைய இரத்தம்



**திருமதி மனோ பக்தவத்சலம்**

வேண்டியிருக்கும். அதுவும் 'ஏ' அல்லது 'பி' இப்படி ஏதாவது ஒரு பிரிவு இரத்தம் தேவைப்படும்: அல்லது 'ஆர்எச் நெகட்டிவ் குரூப்' இரத்தமும் தேவைப்படலாம். இந்த வகையான இரத்தம் மருத்துவமனையில் இருந்தால் சரி, இல்லையென்றால்?

யாரும் தலையைச் சொரிந்து கொண்டிருக்க வேண்டாம். நேரே இந்த நிலையத்துக்கு வர வேண்டியதுதான் மறு வேலை. உடனே, அவர்கள் உங்களுக்குத் தேவையான பிரிவு இரத்தம் உள்ளவரின் முகவரியைத் தருவார்கள். அவரை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குப் போகவேண்டும். அவ்வளவு தான்!

**இந்த நிலையம் இரத்தத்தை எப்படி சேமிக்கிறது?**

இது, மாதந்தோறும் இரத்த தானம் வழங்கும் முகாம் ( Blood donation camp ) ஒன்றை நடத்துகிறது. இந்த முகாமை பயனுள்ள வகையில் நடத்துவதற்கு, அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, அரசினர் கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, அரசினர் பொது மருத்துவமனை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனைகளைச் சேர்ந்த, இத்துறையில் பயிற்சி பெற்றவர்கள் உதவி புரிகிறார்கள்.

உதாரணமாக, குரோம்பேட்டையிலுள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகப் பயிற்சிப் பள்ளியில், மாதந்தோறும் முகாம் நடத்தப்படுகிறது. அவர்களில் பெரும்பாலோர் மனமுவந்து இரத்ததானம் செய்கிறார்கள். இதேபோல மணலியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, எண்ணூர் அசோக்

லேலண்டு, பாரத ஸ்டேட் பாங்க், இந்தியன் வங்கி, லூகாஸ், டி.வி. எஸ்.—இங்கெல்லாம் இந்த நிலையம் அவ்வப்போது முகாமிட்டு இரத்த தானம் பெறுகிறது.

முகாமிடுவதற்கு முன்பு இந்நிலையச் செயலாளர் திருமதி சாந்தி ரங்கநாதன் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலரைச் சந்திக்கிறார். அதாவது சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் - தொழிற்சாலைகள், கல்லூரிகள் இங்கெல்லாம் சென்று, இரத்த தானம் வழங்குவதன் அவசியத்தை விளக்குகிறார். இரத்த தானத்தால் எந்தவிதத் தீமையும் இல்லை என்பதனைத் தெளிவுபடுத்துகிறார். பிறகு இந்தப் புனிதமான - சமுதாயத் தொண்டில் ஈடுபட விரும்புகிறவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். அதன் பிறகு ஒருநாள் குறிப்பிட்டு முகாமிற்கு ஏற்பாடு செய்கிறார்கள். குறைந்தது 20 பேராவது இரத்த தானம் செய்ய முன்வந்தால்தான், முகாமே நடத்தப்படுகிறது.

அலுவலகங்களின்றி கல்லூரிகளும் இந்தப் பணியில் ஈடுபடுகின்றன. கோடம்பாக்கத்திலுள்ள ஐ.ஐ.டி., தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரி, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகியவற்றிலும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. உயிர் காக்கும் உயரிய பணியில், படிக்கும் பருவத்திலேயே மாணவமணிகள் இரத்ததானம் வழங்க முன்வருவதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும்.

இரத்தம் தர முன் வருபவர்களுக்கு ஒரு அடையாள அட்டை கொடுக்கப்படுகிறது. அதில், இரத்தம் தருபவரின் இரத்தப் பிரிவு, பெயர், இல்ல முகவரி, அலுவலக முகவரி, தொலைபேசி எண் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் மருத்துவரின் சான்றிதழ் ஒன்றும் அதில் இணைக்கப்பட்டிருக்கும். இரத்த தானம் செய்பவர், ஒவ்வொரு முறையும் இரத்தம் தரும்போது, இந்த அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

இதுவன்றி, இந் நிலையத்தில் இரத்தம் வழங்குபவர் பற்றிய பதிவு அட்டை ஒன்றும் ஒழுங்காகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதில், இரத்தம் வழங்குபவர் பற்றிய மேற்கண்ட தகவல்களுடன் பிறந்ததேதி, வேலை, திருமணமானவரா இல்லையா என்ற விவரம், எடை, இரத்த அழுத்தம்போன்ற பல தகவல்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.



இதுவரை, தாமே முன்வந்து இரத்த தானம் செய்துள்ளவர்கள் - எந்த நேரத்திலும் இரத்த தானம் செய்யக்கூடிய நன்கொடையாளர்கள் எத்தனைப் பேர் தெரியுமா! 17,000 பேர்!

சுமார் 500 முகாம்கள் நடத்தியதன் மூலம், 12,000 புட்டிகள் இரத்தத்தை இந்த நிலையம் சேமித்து இலவசமாக அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளது. இவ்வாறு இது சுமார் 80% இரத்தத்தை அரசு மருத்துவமனைக்குத் தாமே முன்வந்து வழங்கியிருப்பதைப் பெருமையுடன் குறிப்பிட வேண்டும்.

1976ஆம் ஆண்டில் 2172 பேர்களும், 1977ல் 2480 பேர்களும், 1978ல் 2541 பேர்களும், 1979ல் 3380 பேர்களும், 1980ல் 3373 பேர்களும், 1981ல் 3564 பேர்களும் இரத்த தானம் செய்துள்ளார்கள். இவ்வாறு இரத்த தானம் செய்துள்ளவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு கூடியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

இந்நிலையத்தின் துணைத்தலைவர்களில் ஒருவரான திருமதி மனோ பக்தவத்சலம் அவர்கள் கூறுகிறார்:

''சென்னை அரசு பொதுமருத்துவமனையிலிருந்தும், பெரம்பூர் இரயில்வே மருத்துவமனையிலிருந்தும் இரத்தம் வேண்டும் என்று கோரிக்கைகள் அதிகம் வருகின்றன. அவர்களுக்கெல்லாம் நாங்கள் சளைக்காமல் உதவி வருகிறோம். ''அரிதான இரத்தப் பிரிவைச் சேர்ந்த சுமார் 250 பேர்களின் முகவரிகளும் எங்களிடம் உள்ளன.

''வறுமையின் காரணமாகச் சிலர் இரத்தத்தைக் காசுக்கு விற்கிறார்கள். அப்படி விற்பவர்கள் தங்கள் இரத்தத்தை விற்கவேண்டும் என்ற எண்ணத்தில், தங்களது உடலில் உள்ள நோயையோ அல்லது இதற்கு முன் எப்போது இரத்ததானம் செய்தார்கள் என்ற உண்மையையோ சரியாகச் சொல்வதில்லை. அதனால் அந்த இரத்தம் யாருடைய தேவைக்குப் பயன்படுகிறதோ, அவர் சில சமயங்களில் உயிரிழக்கவும் நேருகிறது.

''இரத்தம் தருவதால் உடல் வலிமை இழந்து விடுவோம் என்பது தவறான எண்ணம். தானமாக வழங்கப்பட்ட இரத்தம், 48 மணி நேர சாதாரண உணவின் மூலமே திரும்பப் பெறமுடியும்!.''

இந்த இரத்தச் சேமிப்பு நிலையத்தின் ஆறாவது ஆண்டு விழா, 11.2.82 அன்று சென்னை மியூசியம் கலை அரங்கில் நடந்தது. மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் ''மாணவர்களும், பெண்களும் இரத்த தானச் சேமிப்பு நிலையத்தோடு தங்களை இணைத்துக்கொண்டு, உயிரைக் காப்பாற்ற உதவும் இரத்தத்தைச் சேமிக்க முன்வர வேண்டும். இதுவரை சென்னையிலுள்ள முக்கிய மருத்துவமனைகளுக்கு 12,000 புட்டிகள் இரத்தத்தை வழங்கியுள்ள இந்நிலையத்தைப் பாராட்டுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

இரத்த தான சேமிப்பு நிலையத்தின் ஆறாவது ஆண்டு விழாவையொட்டி, அதிக அளவில் இரத்த நன்கொடையாளர்களை அனுப்பிய சென்னை கிண்டிப் பொறியியல் கல்லூரிக்குச் சுழற்கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது. சென்னை அசோக்லேலண்டு நிறுவனத்திற்கு டி. டி. ரங்கநாதன் கேடயமும், சிறந்த சேவைக்கான கேடயம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கும் வழங்கப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சியாளர் திருமதி சி.கே.கரியாலி அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

இவ்வாறு, ஆறு ஆண்டுகளைக் கடந்து அரிய பணியாற்றிவரும் இந்த இரத்தச் சேமிப்பு நிலையம், இன்னுயிர்களைக் காத்து இறவாப் புகழைப் பெற்று வருகின்றது என்றால், அது மிகையல்ல!



## மாணவர் பக்கம்

சாரண, சாரணிய இயக்கத்தில் பங்கு கொள்ள விரும்பும் ஏழை மாணவர்களுக்கு உதவும் பொருட்டு, அவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்குவதற்காக 1981-82ஆம் ஆண்டிற்குத் தமிழக அரசு கல்வித் துறைக்கு ரூ 5 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. வரும் ஆண்டுகளில் இவ்வுதவித் திட்டம் நீட்டிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

* * *

"பாம்பென்றால் படையும் நடுங்கும்" இது பழமொழி. ஏனெனில் பாம்பைப் பார்த்து நாம் பயப்பட வேண்டிய தேவையேயில்லை. ஆனால் அதன்விஷம் நம்மைத் தாக்கும்போது தான் நாம் அதைக் கண்டு பயப்பட வேண்டியதாயிருக்கிறது.

பாம்புகள் கொண்டுள்ள விஷமானது எப்பொழுதும் ஒரே அளவில் இருப்பதில்லை. ஒவ்வொரு பாம்பும் கொண்டுள்ள விஷமானது ஒவ்வொரு மாதமும் அதன் அளவில் மாறுகிறது. அதாவது ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அதிகமாகவும், நவம்பர், டிசம்பர் மாதங்களில் குறைந்தும் காணப்படுகிறது.

* * *

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் யானைகள், நாய்கள், பறவைகள், ஆடுகள், குதிரைகள் மற்றும் மான்கள் தங்கள் வீர சாகசச் செயல்களைச் செய்து காட்டின.

மருத்துவக் கல்லூரி சார்பில் முதன் முதலாக இந்தக் காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாய்கள் அதிக எண்ணிக்கையில் (சுமார் 125) கலந்து கொண்டன. காட்சியில் மொத்தம் 160க்கும் அதிகமான வனவிலங்குகள் கலந்து கொண்டன. காவல்

# செய்திச் சுடர்

துறை துப்பறியும் நாய்களும், ரயில்வேப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த நாய்களும் விசேஷ செயல்களைச் செய்து காட்டின.

ரயில்வே பாதுகாப்புப் படை நாய்கள் வழக்கமாகச் செய்யும் திருடர்களைப் பிடிக்கும் செயல்களோடு தீப்பந்து வளையத்திற்குள் குதிப்பது, வாய்களில் எரியும் குச்சியைக் கவ்விக் கொண்டிருப்பது போன்ற செயல்களைச் செய்து காட்டின.

வள்ளி என்ற யானை தனது சக யானையுடன் 'சிலம்பம் ஆடியது.

மிகப் பெரிய ராஜபாளையம் நாய் ஒன்று முதல் பரிசை வென்றது. வள்ளி என்ற யானைக்கு 2வது பரிசும், கிளி ஒன்று 3வது பரிசையும் பெற்றன. குரங்கு ஒன்று 4வது பரிசு பெற்றது. மற்றும் பல ஆறுதல் பரிசுகளும் கொடுக்கப்பட்டன.

* * *

இந்து மாக்கடலில் தண்ணீருக்கு அடியில் ஒரு மலை இருப்பதை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பனி மூடிய அண்டார்ட்டிக் கண்டத்திற்கு ஆராய்ச்சிக்காகச் சென்ற இந்தியக் குழுவினர் இந்த மாக் கடலில் இந்தப் புதிய மலை நீருக்கடியில் இருப்பதைக் கண்டனர்.

ஏற்கெனவே கண்டறியப்பட்ட ஆப் மலைக்கும், வீனா மலைக்கும் இடையே இப்புதிய மலை இருப்பதாக அவர்கள் கூறினர்.

* * *

சென்னை எழும்பூரிலுள்ள அருங்காட்சியகத்திற்கு (மியூசியத்துக்கு) அருகில் அமைக்கப்படவிருக்கும் சிறுவர்களுக்கான விஞ்ஞான அறிவியல் அருங்காட்சியகம் வெகு விரைவில் துவக்கப்படும்.

இது தவிர, ஐந்து கோடி ரூபாய் செலவில் சென்னையிலும், இரண்டு கோடி ரூபாய் செலவில் கோவையிலும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மையங்கள் துவக்க அரசு முடிவு செய்துள்ளது.

* * *

ரயில் ஓட்டுபவருக்கும் கண்ட்ரோல் அலுவலகத்திற்கும் ஒரு செய்தி தொடர்பு முறையை மத்திய ரயில்வே துறையினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். இது ஒரு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கண்ட்ரோல் அலுவலகத்திலிருந்து வேகக் கட்டுப்பாடு போன்ற தகவல்களை ரயில் ஓட்டுபவருக்குத் தெரிவிக்கவும், ரயிலை ஓட்டுபவருக்கு ஏற்படும் சிக்கல்களை கண்ட்ரோல் அலுவலகத்தில் தெரிந்துகொள்ளவும் இந்த முறை பயன்படும்.

ரயிலில் காலியாக உள்ள இருப்பிடங்கள், தேவைப்படும் உணவு போன்ற தகவல்களை ரயிலோட்டி உடனுக்குடன் கண்ட்ரோல் அலுவலகத்திற்குத் தெரிவிக்கலாம். ரயிலோட்டி கண்ட்ரோல் அலுவலகத்துடன் எந்நேரமும் தொடர்பில் இருக்க இது பயன்படும்.



# குழாய் - ஓர் அறிவியல் சாதனம்

குழாய் தினசரி நம் வாழ்க்கையில் காணும் ஓர் அறிவியல் சாதனம். திரவங்கள், வாயுக்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட ஒரு அமைப்புக்குள் கொண்டு வந்து அது வடிந்து வர ஒழுங்குபடுத்தும் உபகரணமே திருகு குழலும், குழாயும். ஒழுங்குபடுத்தும் தன்மையால் 'வால்வுகள்' எனவும் அவை அழைக்கப்படுகின்றன.

திருகு குழலில் ஒரு சொருகு சாதனமும் (Plug) குழாயின் அளவுள்ள துளையும் இருக்கும். குழாயும், துளையும் நேர் வரிசையில் வரும்படி சொருகு சாதனம் நிலைநிறுத்தப்படுகிறது. இப்பொழுது திரவம் அல்லது வாயு வடிந்து செல்ல வழி ஏற்படுகின்றது. இது திருகு குழல் திறந்திருக்கும் நிலை ஆகும்.

திரவம், அல்லது வாயு தேவைப்படாத நிலையில் சொருகு சாதனம் 90° யில் சுழல வேண்டும். அப்பொழுது அவை வடிந்து செல்லும் வழி அடைக்கப் படுகிறது. இது திருகு குழல் மூடப்பட்ட நிலை எனப்படும்.

குழாயில் தண்டுப்பகுதி எனப்படும் திருகுச்சுற்றில் கைப்பிடி ஒன்று உள்ளது. தண்டுப்பகுதியில் ஒரு திறப்பு உள்ளது. அத் திறப்பின் ஓரங்கள் வால்வுகளாக செயல்படுகின்றன. மாற்றி அமைத்துக் கொள்ளக்கூடிய தன்மை வாய்ந்த வில்லையுடன் கூடிய வால்வுத் தட்டும் தண்டுப் பகுதியில் உள்ளது. வால்வுத்தட்டு கீழிறக்கப்படும் போது வில்லை வால்வுடன் முழு உராய்வையும் ஏற்படுத்திக் கொள்கிறது. அப்பொழுது திரவம்-வாயு வடியும் வழி அடைக்கப்படுகிறது.

மீண்டும் குழாய் திறக்கப்பட கைப்பிடியைச் சுழற்றி வால்வுத் தட்டு உயர்த்தப்பட வேண்டும். தண்டுப்பகுதி வால்விலிருந்து திருகி விலக்கப்பட்டு திரவம் அல்லது வாயு வடிவதற்கான வழி சீராக்கப் படுகிறது.

சொருகு சாதனத்தை தேவைப்பட்ட அளவில் மாற்றியமைத்து குறிப்பிட்ட அளவு திரவம் - வாயு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

## குழாய் வேலை செய்யும் முறை




குழாயைத் திறத்தல், மூடுதல் ஆகியவற்றை வால்வுத் தட்டின், மேலும், கீழும் செல்லும் முயற்சி நிர்ணயிப்பதால் கைப் பிடியை சுற்றும் தன்மையின் மூலம் திரவம்- வாயுவடிவதைக் கட்டுப்புடுத்தலாம். நன்றி : விஞ்ஞானச் சுடர்

## தாயேனும் தெய்வம்!

தாயினை விஞ்சும் தெய்வங்கள் — இத்
தாரணி எங்கும் கிடையாது
கோயிலைப் போலே உடனிருந்து — அவள்
கொடுக்கும் அன்பில் குறைவேது !

பாசம் என்னும் மழையமுதை — கண்
பார்வை தன்னால் பொழிந்திடுவாள்
நேசம் கொண்டு வாழ்வதிலே — ஓர்
நிம்மதி தன்னை அடைந்திடுவாள் !

எறும்பு உன்னைக் கடித்தாலும் — தன்
இதயம் நோகப் பார்ப்பாளே
சிறந்தே நீயும் வாழ்ந்திடவே — தினம்
சிரமம் யாவும் ஏற்பாளே !

நாடு உந்தன் புகழ்பாட — பல
நல்வழி நூறு சொல்வாளே
மாடாய் உனக்கு உழைப்பதிலே — பெரும்
மலையாய் மகிழ்ச்சி கொள்வாளே !

—செங்கதிர்வாணன்

## நோபல் பரிசு

ஸ்வீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோம் நகரில் 1833-ஆம் ஆண்டு தோன்றிய ஆல்ஃப்ரெட் பெர்ன்ஹார்டு நோபல் (Alfred Bernhard Nobel) என்பார் தம் வாழ்நாளில் ஈட்டிய பெருந் தொகையான 17,50,000 பவுனை அறக்கொடையாக வைத்து அதன் வழிவரும் வட்டியைக்கொண்டு ஆண்டு தோறும் வேதியியல், பௌதிகவியல் மருத்துவம்—உடலியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் உலகில் தலையாய செயலாற்றிய பெரியவர்களுக்குப் பரிசுகள் தரக ஏற்பாடு செய்துள்ளார். இப்பரிசானது மொழி, இனம், ஆகிய அனைத்தையும் கடந்து அளிக்கப்பட்டு வருகிறது.

# குழந்தைகளுக்கு ஒரு பேரவை

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிட அவர்களை நாம் நல்லவர்களாக வல்லவர்களாகத் தயார்ப்படுத்தவேண்டும்.

மாணவ மணிகள் படிக்கும் போதே பல துறைகளில் திறமையுடையவர்களாக விளங்குகிறார்கள். பேச்சு, நடிப்பு, கதை சொல்லுதல், ஓவியம் வரைதல், நடனம், இசைக்கருவிகள் வாசித்தல், பாட்டு போன்ற பலவற்றில் அவர்கள் தம் திறமைகளை வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

கல்வியோடு கலைகள் பலவற்றில் சிறந்து விளங்கும் மாணவ மணிகளை வெளி உலகத்துக்கும் அறிமுகப்படுத்த வேண்டாமா? அதன் மூலம் அவர்கள் ஊக்கமும் ஆக்கமும் பெற்று நாளைய நற்குடி மகனாகச் சிறந்து விளங்க வேண்டாமா?

ஆம். அதன் விளைவாய் உருப்பெற்றதுதான் வானொலி சிறுவர் சங்கங்கள். அதன் தாயாக இருப்பதுதான் அவற்றின் பேரவை.

அறிவு வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் இருக்கும் சாதனங்களில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி முதலானவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் சென்னை வானொலியில் குழந்தைகளுக்காக-மாணவ மணிகளுக்காக 'மழலை அமுதம்' 'சிறுவர் சோலை' ஆகிய நிகழ்ச்சிகள் பெரிதும் துணைபுரிகின்றன.



கடந்த 19 ஆண்டுகளாக இயங்கிவரும் இந்த சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவையில் 85 சிறுவர் சங்கங்களும், 15,000க்கும் மேற்பட்ட தம்பி தங்கையரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

சென்னை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் சிறுவர் சிறுமியர் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுமாறு சிறந்த பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பேரவை, பொதுநல இயக்கங்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் நிதியுதவிக்காகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றது.

1961ஆம் ஆண்டு புயலால் பாதிக்கப்பட்ட திருச்சி-தஞ்சை மாவட்டத்திற்குக் கலை நிகழ்ச்சிகள் மூலம் திரட்டப்பட்ட தொகை 1001 ரூபாய் நன்கொடையாக வழங்கியது — 1962 ல் சீனப் பெரும்போர் நடந்தபோது பண்டித நேரு விடுத்த வேண்டுகோளின்படி கலை நிகழ்ச்சிகள் மூலம் திரட்டப்பட்ட தொகை ரூ.4000 வழங்கியது-மகிழ்ச்சிக்குரிய அரிய பணி அல்லவா?





தணிகை உலகநாதன்

இதுமட்டுமன்றி, ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள், ஆடைகள் வழங்குதல் போன்ற சமூகத் தொண்டுகளிலும் இந்தச் சங்கங்கள் ஈடுபடுவதை நாம் குறிப்பிட வேண்டும்.

பேரவையின் 19-ஆம் ஆண்டு விழா ஜனவரி 24ந் தேதி சிறப்பாக நடந்தது. பாரதியார் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

'வானொலி அண்ணா' திரு கூத்தபிரான், பேரவைத் தலைவர் திரு புலவர் தணிகை உலகநாதன் மற்றும் நிர்வாகக் குழுவினர்கள் பேரவை வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வருகின்றனர்.

சென்னை அடையாற்றில், அமைதியான இடத்தில் ஆக்கப்பூர்வமான பணிகளைச் செவ்வனே ஆற்றி வரும் சிறுவர் சங்கப் பேரவை, அடையாறு ஆலமரம்போல் தழைத்திட வாழ்த்து கூறுவோம்!

தமிழர் திருநாளான பொங்கல் நன்னாளில் பத்துப் புதிய இரகங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வேளாண் பெருமக்களுக்கு அளித்தது. அவை பற்றிய விவரம் வருமாறு :

1. பையூர். 1 நெல்—சன்ன இரகம்.
2. துவரை கோ. 4—மானாவாரிக்கும் இறவைக்கும் ஏற்ற இரகம்.
3. கோ. 4—பச்சைப்பயறு—மிகுந்த புரதச் சத்துடைய, அதிக மகசூல் தரவல்ல இரகம்.
4. டி. என். பி. 1 பருத்தி—மென்மையான இழையுடைய குறுகிய கால பார்படன்ஸ் இரகம்.
5. கோ. 2 குண்டுமிளகாய்—பச்சை மிளகாய்க்கும், வற்றலுக்கும் ஏற்றது.
6. கோ. 4—கலப்பின வெங்காயம்.
7. கோ. 3 சர்க்கரைவள்ளிக்கிழங்கு— கூன் வண்டு எதிர்ப்புத் திறன் உள்ள அதிக விளைச்சல் இரகம்.
8. கோ. 2 சாம்பல் பூசணி—வீட்டுத்தோட்டத்திற்கும், வியாபாரத்திற்கும் ஏற்றது.
9. கோ. 2 கொத்தமல்லி—கீரைக்கும் விதைக்கும் ஏற்ற இரகம்.
10. பி. கே. எம். 1 பீர்க்கங்காய்—அதிக விளைச்சல் தரும் இரகம்.

### பையூர்—1 நெல் சன்ன இரகம்

பையூர்—1 நெல் இரகம், ஐ. ஆர். 1721-14 மற்றும் ஐ. ஆர். 1330-3-3-2 இரகங்களின் இனச் சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. 115-120 செ. மீ. உயரம் உள்ள இந்த இரகம், 140 நாட்கள் வயதுடையது. இதன் கதிர்கள் மிக நெருக்கமான மணி அமைப்புக் கொண்டவை. அரிசி மிகச் சன்னமானது. இந்த இரகம் சம்பா பருவத்தில் (ஆகஸ்ட்-செப்டம்பர்) பயிர் செய்ய ஏற்றது. ஏக்கருக்கு 2360 கிலோ நெல் மகசூல் தருகிறது. தற்சமயம் சாகுபடியில் உள்ள பவானியைவிட 14 சதமும்




கிச்சடி இரகத்தைவிட 59 சதமும் அதிக மகசூல் தரவல்லது. ஏக்கருக்கு 3.6 டன் வைக்கோல் தருகிறது.

பையூர்-1 இரகம் தண்டு துளைப்பான், இலைப் புழு, இலைப்பேன், சுருட்டுப்புழு தாக்குதல்களைத் தாங்கக்கூடிய சக்தி பெற்றது. சிபாரிசுசெய்யப்படும் உரஅளவு ஏக்கருக்குத் தழைச்சத்து: மணிச்சத்து; சாம்பல்சத்து முறையே 40 : 20 : 20 ஆகும்.

ஆய்வாளர்கள் : ஜே. சந்திரமோகன்
எஸ். டி. பீட்டர்
எ. நாராயணன்
எம். சுரேஷ்

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்

உருவாக்கம் :
ஐ. ஆர். 1721-14 ஐ. ஆர். 1330-3-3-2

வயது (நாட்கள்) : 140

பருவம் :
சம்பா பட்டம் (புரட்டாசி மாத விதைப்பிற்கு)

மகசூல் (கிலோ-ஏக்) :

| | | |
|---|---|---|
| தானியம் | — | 2360 |
| வைக்கோல் | — | 3600 |

முக்கியத் தன்மைகள் :

தோட்டக்கால் பயிராகவும், வாய்க்கால் பாசனப் பயிராகவும் சாகுபடி செய்ய ஏற்றது.

அதிக தானியமும் வைக்கோல் மகசூலும் கொடுக்கக்கூடியது.

மிக சன்ன ரக அரிசி.

அதிக அறவைத்திறன்.

பூச்சி, நோய்தாக்குதல் குறைவு.

உழவியல் பரிந்துரைகள் :
உர அளவு (ஏக்கருக்கு)
தழைச்சத்து: மணிச்சத்து: சாம்பல்சத்து- 40 : 20 :20

இடைவெளி—20 செ. மீ × 10 செ. மீ.

ஆராய்ச்சி நிலையம் :
பிராந்திய ஆராய்ச்சி நிலையம், பையூர்.

## துவரை கோ. 4—மானாவாரிக்கும் இறவைக்கும் ஏற்ற இரகம்

புதிய கோ. 4 துவரை இரகம் தனித்தேர்வு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் செடிகள் பக்கக் கிளைகள் கொண்டு நேராக வளரும். எல்லாப் பருவங்களிலும் பயிரிட ஏற்றது. வயது 130 நாட்கள். மானாவாரியிலும், இறவையிலும் பயிரிடலாம். சராசரியாக ஏக்கருக்கு மானாவாரியில் 400 கிலோவும், இறவையில் 700 கிலோவும் மகசூல் தரவல்லது. இது கோ. 3 இரகத்தின் மகசூலைக் காட்டிலும் 24 சதம் மகசூல் தரவல்லது.




கோ. 4 துவரை இரகம் வாடல், வேரழுகல் மற்றும் மஞ்சள் தேமல் நோய்களால் பாதிக்கப்படுவதில்லை. மேலும் சாம்பல் நோயைத் தாங்க வல்லது. இதன் பயறுகள் இளஞ்சிவப்பு நிறமுடையவை. மற்றும் சிறந்த மணமும் சுவையும் உடையவை.

ஆய்வாளர்கள் : எம். வாமன்பட்
பி. சண்முகசுந்தரம்
வி. மயில்சாமி
பி. ரங்கசாமி
என். முகமதுஷரீப்
இரா. ச. அண்ணப்பன்
பி. வி. மாரப்பன்

துவரை கோ. 4—மானாவாரிக்கும் இறவைக்கும் ஏற்ற இரகம்

தோற்றம் :
தனித்தேர்வு முறையில் கண்டுபிடிக்கப்பட்டது.

வயது (நாட்கள்) : 130

பருவம் :
மானாவாரி—மே-ஜுன் (வைகாசி—ஆனி)
இறவை—பிப்ரவரி-மார்ச் (மாசி-பங்குனி)

மகசூல் (கிலோ-ஏக்) :

| | | |
|---|---|---|
| மானாவாரி | — | 400 |
| இறவை | — | 700 |

சிறப்புக் குணங்கள் :

கோ. 3 துவரையைவிட 24 சதம் அதிக மகசூல் தருகிறது.

இறவைக்கும், மானாவாரிக்கும் ஏற்றது.

வாடல்நோய், வேரழுகல்நோய், மஞ்சள் தேமல்நோய், மலட்டுநோய், சாம்பல்நோய் இவற்றால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

உழவியல் பரிந்துரைகள் :
இடைவெளி-30 செ. மீ. × 10 செ. மீ.
உர அளவு—10 த : 20 ம: இறவையில்
(கிலோ-ஏக்) 5 த : 10 ம : மானாவாரியில்.

ஆராய்ச்சிக்கூடம் :
மரபியல் மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.

## கோ. 4 பச்சைப் பயறு—மிகுந்த புரதச்சத்துடைய அதிக மகசூல் தரவல்ல இரகம்.

கோ-1 பச்சைப் பயறு இரகத்திலிருந்து காமா கதிரியக்க சடுதி மாற்றத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட புதிய இரகம் கோ-4. எல்லாப் பருவங்களிலும் பயிரிட ஏற்றது, குறிப்பாக மானாவாரியில் ஜூன்-ஜூலை மாதங்களிலும், இறவையில் பிப்ரவரி-மார்ச் மாதங்களிலும் பயிரிடலாம்.




மானாவாரியில் சராசரியாக ஏக்கருக்கு 360 கிலோவும், இறவையில் 620 கிலோவும் மகசூல் தரும். கோ. 3 இரகத்தைவிட 27 சதவீதம் அதிக மகசூல் தருகிறது. நெல் தரிசில் ஏக்கருக்கு 240 கிலோ கொடுக்கவல்லது.

கோ. 4 நேராக வளரும் தன்மையுடையது. வயது 85 நாட்கள். இந்தப் பயறு மிக்க மணமும், நல்ல நிறமும், சுவையும் ஒருங்கே அமையப் பெற்றது. கோ. 3 இரகத்தைக் காட்டிலும், புரதச்சத்து அதிகம் கொண்டது. (கோ. 4-ன் புரதச்சத்து 28.9 சதம். கோ. 3ன் புரதச்சத்து 26.1 சதம்). நுனிக்கருகல் நோய், சாம்பல் நோய், வேரழுகல் நோய், தேமல் நோய் இவற்றால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

இறவைப் பயிருக்கு ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்தும், 20 கிலோ மணிச்சத்தும், அந்த அளவுகளில் பாதி மானாவாரிப் பயிருக்கும் இட வேண்டும்.

**ஆய்வாளர்கள் : ஆர். ரவிச்சந்திரன்**
**யு. செல்வராஜ்**
**எஸ். மனமோகன்லால்**
**எஸ். கிருஷ்ணசாமி**
**ஆர். ரத்தினசாமி**
**இரா. ச. அண்ணப்பன்**
**பி. வி. மாரப்பன்**

கோ. 4—பச்சைப்பயறு—மிகுந்த புரதச்சத்துள்ள அதிக மகசூல் தரக்கூடிய இரகம்.

தோற்றம் :
காமா கதிரியக்க மாறுதல் மூலம் தோற்றுவிக்கப்பட்டது.

வயது : 85 நாள்.
பருவம் :
மானாவாரி—ஜூன்-ஜூலை (ஆடிப்பட்டம்)
அக்டோபர்-நவம்பர் (புரட்டாசிப் பட்டம்)
பாசனப்பயிர்—பிப்ரவரி-மார்ச் (மாசிப்பட்டம்)

மகசூல் (கிலோ-ஏக்) :
மானாவாரிப்பயிர் — 360
பாசனப் பயிர் — 620

சிறப்புக் குணங்கள் :
கோ. 3 இரகத்தை விட 27 சதவீதம் அதிக மகசூல் தருகிறது.

புரதச்சத்து நிறைந்தது (28.9 சதம்)

நுனிக்கருகல்நோய், சாம்பல்நோய், வேரழுகல் நோய், தேமல்நோய் இவற்றால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

வறட்சியைத் தாங்கவல்லது.

உழவியல் பரிந்துரைகள் :
இடைவெளி—30 செ. மீ. X 10 செ. மீ.
உர அளவு-ஏக்கருக்கு
இறவைப்பயிருக்கு : 10 கி. தழைச்சத்தும்
20 கி. மணிச்சத்தும்.
மானாவாரிப் பயிருக்கு-மேல்தரப்பட்டுள்ள அளவில் பாதி.

ஆராய்ச்சிக்கூடம் :
மரபியல் மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை.

**டி. என். பி. 1 பருத்தி—மென்மையான இழையுடைய குறுகிய கால பார்படன்ஸ் இரகம்.**

சென்ற சில ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை-பழனி பகுதியில் 'சுவின்' என்ற பார்படன்ஸ்இரகம்



பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் இது இதர இடங்களில் பரவாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் அதிகமான வயது, குறைவான மகசூல் மற்றும் அதிக செலவும் முக்கியமானவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்த குறைபாடுகளை நீக்க முயற்சித்து ஒரு புதிய பார்படன்ஸ் இரகத்தை வெளியிட்டுள்ளது.

டி. என். பி. 1 என்ற இந்த இரகம் சுவினைவிட ஏக்கருக்கு ஒரு குவிண்டால் பருத்தி அதிக விளைச்சல் தரவல்லது. மேலும் இதன் வயது சுவின் இரகத்தை விட 10-15 நாட்கள்குறைவானது. காய்கள் வெடிப்புத் தன்மை நல்ல முறையில் உள்ளது. அதனால் பருத்தி எடுப்பது எளிதாகும். சுவின் அரைவைத்திறன் 28 சதம். டி. என். பி.-1ன் அரைவைத் திறன் 32 சதம். எனவே பஞ்சு விளைச்சலை எடுத்துக்கொண்டால் இது சுவினை விட சிறந்தது. இதன் பஞ்சு 100 நெம்பர் நூல் நூற்க ஏற்றது.

**ஆய்வாளர்கள் :** **எம். கடம்பவனம்சுந்தரம்**
**எம். பகவன்தாஸ்**
**கி. ஏ. பழனிச்சாமி**
**எஸ். கமலநாதன்**
**எஸ். ஐயம்பெருமாள்.**

**டி. என். பி. 1 பருத்தி-மென்மையான இழையுடைய குறுமிய கால பார்படன்ஸ் இரகம்**

பிறப்பியல் .
கிசா. 7 X எஸ். பி. 1085-8

வயது (நாட்கள்)—170 முதல் 175

பருவம் : ஆகஸ்ட் முதல் மார்ச் மாதம் முடிய

பருத்தி மகசூல் (கிலோ-ஏக்) 500

பஞ்சு மகசூல் (கிலோ-ஏக்) 150

சிறப்பியல்புகள் :

சுவினை விட 10 முதல் 15 நாட்கள் குறைவான வயது.

அதிக அரைவைத்திறன் (31.8 சதம்)

சுவினைவிட ஐம்பது சதவீதம் அதிக பஞ்சு விளைச்சல்.
சுவினுக்குச் சமமான நூற்புத்திறன்

உழவியல் பரிந்துரைகள் :

இடைவெளி : பாருக்குப்பார் 90 செ. மீ. முதல் 105 செ. மீ. வரை.

செடிக்குச்செடி 40 செ. மீ. முதல் 45 செ. மீ. வரை.

உர அளவு : அடியுரம் (கிலோ-ஏக்) :
தழைச்சத்து : மணிச்சத்து: சாம்பல்சத்து
18 : 12 : 12

மேலுரம் (கிலோ-ஏக்) :
விதைத்த 8-வது வாரம் 9 கிலோ தழைச்சத்தும், 10-வது வாரம் 9 கிலோ தழைச்சத்தும் இடவும்.

ஆராய்ச்சி நிலையம் :
பருத்தி இனப்பெருக்க நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.

## கோ. 2 குண்டு மிளகாய்-பச்சை மிளகாய்க்கும், வற்றலுக்கும் ஏற்றது.

கோ. 2 எனும் புதிய குண்டு மிளகாய் ரகம், வகைத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வகை நடுத்தரமான குட்டையான உயரத்தில் குறைவாகப் படரும் தன்மையுடையது. இதன் பச்சைக் காய்களும், பழமும் பளபளப்பாக இருக்கும். எனவே காயாகவும் வற்றலாகவும் விற்கலாம். குண்டு மிளகாயில் வற்றல் பிரகாசமான சிகப்பு நிறத்துடனும் மிகுதியான விதையுடனும் (60 சதம்) இருக்கும். ஒரு ஏக்கரிலிருந்து 870 கிலோ வற்றல் மகசூலாகக் கிடைக்கும்.

இப்புதிய ரகத்தை ஆடி—தை சித்திரைப் பட்டங்களில் பயிரிடலாம். பார்களிலும், பாத்திகளிலும் ஓர் அடிக்கு ஓர் அடி இடைவெளியில் வரிசையாகப் பயிர் செய்யலாம். காரத்தன்மை (கேப்சசின் அளவு) காயில் 0.38 சதமாகவும், வற்றலில் 0.56 சதமாகவும் உள்ளது. இதன் வயது 210 நாட்கள்.




இப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 10 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல்சத்து தரும் உரங்களை இட்டு நல்ல மகசூல் பெறலாம்.

**ஆய்வாளர்கள் :** **பி. ரங்கசாமி**
**வி. அசோக்மேதா**

கோ. 2 குண்டு மிளகாய்—பச்சைமிளகாய்க்கும், வற்றலுக்கும் ஏற்றது.

உருவாக்கம் :

சி. ஏ. பி. 63 எனும் தேர்வு செய்யப்பட்ட இரகம்.

வயது—210 நாட்கள்

பருவம் :

ஜூன்-ஜூலை, செப்டம்பர்-அக்டோபர் மார்ச்-ஏப்ரல்.

மகசூல் (கிலோ-ஏக்கர்)
பச்சை 4350
வற்றல் 870

சிறப்பியல்புகள் :

நடுத்தர உயரமுள்ள படரும் தன்மை குறைவாகக்கொண்ட இரகம். பழங்கள் உருண்டை வடிவில் (குண்டு) அமைந்தது. அதிக அளவு விதையும், செந்நிறமும் கொண்டது ஆகும்.

உழவியல் பரிந்துரைகள் :

விதையளவு-400 கிராம். ஏக்கருக்கு
இடைவெளி-30 செ. மீ. X 30 செ. மீ. பாத்தி.
45 செ. மீ. X 30 செ. மீ. (பார்).

உரஅளவு :

அடியுரம்
10 டன் தொழுஉரம் 10 கிலோ மணிச்சத்து
18 கிலோ சாம்பல்சத்து

மேலுரம்: 20 கிலோ தழைச்சத்து மூன்று பிரிவாக சம அளவில் நட்ட 30, 60, 90-ஆம் நாளில் இடவும்.

ஆய்வு மையம் :

காய்கறிப் பிரிவு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.

## கோ. 4 கலப்பின வெங்காயம்

எச்.-863 வெங்காய ரகத்தையும் கோ. 3 வெங்காய ரகத்தையும் பண்பகக்கலப்பு செய்ததின்




கோ. 4 வெங்காயம்

மூலம் இந்த ரகம் கிடைத்துள்ளது. இந்தக் கலப்பின ரகத்தை ஆடி—தை, சித்திரைப்பட்டங்களில் பயிரிடலாம். இந்தக் கலப்பு வெங்காய ரகத்தைப் பயிரிட்டால் ஏக்கருக்கு 7630 கிலோ மகசூல் கிடைக்கும். இது கோ. 3 வெங்காய ரகத்தைக் காட்டிலும் ஏக்கருக்கு 25 சதம் அதிக மகசூல் கொடுக்கவல்லது. இதன் குமிழ்கள் கவர்ச்சியான இளஞ்சிகப்பு நிறத்துடன் காணப்படும். இதன் வயது 60-65 நாட்கள். நல்ல காற்றோட்ட வசதி கொண்ட அறைகளில் இதன் குமிழ்களை 150 நாட்கள் வரை கெடாமலும் முளைக்காமலும் பாதுகாக்கலாம்.

ஒரு ஏக்கரில் பயிரிடுவதற்கு 5.00 கிலோ விதை வெங்காயம் தேவைப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து, 24 கிலோ மணிச்சத்து, 12 கிலோ சாம்பல்சத்து தரும் உரங்களை இட்டு பயிரிட்டால், நல்ல மகசூல் கிடைக்கும். தழைச்சத்து தரும் உரத்தில் பாதியை அடியுரமாகவும், மீதி பாதியை நட்டு ஒரு மாதம் சென்ற பிறகும் போடுவது சிறந்தது.

**ஆய்வாளர்கள் : பி. வடிவேல்**
**கோ. ரா. முத்துகிருஷ்ணன்**

உருவாக்கம்
—ஏசி 863 கோ. 3 இரண்டு இரங்களின் கலப்பாகும்.

வயது
—60-65 நாட்கள்

பருவம்
—ஏப்ரல்-மே, செப்டம்பர்-அக்டோபர்

மகசூல்(கிலோ-ஏக்கர்)
—7630

சிறப்பியல்புகள்
—குறைந்த வயதில் நிறைந்த மகசூல் தரக்கூடியது. கோடை மற்றும் குளிர் பருவங்களுக்கு ஏற்றது.

—பல பயிர் சாகுபடி முறையில் ஊடுபயிராகப் பயிரிட ஏற்றது.

உழவியல் சிபாரிசுகள்-விதையளவு
—500-600 கிலோ-ஏக்கருக்கு (வெங்காயம்)
இடைவெளி
—10 செ.மீ. 45 செ.மீ. பாரின் இரு பக்கங்களிலும்.

உரஅளவு(கிலோ-ஏக்கர்)
—அடியுரம்
12 கிலோ தழைச்சத்து
24 கிலோ மணிச்சத்து
12 கிலோ சாம்பல்சத்து
—மேலுரம்
12 கிலோ தழைச்சத்து

ஆய்வுமையம்
—காய்கறிப்பிரிவு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை.

## கோ. 3 சர்க்கரை வள்ளிக்கிழங்கு-கூன்வண்டு எதிர்ப்புத்திறன் உள்ள அதிக விளைச்சல் இரகம்

கோ.3 சர்க்கரைவள்ளிக் கிழங்கு குறுகிய வயதில் மிகுதியான விளைச்சலைக் கொடுக்கவல்லது.

# அமோக விளைச்சலுக்கு





# உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :


மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001


VIJAY






சமச்சீர் உரமிட

## விஜய்

HTM-MFL-2528



கோ. 3 சர்க்கரைவள்ளி

இதன் கிழங்கில் கெரோட்டின் சத்து மிகுதியாக உள்ளது. இந்த ரகம் ஐபி 758 எனும் மூதாதை ரகத்திலிருந்து பயிர்ப்பாகவழி கன்று தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. முந்தைய ரகமான கோ. 2-ஐப்பயிரிட்டால் ஏக்கருக்கு 12 டன் கிழங்குகள் மட்டுமே மகசூலைக் கொடுக்கும்.

இந்த ரகத்தைத் தமிழ்நாடு முழுவதும் புரட்டாசி-ஐப்பசி, ஆனி-ஆடி பட்டங்களில் பயிரிடலாம். இதன் வயது 105-110 நாட்கள். இதன் வயது மற்ற ரகங்களைவிட 30, 40 நாட்கள் குறைவாக உள்ளது. இந்த ரகத்தை ஒரு ஏக்கரில் பயிரிட்டால் 16 டன் கிழங்குகள் கிடைக்கும். கிழங்கில் கெரோட்டின் சத்தும் (13.28 மி. கிராம்-100 கிராம் )மாவுச்சத்தும் (30.72 சதம்) மிகுதி.

இந்த ரகத்தை 60 செ.மீ. 20 செ.மீ. இடைவெளியில் பயிரிடலாம். ஒரு ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்து, 32 கிலோ மணிச்சத்து, 48 கிலோ சாம்பல்சத்து தரும் உரங்களை இட்டு நல்ல மகசூல் பெறலாம்.

**ஆய்வாளர்கள் : ந. இராமசாமி**
**கோ. ரா. முத்துகிருஷ்ணன்**

கோ. 3 சர்க்கரைவள்ளிக்கிழங்கு - கூன்வண்டு எதிர்ப்புத்திறன் உள்ள அதிக விளைச்சல் இரகம்

உருவாக்கம்—தேர்வுமுறை
வயது—105 - 110 நாட்கள்

பருவம்—செப்டம்பர்-அக்டோபர்
—ஜூன்-ஜூலை

மகசூல்(ஏக்கருக்கு)—16 டன்

சிறப்பியல்புகள்
—குறைந்த வயது, உயர்ந்த விளைச்சல். கூன் வண்டைச் சமாளிக்கக்கூடியது. அதிக 'ஏ' வைட்டமின் கொண்டது.

உழவியல் பரிந்துரைகள்
இடைவெளி 60 செ.மீ. 20 செ.மீ.(3000 நடவுக்கொடிகள் ஏக்கருக்கு)

உர அளவு (ஏக்கருக்கு)
—அடியுரம்
12 டன் தொழுஉரம்
8 கிலோ தழைச்சத்து
16 கிலோ மணிச்சத்து
24 கிலோ சாம்பல்சத்து

—மேலுரம்
8 கிலோ தழைச்சத்து
16 கிலோ மணிச்சத்து
24 கிலோ சாம்பல்சத்து

ஆய்வு மையம்
—காய்கறிப்பிரிவு, தோட்டக்கலைத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் கோவை. 3

## கோ. 2 சாம்பற் பூசணி-வீட்டுத் தோட்டத்திற்கும் வியாபாரத்திற்கும் ஏற்ற இரகம்

இந்த ரகம் வகைத்தேர்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ரகத்தை ஆடி-தைப்பட்டங்களில் தமிழ்நாடு முழுவதிலும் பயிரிடலாம். இதை ஒரு ஏக்கரில் பயிரிட்டால் 15.8 டன் மகசூல் கிடைக்கும். கோ. 1 ரகத்தைவிட ஏக்கருக்கு 4 டன் மகசூல் அதிகமாகக் கொடுக்கவல்லது. கோ. 2 ரகத்தின் வயது 120 நாட்கள். ஆனால் கோ. 1 ரகத்தின் வயதோ 150 நாட்கள். சிறியதான இதன் காய்கள் கவர்ச்சியான சாம்பல் நிறத்தில் காணப்



கோ. 2 பூசணி

படும். ஒரு காயின் சராசரி எடை 2.5 முதல் 3.00 கிலோ. இதை 2.5 மீட்டர்X2 மீட்டர் இடைவெளி யில் பயிரிடலாம். ஒரு ஏக்கரில் பயிரிடுவதற்கு 16 கிலோ தழைச்சத்து, 12 கிலோ மணிச்சத்து 24 கிலோ சாம்பல் சத்து தரும் உரங்கள் வேண்டும். தழைச்சத்தில் பாதியை அடியுரமாகவும், மறு பாதியை மேலுரமாகவும் விதைத்து 30 நாட்கள் கழித்து இட்டால் நல்ல மகசூல் கிடைக்கும்.

**ஆய்வாளர்கள்: சிவ. சுந்தரராஜன்**

**கோ. ரா. முத்துகிருஷ்ணன்**

கோ.2 சாம்பல்பூசணி

கோ. 2 வீட்டுத் தோட்டத்திற்கும் வியாபாரத் திற்கும் ஏற்றது

உருவாக்கம்

—தேர்வு செய்யப்பட்டது

வயது

—120 நாட்கள்

பருவம்

—ஜூன்-ஜூலை டிசம்பர்-ஜனவரி

மகசூல்(டன்-ஏக்கர்)

—16.8

சிறப்பியல்புகள்

—நடுத்தர அளவுள்ள (2.5 - 3 கிலோ) பூசணி. வீட்டுத்தோட்டத்திற்கும், வியா பாரத்திற்கும் ஏற்றது. கோ.1 சாம்பல் பூசணியைவிட அதிக மகசூல் அளிக்க வல்லது.

உழவியல் பரிந்துரைகள் (ஏக்கருக்கு-கிலோவில்)

—அடியுரம் 10 டன் தொழுஉரம் 8தழைச் சத்து. 12 மணிச்சத்து: 24 சாம்பல்சத்து

மேலுரம்

நட்ட 20வது நாளில் 8 கிலோ தழைச்சத்து

இடைவெளி

—2.5 மீட்டர்X2 மீட்டர்

செடிகள்

—1200 குழிகள்-ஏக்கருக்கு
குழி ஒன்றுக்கு 2 செடிகள்

ஆய்வு மையம்

—காய்கறிப் பிரிவு
தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம்
கோவை.3.

## கோ 2. கொத்தமல்லி-கீரைக்கும் விதைக்கும் ஏற்ற இரகம்

இந்த ரகம், குசராத் வகையிலிருந்து வகைத் தேர்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு ஏக்கரில் இந்த ரகத்தைப் பயிரிட்டால் 320 கிலோ மகசூல் கிடைக்கும். அதாவது கோ. 1 எனும் முந்தைய ரகத்தைக்காட்டிலும் 22.6 சதம் அதிக மகசூல் கொடுக்கும். இந்த ரகம் கொத்துமல்லி தழைக்க வும், விதைக்காகவும் பயிரிட ஏற்றது. இதன் வயது 120 நாட்கள். விதைத்த 25-30 நாட்களில் கீரை யாக (தழையாக) அறுவடை செய்யலாம். இதன் விதைகள் கோ. 1 எனும் ரகத்தைக்காட்டிலும் திடமாகவும் கனமாகவும் இருக்கும். இந்த ரகம் புரட்டாசி -ஐப்பசி மாதங்களில் பயிரிட ஏற்றது.

ஒரு ஏக்கரில் பயிரிட 4 கிலோ விதை அவசி யம். ஒரு ஏக்கருக்கு 4 கிலோ தழைச்சத்து, 18



கோ. 2 கொத்தமல்லி

கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல்சத்து தரும் உரங்களை இட்டு நல்ல மகசூல் பெறலாம்.

**ஆய்வாளர்கள்: எச். அகமதுஷா**

**ஆர். ஆறுமுகம்**

**எஸ். சயது**

**திருமதி சீமந்தினிராமதாஸ்**

## கோ. 2 கொத்தமல்லி கீரைக்கும் விதைக்கும் ஏற்ற இரகம்

உருவாக்கம்

—குசராத் மாநிலத்திலிருந்து தருவிக்கப்பட்ட பி.2 என்ற ரகத்திலிருந்து மறுதேர்வினால் உற்பத்தி செய்யப்பட்டது.

வயது

—115-120 நாட்கள் (விதைப்பயிர்)
35-40 நாட்கள் (கீரை)

பருவம்

—அக்டோபர்-நவம்பர் -ஜனவரி-பிப்ரவரி.

மகசூல்(கிலோ-ஏக்)—360

சிறப்பியல்புகள்

—கோ.1 கொத்தமல்லியை விட 22.6 சதம் அதிக மகசூல்

—மல்லியும் கோ. 1 மல்லியைவிட பெரியதாக தரமாக இருக்கும்.

உழவியல் பரிந்துரைகள்

—இடைவெளி-வரிசைக்கு வரிசை 22.5செ.மீ
வரிசையில்-15.செ.மீ.

உரமிடல்(ஏக்கருக்கு)அடிஉரம்

—தொழு உரம்—4 டன்
தழைச்சத்து—4 கிலோ
மணிச்சத்து—18 கிலோ



மேலுரம்

தழைச்சத்து—4 கிலோ

விதைத்த ஒரு மாதம் கழித்துப் போட வேண்டும்.

ஆய்வு நிலையம்

—மணமூட்டும் மற்றும் மலைசார்ந்த பயிர்த் துறை தோட்டக்கலைக் கல்லூரி தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் கோவை.

**பி.கே.எம். 1 பீர்க்கங்காய்-அதிக விளைச்சல் தரும் இரகம்**

பி.கே.எம். 1 பீர்க்கங்காய் இரகம் ஹைச். 60 எனும் வளர்ப்பு வகையைச் சடுதிமாற்றம் செய்த பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. ஆடி-தைப் பட்டங்களில் பயிரிட ஏற்றது. இந்த இரகம் 160 நாட்களில், ஒரு ஏக்கரிலிருந்து 11.2 டன் மகசூல் கொடுக்கவல்லது. இதன் காய்கள் அடர்த்தியான பச்சைநிறத்தில் காணப்படும். ஒரு காயின் சராசரி எடை 300 கிராம். இவ்வகையை 2.5 மீட்டர் 2 மீட்டர் எனும் இடைவெளியில் பயிரிடலாம். ஒரு ஏக்கரில் பயிரிட 16 கிலோ தழைச்சத்து, 12 கிலோ மணிச்சத்து, 24 கிலோ சாம்பல்சத்து தரும் உரங்கள் அவசியம். தழைச்சத்து தரும் உரத்தில் பாதியை அடியுரமாகவும், மறுபாதியை விதைத்த ஒரு மாதம் கழித்தும் இட்டால் நல்ல மகசூல்.



பெரியகுளம்.1 பீர்க்கன்

**ஆய்வாளர்கள்: உ. அஞ்சனம் அழகியபிள்ளை, செ. அன்பு**

பி.கே.எம். 1 பீர்க்கங்காய் - அதிகவிளைச்சல் தரும் இரகம்

உருவாக்கம்

—எச்.160 எனும் ரகத்திலிருந்து சடுதிமாற்றம் மூலம் பெறப்பட்டது.

வயது—160 நாட்கள்

பருவம்

—ஜூன்-ஜூலை, டிசம்பர்-ஜனவரி.

மகசூல் (டன்-ஏக்கர்)

—11.2

சிறப்பியல்புகள்

—அதிக மகசூல் தரும் வகை

—கரும்பச்சை நிறமுள்ள காய்கள்

—இரண்டு பருவத்திற்கும் ஏற்றது. சாம்பல் நோய், பூசணவண்டுகள், பழ ஈக்கள் போன்றவற்றின் எதிர்ப்புத்திறன் கொண்டது.

உழவியல் முறைகள்

—இடைவெளி-2.5 மீ X 2.9 மீ.

ஒரு ஏக்கரில் குழிக்கு 3 செடிகள் வீதம் 2400 செடிகள் அமையும்.

உரஅளவு அடியுரம்

—10டன் தொழுஉரம்-ஏக்கர் (12 கிலோ ஒரு குழிக்கு)

6ம் நம்பர் கலப்புரத்தில் (6:12:12) 100 கிராமை ஒரு குழிக்கு இடவேண்டும்.

மேலுரம்—

100 கிராம் அமோனியம் சல்பேட்டை(ஒரு குழிக்கு) நட்ட 30 நாட்களுக்குப் பின் இட வேண்டும்.

ஆய்வுமையம்

—தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் பெரியகுளம்.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Sir


பழமையும் புதுமையும்
இழைய இழைய
உங்களிடம்
அறிமுகமாகும்
கோ-ஆப்டெக்ஸ்
புதிய படைப்பு
அயோத்யா
பருத்திச் சேலைகள்.
திற்கு கிழக்கே அரூர் நெடுஞ்
யில் எட்டு கிலோ மீட்டர் தொலை
அமைந்துள்ளது அயோத்யாபட்டணம்.
வடிவமைப்பு பணி மையத்தில்
ாக்கப்பட்டு கோ-ஆப்டெக்ஸ் நுகர்
குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட
கள்.
படுத்தப்பட்ட எல்லா „கோ-ஆப்
விற்பனை நிலையங்களிலும்
தம்.
-ஆப்டெக்ஸ்
கைத்தறி